இது ஒரு புதினப் புதையல்

# குடும்ப நாவல்

1.12.17

ரூ. 15



# பாலகுமாரன்

## யானைப் பாலம் – புதிய நாவல்

# பாலகுமாரன்



# யானைப் பாலம்

இந்தக் கதை கற்பனையானது. சரித்திரத்தின் சாயல் சிறிதளவே உள்ளது. சோழப்படை கங்கையில் யானைப்பாலம் கட்டியது உண்மை என்பதற்குச் சான்றுகள் உண்டு.

அந்தப் பாலம் இந்தப் பாலத்தின் யுக்தியைக் கொண்டு கட்டியிருக்கலாம் என்பது என் கற்பனை.

அமண்குடியில் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டு இக்கதை எழுதப்பட்டது. அமண்குடி குடந்தைக்கு அருகே உள்ள கிராமம். சோழ சேனாதிபதி பிரம்மராயர் கிருஷ்ணன் இராமன் கட்டிய ஆயிரம் வருஷத்துக் கோவில். கோவில் பெயர் இராஜராஜேஸ்வரம். ஆனால் சிவன் கோவில் என்று சொன்னால் போதும்.

ஒருமுறை போய்ப் பாருங்கள். உங்களுக்கும் ஏதேனும் தரிசனம் கிடைக்கலாம். எனக்கேற்பட்ட தரிசனம் பிரம்மையல்ல, அது சத்தியம்.

கோவில் கம்பிக் கதவுகளுக்கு அருகே நிழலான இடத்தில் ஸ்ரீனிவாசன் சற்று அயர்ச்சியோடு அமர்ந்தான். என்னதான் காரில் பயணப்பட்டாலும், காரில் குளிர்சாதன வசதி இருந்தாலும் பயணப்படுவதின் அலுப்பு, குலுங்கல் உடம்பில் இருக்கத்தான்

செய்தது. வந்தவுடன் ஆசை தீரப் பார்க்கலாம் என்ற வேகம் சட்டென்று நின்று போனதால் உள் அலுப்பு அதிகமாயிற்று.

''இப்பதான் போனாங்க. இது வரைக்கும் இங்கதான் இருந்தாங்க. பத்து மணிக்குத் திறந்தாங்க, பூஜை முடிச்சாங்க, பதினோரு மணிக்கு அவசர வேலை இருக்குன்னு சொல்லி கிளம்பிட்டாங்க'' என்று அருகில் இருக்கின்ற மூன்று நான்கு பேர் ஒரே விஷயத்தை வெவ்வேறு விதமாகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

கேட்பது போலவும், கேட்காது போலவும் ஸ்ரீனிவாசன் அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் அயர்ந்திருக்கிறான் என்பதைத் தெரிந்து கொண்டு சிறிது நேரம் அவனைப் பார்த்து விட்டு வந்து பேசியவர்கள் நகர்ந்தார்கள்.

அது ஸ்ரீனிவாசனுக்குப் பிடித்த கோவில். அது ஸ்ரீனிவாசனுக்குப் பிடித்த ஊர். எதனால் பிடிக்கிறது என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியவில்லை. ஸ்ரீனிவாசனுக்கு மொத்த சோழ சாம்ராஜ்யமும் பிடிக்கும். பெரிய கோவிலைச் சுற்றிச் சுற்றி வருவது பேரானந்தம். கங்கை கொண்ட சோழபுரம் மனதைக் குழைய வைக்கும். அதுபோல சோழ தேசத்தின் பல கோவில்கள் தூண்களை கட்டித் தழுவிக் கொண்டும், கருவறை வாசற்படியில் கன்னம் வைத்தும் இங்கெல்லாம் மிகப் பெரிய மன்னர்கள் நின்றிருப்பார்களோ என்று ஆதங்கத்தோடு பார்ப்பது அவன் வழக்கம்.

சரித்திரப் பித்தானவர்களுக்கு நிகழ்காலம் முக்கியமாய் இராது. ஆனால் இந்த உச்சி வெய்யிலில் பசியான நேரத்தில் யாருமற்ற கோவில் வாசலில் நிகழ்காலத்தைப் பற்றி யோசிக்கத்தான் வேண்டியிருந்தது.

போகலாமா... கூடாது, தவறு. இவளைப் பார்க்க வந்து விட்டு, இவளுக்கென்று பூவும், பழமும், பன்னீரும், சந்தனமும், குங்குமமும், கஸ்தூரியும், அரகஜாவும், வாசனை சாந்தும், மஞ்சள் கிழங்கும், பட்டுப் புடவையும் வாங்கி வந்து விட்டு மறுபடியும் எடுத்துக்கொண்டு போகக் கூடாது. இவள் சோதிக்கிறாள். என்னமோ சொல்ல விரும்புகிறாள்.

அவன் கம்பிக் கதவின் மேல் சாய்ந்து கொண்டான்.

எப்படி இருக்கிறீர்கள் என்று மனசுக்குள்ளே இருக்கின்ற அவளைப் பார்த்து கேட்டான். அவள் மகிஷாசூரமர்த்தினி. அந்த கருவறைக்குள் அமைதியாக வீற்றிருந்தாள். சட்டென்று அந்தக் கருவறை தீபம் கொழுந்து விட்டு எரிந்தது. தூண்டி விட்டது போல எரிந்தது. அயர்ச்சி

அதிகமாக ஸ்ரீனிவாசன் ஒரு அரைதூக்கத்தில் ஆழ்ந்தான்.

மாதாண்ட நாயகர் இராஜேந்திரன் அவனை வரவேற்றார். புன்னகை செய்து தலையசைப்பில்தான் வரவேற்பு. அது அவனுக்கு மிகப் பெரிய மதிப்பு. உன்னை எனக்குத் தெரியும் என்பது அவர் குறிப்பு. இராஜேந்திரரையெல்லாம்கூட தெரிந்து வைத்திருக்கிறான் என்று உயர் படைத் தளபதிகள் அங்கே கொஞ்சம் வியப்பு காட்டினார்கள்.

ஓலைச்சுவடி கொண்டு வந்து சித்தப்பாவிடம் கொடுத்து விட்டு மன்னரை வணங்கியபோது நடந்தது இது. சித்தப்பா வேகமாக ஓலைகளைப் புரட்ட ஆரம்பித்தார். அது பஞ்சாங்கம். இந்த வருடம் மழை எப்படி இருக்கும் என்கிற குறிப்பு அதில் எழுதப்பட்டிருக்கும். சிறு தேரில் வரும்போதே இதை அவன் பிரித்துப் படித்து விட்டான். இந்த வருடம் மழை உண்டு. கடும் மழை உண்டு. கடலில் நாற்பது பங்கும், நிலத்தில் அறுபது பங்கும் பெய்யும். இது பேய் மழை என்று அர்த்தம்.

இது தவிர, கடகத்தில் ராகு நுழைகிறார். ராகு எதையும் அதிகமாகத் தரக்கூடியவர். இந்த முறை மழை அதிகமாக இருப்பதற்கு அறுபது சதவீதம் நிலத்தில் பெய்வதற்கு அவர் காரணம். அதுமட்டுமல்ல, நீச்சமாக இருந்த சுக்ரன் ஆட்சி பெறுகிறார். பரவலான மழை. தினந்தோறும் மழை நிச்சயம். படை நடக்க மழை எதிரி.

ஆனால் சோழ தேசம் போர் போர் என்று ஆரவாரித்துக் கொண்டிருக்கிறது. மாதாண்ட நாயகர் இராஜேந்திர சோழனுக்கு அது முக்கியம் என்று பட்டிருக்க வேண்டும். இராஜேந்திரருக்கு எடுத்துச் சொல்ல, இந்த விஷயத்தை விவரிக்க சேனாதிபதி கிருஷ்ணன் ராமன் அவனுடைய சித்தப்பா இந்த ஓலையை கேட்டிருக்க வேண்டும். அவன் சகலமும் புரிந்த நினைப்போடு பின்னடைந்தான். இரு தூண்களுக்கு இடையில் உள்ள கல் ஆசனத்தில் அமர்ந்து கொண்டான். அவனுக்கு முன்னே உப படைத் தளபதிகளும், அதற்கு முன்னே மந்திரி வரிசைகளும் இருந்தன. சேனாதிபதி கிருஷ்ணன் ராமன் முதல் இடத்தில் முதல் வரிசையில் கம்பீரமாக அமர்ந்திருந்தார்.

திரும்பத் திரும்ப ஓலைகளைப் புரட்டிக் கொண்டிருந்தார். திரும்பி அவனைப் பார்த்தார். அவன் எழுந்து நின்றான்.

''பார்த்தியோ.?''

''ஆமாம் சித்தப்பா.''

''என்ன ?''

''கடகத்தில் ராகு. அறுபது பங்கு நிலத்தில் இருக்கும்''

''ஓ.. பிறகு, ஒரு முக்கியமான விஷயம் இருக்கிறதே.''

''ஆமாம். சனியும் செவ்வாயும் விருச்சிகத்தை மூன்று நாட்கள் பார்க்கிறார்கள். அது அழிவு தரக்கூடிய மழை பெய்யும் காலம். எந்த மூன்று நாள் என்பது என்னால் கணிக்க முடியவில்லை.''

''அது அந்தரம் போட்டு பார்க்க வேண்டும். கணித்து விடலாம் கடினமில்லை. ஆனாலும் உன்னுடைய கணிப்பு சரியானது. நான் உறுதிபடுத்திக் கொள்ள உன்னைக் கேட்டேன்.''

அவர் பேச, அங்கிருந்த உபதளபதிகள் அவரையும், அவனையும் மாறி மாறிப் பார்த்தார்கள். ஒரு விஷயத்தை உறுதிபடுத்திக் கொள்ள தன்னுடைய அண்ணார் மகனை சோழ சேனாதிபதி கிருஷ்ணன் ராமன் கேட்கிறார் என்பதை அந்த உபதளபதிகள் புரிந்து கொண்டார்கள். அவரைப் பார்த்து சிநேகத்துடன் சிரித்தார்கள்.

ஒருவர் எட்டிப் பார்த்தார். அவன் பக்கம் திரும்பினார்.

''ஒருமுறை தம்பி என் வீட்டிற்கு வந்து என் ஜாதகம் பார்க்கணும்.'' என்று பணிவாகக் கேட்டார். ''

''நிச்சயம்'' என்று அவன் கை கூப்பினான்.

''கீழைச் சாளுக்கியம் பாதுகாப்பற்று இருக்கிறது என்பதால் மிரட்டுகிறான்'' ஒரு உபதளபதி உரத்த குரலில் பேச, இன்னொரு தளபதி எழுந்தார்.

''அதுமட்டுமல்ல. நம்முடைய மாப்பிள்ளை அதாவது நம்முடைய இராஜேந்திரருக்கு மாப்பிள்ளையாக வந்தவர் சற்று பலவீனமாக இருக்கிறார்.அதையும் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறான்.''

''அது காரணமில்லை தோழரே, மேலைச் சாளுக்கியம் எப்படியாவது கீழைச் சாளுக்கியத்துக்குள் புகுந்து விட வேண்டும் என்று ஆர்ப்பரிக்கிறது. கீழைச் சாளுக்கியத்தை கபளீகரம் செய்வதற்கு விமலாதித்தன் பலவீனன் என்பது காரணம் அல்ல. கீழைச் சாளுக்கியத்தில் மிகப் பெரிய பாதுகாப்பு இல்லை என்பது காரணம் அல்ல. அவர்கள் எப்ப்டியாவது கீழைச் சாளுக்கியத்தில் நுழைந்து அங்கு மணசம்பந்தம் ஏற்படுத்தி குந்தவைக்கு அப்பால் இன்னொரு திருமணத்தை விமாலாதித்தனுக்கு ஏற்படுத்தும் ரகளை செய்கிறார்கள்.

படையெடுப்பை விட அரசியல் ரீதியான ரகளையை அவர்கள் செய்வதற்கு ஆவலாக இருக்கிறார்கள். கீழைச் சாளுக்கிய தேசத்தை அழிப்தற்கு அவர்களுக்கு விருப்பம் இல்லை.''

''நான் அப்படி நினைக்கவில்லை. கீழைச் சாளுக்கிய தேசத்தை அழிக்காதவன் ஏன் ஒட்டதேசத்தை தூண்டி விடுகிறான்.''

''ஒட்டதேசத்தை யாரும் தூண்டிவிடவில்லை ஐய்யா.'' இன்னொருவர் எழுந்தார். சபை அவரை கவனித்தது.

''நீயும் நானும் சண்டை போட்டுக் கொள்கிறோம். நமக்குள் ஒருவர் தோற்பது உறுதி. அனேகமாக நீ தோற்பதாக வைத்துக் கொள்வோம். உனக்குப் பக்கத்தில் இருக்கிறவர் அந்த இடத்தை, உமது பதவியை, உனது துப்பட்டாவை, உமது தலைப்பாகையை, உமது உடைவாளை உருவிக் கொள்ள ஆசைப்படுவார் அல்லவா. மேலைச் சாளுக்கியத்திற்கும் கீழைச் சாளுக்கியத்திற்கும் சண்டை நடக்கும்போது உள்ளுக்குள்ளே புகுந்து கிடைத்ததைச் சுருட்டிக் கொள்ளலாம் என்பது ஒட்டதேசத்தின் ஆசை. கீழைச் சாளுக்கியத்தின் உள்ளே கூடக் கலவரங்கள் துவங்க ஆரம்பித்து விட்டன.''

''என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?''

மாதாண்ட நாயக்கர் இராஜேந்திரர் உரத்த குரலில் கேட்டார்.

''இராஜேந்திரராவது இவ்வளவு தொலைவு படை எடுத்து வருவதாவது என்று ஒரு அகங்காரத்தில் நினைக்கலாம்''

''எதனால் அப்படி நினைக்கிறார்கள்?''

''இப்பொழுதுதான் படை எடுத்து ஓய்ந்து இருக்கிறீர்கள். மிகப் பெரிய கோவிலை தந்தைக்கு இணையாகக் கட்டிக் கொண்டிருக்கிறீர்கள். இந்தக் கோவில் முக்கியமா, அல்லது உன் தேசம் முக்கியமா, அல்லது படையெடுப்பு முக்கியமா, உன் படைவீரர்கள் தாங்குவார்களா என்ற கணக்கெல்லாம் போட்டிருக்கிறார்கள்.''

''நீங்கள் சொல்வது எனக்கு உவப்பாக இருக்கிறது. இது சரியான விஷயம் என்று நான் நினைக்கிறேன். அவர்கள் தவறாக எடை போடுகிறார்கள். நான் வரமாட்டேன் என்று நினைக்கிறார்கள். அதனால் துள்ளுகிறார்கள்.''

மன்னர் பேச 'ஹா ஹா' என்கிற ஆரவாரம் பலர் வாயிலிருந்து எழுந்தது.

''என்ன செய்யலாம்?''

''அடித்து உதைக்கலாம். போய் மிதித்து விட்டு வரலாம். உருத்தெரியாமல் அழித்து விட்டு வரலாம்.'' விதம் விதமாகக் குரல்கள் எழுந்தன.

''வெற்றி நமக்கா?''

''இதென்ன கேள்வி. மூன்று லட்சம் படை வீரர்களோடு மேலைச் சாளுக்கியம் போனோம். அதிகம் சேதாரம் இல்லாமல் திரும்பி வந்தோம். அவர்களை வெற்றி கொண்டோம். அந்தப் படை வந்து சேர்ந்திருக்கிறது. வந்து ஒரு மாதம்தான் ஆகியிருக்கிறது. அவர்கள் அதை வைத்துதான் கணக்குப் போடுகிறார்கள்.

அந்த ஒரு மாதம் ஓய்வு எடுத்த படையை நாம் இங்கு இருக்கச் சொல்லிவிட்டு அல்லது பின்தொடரச் சொல்லிவிட்டு இங்கே வைத்திருந்தோமே மூலப்படை , மூன்று லட்சம் அதைக் கிளப்பிக் கொண்டு போக வேண்டும். சோழப் படை மட்டும்தானே கங்க தேசம் வழியாகப் போயிற்று. இப்போது நடு நாட்டுப் படையும், தொண்டை நாட்டுப் படையும், ஏன் பாண்டிய தேசம் வந்து சேர்ந்த படையும், சேரர்களுடைய வில்லாளிகள் ஆயிரவரும் நம்மிடம் இருக்கிறார்கள். கொங்கு தேசம் துணை கொடுக்கும்.

ஆக, நடுநாட்டையும், தொண்டை நாட்டையும் முன்னால் அனுப்பி ஒட்டர்களை அழிக்க வேண்டும். ஒரே கோடு. நம்மிலக்கு கீழைச் சாளுக்கியம் அல்ல. இடப்பக்கம் திரும்பி மேலைச் சாளுக்கியம் அல்ல. மேலைச் சாளுக்கியத்திற்கும் கீழைச் சாளுக்கியத்திற்கும் உண்டானது நெடுங்காலப் போர். பங்காளிச் சண்டை. கீழைச் சாளுக்கியத்தின் மீது உரிமை மேலை சாளுக்கியத்திற்கு இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. நாம் உள்ளே புகுந்ததால் மேலைச் சாளுக்கியம் விலகி இருக்கிறது. நாம் விலக்கி வைத்திருக்கிறோம். எனவே, நேர் கோடு போட்டது போல ஒட்டனை அடித்து நசுக்க வேண்டும்.''

''எப்போது கிளம்புகிறோம்?''

மாதாண்ட நாயக்கர் தளபதிகளைப் பார்த்து கேட்டார்.

''இப்போதே, இங்கே ஒரு நல்ல நாள் பார்த்ததும்''

''நல்ல நாள் யார் பார்ப்பது .?''

சகலரும் சேனாபதி கிருஷ்ணன் ராமனிடம் திரும்பினார்கள். கிருஷ்ணன் ராமன் அவர்கள் கூச்சலை கவனித்தவாறே ஓலைக் கட்டைப் பார்த்துக் கொண்டிருந்தார். மன்னர் திரும்பியதும் நூல் கயிற்றால் ஓலைச்சுவடிக் கட்டைக் கட்டிக் கட்டாக்கினார். திரும்பி நின்ற அவனிடம் கொடுத்தார். நான்கு அடி தள்ளி நின்றவன் அருகே போய் வாங்கிக் கொண்டு மறுபடி பின்னடைந்தான். அவரிடம் வேறு

ஓலை தயாராக இருந்தது. அது பலாபலன்கள் சொல்லும் ஓலை. அதுவும் ஒருவகை பஞ்சாங்கம்தான்.

''நாளை கரிநாள். நாளை மறுநாள் சுமாராக இருக்கிறது. அதற்கு அடுத்த நாள் நன்றாக இருக்கிறது. இரண்டு நாள் கழித்துப் புறப்படலாம். விடியற்காலை மூன்றாம் ஜாமத்தில் நாம் நகரலாம். வெளிச்சம் வந்தபிறகு சோழ தேசத்தில் உள்ள தெய்வங்களைக் கும்பிட்டு விட்டு நகரலாம்.''

சேனாபதி கிருஷ்ணன் ராமன் தன் கருத்தைத் தெரிவித்தார். இதே விஷயத்தை திருமந்திர ஓலையும், இன்னொரு மந்திரியும், வைத்தியரும் புரட்டிப் பார்த்தார்கள். கிருஷ்ணன் ராமன் சொன்னது சரி! அது நல்ல நாள் என்று சொன்னார்கள். பரிகாரம் உண்டா என்று கேட்டதற்கு, எதுவும் இல்லை தெற்கே சூலம். நாம் வடக்கே நகரலாம் என்றார்கள்.

''அப்படியானால் இன்றே பறையறிவித்து விடுங்கள். இன்றே படை தயார் செய்து விடுங்கள். இன்றே ஒரு ஒழுங்குக்கு வந்து விடுங்கள். சோழதேசம் போரில் இருக்கிறது என்று பொதுமக்களுக்குச் சொல்லி விடுங்கள். சூரியன் உச்சிக்கு வருவதற்கு முன்பு முரசுகள் முழங்கட்டும். யுத்தம் சொல்லட்டும்.''

மன்னர் கட்டளையிட, அவ்விதமே முரசுகள் முழங்கின. ஜனங்கள் ஆவலாக வந்து விஷயம் கேட்டுக் கொண்டு, ''''நசுக்கி நாசமாக்கி விட்டு வா'' என்று பெண்கள் உள்பட ஆரவாரம் செய்து கலைந்தார்கள்.

சோழ தேசத்தில் யுத்தம் என்பது ஒரு விளையாட்டாகப் போயிற்று. அந்த அலட்டல், ஆரவாரம் ஜனங்களுக்கு பிடித்திருந்தது. ஒட்டதேசம் ஒரு குத்து தாங்குமா என்றெல்லாம் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்படிப் போய் வந்தால் ஏதேனும் படை வீரர்கள் கொண்டு வருவார்கள். சோழ தேசத்தில் பணப் புழக்கமும், பாத்திரப் புழக்கமும், துணிப் புழக்கமும், உணவுப் புழக்கமும் அதிகமாக இருக்கும் என்பது அவர்களுக்குத் தெரியும். அதற்காகவும் அவர்கள் யுத்தத்திற்கு பரபரத்தார்கள்.

''ஒட்ட தேசம் போகிறீர்களா, இந்த முறை நல்ல தேக்கங்கட்டைகள் கொண்டு வாருங்களடா.'' யாரோ யாருக்கோ உத்தரவிட்டார்கள்.

''அங்கே சரவிளக்குகள் இருக்கும். கோவிலுக்கு ஆகும்.'' இன்னொருவர் குரல் கொடுத்தார்.

''ஒரு தொடை தடிமனான மீன்கள் உப்பிட்டுப் பானையில் பதப்படுத்தி வைக்கப்பட்டிருக்குமாம். பத்து பானைகள் பறித்துவா.''

''கரும்பு விளையும் தேசமடா. வெல்லம் கொண்டு வாருங்கள். வெல்லப் பானைகள் கொண்டு வாருங்கள். காடு தேசம். தேனும் கிடைக்கும்.''

யுத்தம் என்பது உயிர்ப் பலி மட்டும் அல்ல. பொருளாதார வளர்ச்சியும் கூட. யுத்தம் என்பது படையெடுத்து ஆக்ரமிப்பது மட்டுமல்ல, ஒரு இடத்துச் செல்வத்தை இன்னொரு இடத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தல். சோழ தேசம் பல்வேறு யுத்தங்களில் ஈடுபட்டுத் தன் தேசத்தை வளமாக்கியிருந்தது. அது ஜனங்களுக்குத் தெரிந்திருந்தது. யுத்தம் என்றதும் அவர்கள் போர் செய்ய ஆவலுற்றார்கள். கூடுதலாக ஆட்கள் சேர்ந்தார்கள்.

''அவன் நாம் அயர்ந்து போயிருக்கிறோம் என்று கணக்குப் போட்டிருக்கிறான்.இப்பொழுதுதானே மேலைச் சாளுக்கியத்திற்கு போய் அடித்து நொறுக்கி விட்டு வந்தோம். ஒரு மாதம் கூட ஆகவில்லையே. அதே வீரர்களை மறுபடியும் ஒட்டதேசம் நோக்கி அனுப்ப முடியாது என்று நினைக்கிறான். சோழ தேசத்தின் படை பலம் தெரியவில்லை.''

''தெரியாதது நல்லது. அந்த மூன்று லட்சம் பேரை சோழ தேசத்தில் இருக்க வைத்துவிட்டு அல்லது பின்தொடருங்கள் என்று சொல்லிவிட்டு இங்கிருக்கின்ற மூலப்படை நடுநாடு தொண்டை நாடு வழியாக நகர்ந்து போய் அந்த வீரர்களையும் சேர்த்துக் கொண்டால் மூன்று லட்சம் எளிதாகக் கிடைக்கும். சேர தேசத்து ஆயிரம் வில்லாளிகளும், பாண்டிய தேசத்து மறவர்களும் நம்மோடு போரில் சேர்ந்துக் கொள்ளக் கூடும். நம் கட்டளையை மீறாமல் பின் தொடரக் கூடும்.

எனவே, இத்தனை பேரும் கீழைச் சாளுக்கியம் தாண்டி ஒட்டதேசத்தில் இறங்கினால் ஒட்டதேசம் கூழாயிற்று. எங்கள் மருமகனை மிரட்டவா செய்கிறாய் என்று ஒவ்வொரு ஆணையும் பிரம்பால் அடிக்கலாம். எல்லாப் பெண்களையும் தலை அவிழ்த்துவிட்டு கைகூப்பி நிற்க வைக்கலாம். மீறினால் பிருஷ்டத்தில் போடலாம். சிறு குழந்தைகள் எதிர்த்தாலும் அடி நிச்சயம். சேர தேசத்துப் பெண்டுகளாலும், மேலைச் சாளுக்கியத்துப் பெண்டுகளாலும் வேளங்கள் நிறைந்திருக்கின்றன. இந்த கீழைச் சாளுக்கியத்து கோதுமை நிறத்துப் பெண்கள் குள்ளமாயும், சிறு

கண்களாயும் இருப்பார்கள். சுறுசுறுப்பாக இருப்பார்கள். அவர்களில் நூறு இருநூறு பேரை ஓட்டிக் கொண்டு வந்துவிட வேண்டும்.

சந்தோஷம் என்பது என்ன?. குடிப்பது, உண்பது, புணர்வது, உறங்குவது பிறகு மறுபடியும் குடிப்பது. இதுதானே! என்று வாய்விட்டுச் சிரித்தார்கள். அகங்காரம் என்பது மனிதருக்கு உடன் பிறந்தது. போர் வீரர்களுக்குக் கூடுதலான அகங்காரம். அடிபடாமல் ஜெயித்து வந்தவருக்கு அந்த அகங்காரம் தாறுமாறாய் எகிறி ஆடும். நாம் யுத்தத்திற்குப் போகிறோம். மக்கள் எல்லோரும் ஆவலாய் நம்மைப் பார்க்கிறார்கள் என்கிற போது, தானே சகலமும் என்கிற திமிரில் பேச்சும், செய்கையும் இருக்கும். சோழப்படை அப்படிப்பட்ட திமிரோடுதான் மெல்ல இரண்டு நாட்கள் கழித்து எல்லையைத் தாண்டியது.

''யுத்தம் பார்க்க வருகிறாயா?'' ஸ்ரீனிவாசனை சேனாபதி கிருஷ்ணன் ராமன் கேட்டார்.

''வருகிறேன் சித்தப்பா'' அவன் பணிவோடு கூறினான்.

''எதற்காக யுத்தம் பார்க்க விரும்புகிறாய்.?''

''மரணம் தெரிந்து கொள்ள சித்தப்பா''

''அடிசக்கை. யுத்தத்தில் மரணம் பற்றி யாரேனும் உனக்கு உபன்யாசம் செய்வார்களோ. ''

''இல்லை. இறந்தவர் கண்கள் பேசும். அவர் மூச்சு அடங்குவது தெரியும். அப்பொழுது இதே போல நான் மூச்சு அடங்கப் போகிறேன், என் கண்கள் பஞ்சணையும் என்று யோசிப்பேன். மற்றவர் மரணம் பார்க்கும் பொழுது என் மரணம் மிகப் பலமாக என் அருகே உட்கார்ந்து கொண்டிருக்கிறது.''

''இது இயல்பு. ஆனால் நல்ல செய்தி. சரியாகக் கவனிக்கிறாய் என்று அர்த்தம். ஆனாலும் வேறு ஏதேனும் காரணம் இருக்கிறதா என்று யோசித்துப் பார்.''

''நம்மால் பிரிவினை இல்லாது இருக்க முடியாது சித்தப்பா.''

''புரியவில்லை.''

''மனிதர்களுடைய இயல்பே பிரித்துக் கொண்டிருப்பது. நான்கு பேர் இருந்தால் இரண்டு இரண்டு பேராக மாறிவிடுவது. நாற்பது பேர் இருந்தால் அதில் எதிரும் புதிருமாக இருப்பது. எனக்கும் ஓட்டனுக்கும் என்ன வித்தியாசம். அதே வாழ்க்கை, அதே மதம், அதே வேதம், அதேவித குடும்பம், அதேவித பாசம், அதேவித பந்தம்,

அதேவித அழுகை, அதேவித அன்பு. ஆனால் அவனுக்கு நான் எதிரி. எனக்கு அவன் எதிரி என்று கோடு போட்டுக் கொண்டிருக்கிறோம். அதெப்படி கீழைச் சாளுக்கியத்தை மிரட்டலாம் என்று சொல்கிறோம். சாளுக்கியம் என்ற வார்த்தையை வைத்துக் கொண்டு நீயும் நானும் பங்காளிகள், சோழன் நமக்குப் பொது எதிரி என்று சொல்கிற மேலைச் சாளுக்கியத்தைப் பார்த்து சிரிப்புதான் வருகிறது.

மொழியால் மாறுபட்டிருக்கிறோம். மொழியால் மாறுபட அந்த இடத்துச் சூழ்நிலை காரணம். அந்த இடத்து ஆறும், மலையும், காடும், வயலும், வெளியும் காரணம். இந்த தேசத்து வயல்வெளி ஒரு மொழியை உருவாக்குகிறது. அந்த தேசத்துக் காடு இன்னொரு மொழியை உருவாக்குகிறது. என் தேசத்து ஆற்று நாகரீகம் இன்னொரு விஷயத்தை உருவாக்குகிறது. ஒட்டதேசம் வேறு ஒரு நாகரீகத்தில் இருக்கிறது. அதற்கு அதன் சூழ்நிலை காரணம். அவ்வளவே. இது எப்படிப் பிரிவினை ஆகும்.

அப்படிப் பார்த்தால் சோழ தேசத்திற்கும், வறண்ட பாண்டிய தேசத்திற்கும் பிரிவினை இருக்கிறது. பாண்டிய தேசத்தை எடுத்துக் கொண்டால் அவர்கள் ஐந்தாகப்பிரிந்திருக்கிறார்கள். சேர தேசம் இரண்டாக இருக்கிறது. தெற்கே ஒரு கேரளம், வடக்கே ஒரு கேரளம். வடக்கு கேரளம் தெற்கு கேரளத்தை மதிப்பதில்லை. தெற்கு கேரளம் வடக்கு கேரளத்தை குடிகாரார்கள் என்று சொல்கிறது. நடுவே ஒரு சிறிய பகுதி கொங்கு தேசம் என்று அழைக்கப்படுகிறது. அந்த கொங்கு தேசத்தின் நாகரீகமே வேறாக இருக்கிறது. அதன் வளர்ச்சியே வேறாக இருக்கிறது. அதன் குணமே வேறாக இருக்கிறது. அது சோழ தேசமும் இல்லை, பாண்டிய தேசமும் இல்லை. கீழைச் சாளுக்கியமும் இல்லை, மேலைச் சாளுக்கியமும் இல்லை, தனித்த தீவாக அது இயங்கி வருகிறது. அதற்குக் காரணம் அது பாறை தேசம்.''

''நன்றாகப் பேசுகிறாய். மிக நன்றாகப் பேசுகிறாய். உதாரணமாக பாறை தேசம் என்று சொன்னாயே. பாறை தேசத்தால் மொழி மாறுமா.? ஆச்சரியமாக இருக்கிறதே''

''மாறும். கீழேயிருந்து மேலே குரல் கொடுக்க வேண்டும். ஊ... என்று குரல் கொடுக்கிறான். அங்கிருந்து ஊ...என்று குரல் வருகிறது. இவன் எங்கே என்று கேட்கிறான். அவன் இங்கே என்கிறான். ஆக, அந்த சப்தத்தில் அவனுடைய உடம்பில் ஊ...என்ற சப்தம் அதிகமாக இருக்கிறது. மொழியில் ஊ..என்ற சப்தம் அதிகமாக இருக்கிறது. ஓ...ஊ.. அருகருகே இருக்கிறது. ஏனுங்கோ, எப்படிங்கோ என்று ஒரு

ஓங்கார சப்தத்தை அவன் தன்னுடைய மொழியிலே சேர்த்துவிட்டான். இது அவன் இருப்பிடம் காரணம்.''

''எனக்குப் பிறகு இந்த இடத்தை நீ நிரப்புகிறாயா?'' என்று சடக்கென்று ஆவலோடு சேனாதிபதி கிருஷ்ணன் ராமன் கேட்டார்.

''உங்கள் இடத்தையா. எதற்கு? ஏன் வம்பு. இந்த இடம் எனக்கு விருப்பமில்லை''

''பிறகு ?''

''நான் வடக்கே போக வேண்டும் என்று நினைக்கிறேன்.''

''எதற்கு ?''

''ஒட்டதேசம் தாண்டி இன்னும் வடக்கே போய் இமயமலை அடிவாரமும், இமயமலை உச்சியும், கைலாய பர்வதமும், கங்கையின் ஆரம்பமும் கண்டு வர வேண்டும்.''

''ஏன் ?''

''அதுதான் பரதகண்டம். வேதத்தில் சொல்கிற பரதகண்டம் அதுவே. பாரதவருஷம் அதுவே. தெற்கே இருக்கின்ற விஷயத்தைப் பற்றி அவர்கள் அதிகம் சொன்னதில்லை. புராணங்களும், இதிகாசங்களும் வடக்கே உள்ள நகரங்க்ளையும், நதிகளையும், கோவில்களையும் சொல்கின்றன. அங்கு இருக்கிற மகாபுருஷர்களைச் சொல்கின்றன. எனவே அந்த இடங்களை தரிசிக்க வேண்டும். பெரிய வனாந்திரமாகவும், பரதம் என்ற நாகரீகம் மிக்க கண்டத்தை வடக்கே உள்ள இடம் என்றும் வேதங்கள் சொல்கின்றன. உண்மையா என்று பார்க்க நான் போய்க்கொண்டிருக்கிறேன். திராவிடக் கலாசாரத்தை விடவா அவர்கள் உத்தமமாக இருக்கிறார்கள் என்ற கேள்வியோடு போகிறேன்.''

''அடேயப்பா. மிக உயர்ந்த இடத்தில் இருக்கிறாய். நான் கற்றுக் கொண்டதே என் தமையனாரிடம். உன் தகப்பானிரிடம். அவரிடம் தான் நான் பயின்று இன்று சேனாதிபதியாக இருக்கிறேன். அந்தணன் இடைவாள் சொருகலாமா என்று கேட்டதற்கு பல்வேறு காரணங்கள் சுட்டி என் இடுப்பிலே வாள் சொருகியவர் உன்னுடைய தகப்பானார். உன்னை அவர் வேறு விதமாக வளர்த்திருக்கிறார். நல்லது. யுத்தத்திற்கு வா பார்க்கலாம்.''

நடுநாட்டின் முரட்டு இளைஞர்கள் சோழ தேசத்து வீரர்களைக் கட்டிக் கொண்டார்கள். கரணம் அடித்துக் காட்டினார்கள். கொம்பு ஊன்றி உயரே நின்றார்கள். வேகமாக வாள் சுழற்றினார்கள். வாளின்

நுனியைத் தரையில் நிறுத்தி வணக்கம் செய்தார்கள். நல்ல விருந்து வைத்தார்கள். பாட்டுப் பாடினார்கள். பெண்கள் ஆட்டம் ஆடினார்கள். படை நகர்ந்து திருவான்மியூர் வழியாகத் தொண்டை நாட்டின் நடுப்பகுதியை அடைந்தது. கடற்கரை ஓரமுள்ள மாஞ்சோலைகளில் பாடி இறங்கியது. பார்த்தசாரதியை வணங்கியது.

இவன் கிருஷ்ணன் ராமனின் அண்ணார் மகன் என்று அவனை முன்னே தள்ளினார்கள். பார்த்தசாரதி கோவில் வாசலில் கருவறை விளிம்பில் நிற்க வைத்து பரிவட்டம் கட்டி சடாரி சார்த்தி, தீர்த்த பிரசாதம் கொடுத்து, கழுத்தில் மாலையிட்டு ஜெயவிஜயீ பவ என்று வாழ்த்தினார்கள். சோழ தேசத்தில் வைணவர்களுக்கு ஏதும் தொந்தரவு இல்லையே என்று விசாரித்தார்கள்.

''சிறிதளவு தொந்தரவும் இல்லை. சோழ தேசத்து சைவர்கள் வைணவர்களை விரும்புகிறார்கள். வைணவர்கள் சோழ தேசத்து சைவ அதிகாரிகளை நமஸ்கரிக்கிறார்கள். நீ உன் மொழி, நான் என் மொழி என்று இரண்டு பேரும் இணக்கமாகவே இருக்கிறோம்.''

''பௌத்தர்கள்?''

''அதிகம் இல்லை''

''சமணர்கள் ?''

''சில பேர் உண்டு.''

''வேறு யார் இருக்கிறார்கள்.?''

''சாக்தர்கள்.''

நிதானமாக அவன் பதில் சொன்னான்.

''சாக்தர்களா அப்படி ஒரு குழு இருக்கிறதா.?''

''ஆமாம். சிவன் அல்லாத சக்தியை வழிபடுதல் என்பதும், மந்திர தந்திரங்களில் ஈடுபடுவதும், அதர்வண வேதத்தைப் பின்பற்றுவதுமாக ஒரு குழு உருவாகியிருக்கிறது. அவர்கள் உன்மத்த நிலையில் சிலசமயம் நல்லது சொல்கிறார்கள். ''

''சாக்தத்தை அரசு ஆதரிக்கிறதா?''

''இல்லை. எதிர்க்கவில்லை. அதுபோதாதா'' என்று அவன் சொல்ல, அவர்கள் தலையசைத்தார்கள்.

''வைணவம் மட்டுமே இருக்கின்ற ஒரு தேசம் எப்போது வரும்'' என்று ஒருவர் சொல்ல, அவன் திரும்பி அவரைப் பார்த்தான்.

''அப்படி கேட்கக் கூடாது. அப்படி கேட்டு வந்தால் வைணவத்தை அழிப்பதற்கு அதுவே காரணமாகிவிடும். எல்லோரும் இருக்கும்

இடத்தில் நீங்களும் இருக்க, உங்களை யாரும் ஒன்றும் செய்ய மாட்டார்கள். நீங்கள் மட்டுமே இருக்க வேண்டும் என்றால் உங்களை எதிர்க்கப் பலபேர் ஒன்றாகத் திரள்வார்கள். கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். கும்பலோடு கும்பலாக மற்றவரையும் வாழவிட்டு நாமும் வாழ்வதுதான் சிறந்தது. நாம் மட்டுமே வாழ வேண்டும் என்று நினைத்தால் அது அழிவுக்கான நினைவு.''

அவன் பேச அந்த முதிய வைஷ்ணவரின் முகம் இருண்டது.

சோழப்படை ஆரவாரமாய் கீழைச் சாளுக்கியம் நோக்கி நகர்ந்தது. வட பெண்ணை ஆறு கடந்தது. இடுப்பளவு ஆழத்தில் நடந்தும், நீந்தியும், யானை மீது அமர்ந்தும், குதிரை மீது சவாரி செய்தும், மாட்டு வண்டிகளைக் கை கொடுத்து இழுத்தும் வடக்கு பக்கம் கரையேறினார்கள்.

கீழைச் சாளுக்கியம் வரவேற்றது. சோழ தேசத்துப் பெண்கள் சாதாரணமாக கண்களைப் பார்த்துப் பேசுவார்கள். நடுநாட்டுப் பெண்கள் பேச விரும்ப மாட்டார்கள். தொண்டை நாட்டுப் பெண்கள் மெல்லிய குரலில் சற்றுத் தள்ளி எதன் மறைவிலோ நின்று பேசுவார்கள். ஆனால் கீழைச் சாளுக்கிய பெண்கள் வாருங்கள் வாருங்கள் என்று கை கொட்டி வரவேற்பார்கள். கண்ணோடு கண் பார்த்து பேசுவார்கள். உரக்கச் சிரிப்பார்கள். கொஞ்சம் கூடுதலாகப் பேசினாலும் சகித்துக் கொள்வார்கள்.

ஆஹா.. போன முறைக்கு இந்த முறை தளர்ந்திருக்கிறதே. நிறைய உழைக்கிறாயோ என்று அவனுக்குத் தெரிந்த பெண்ணிடம் மார்பு பார்த்து ஒரு சேனாபதி சொல்ல, அவள் அதைப் புரிந்து கொண்டாள்.

உழைக்காமல் இருக்க விட்டு விடுவார்களா: உழைக்க வலுக்காட்டாயமாக முயற்சிப்பார்கள் அல்லவா. உழைத்துத்தானே ஆகவேண்டும் என்று அவள் சொல்ல, அவள் புரிந்து கொண்டு பேசுகிறாள் என்று கூட்டம் ஓ...என்று சிரித்தது.

ஆனால் நஷ்டம் உனக்குத்தானே என்று அந்த சேனாபதி விட்டுக் கொடுக்காமல் பேசினான்.

நஷ்டம் இரண்டு பக்கமும். ஒரு யுத்தம் என்று வந்தால் சேதாரம் இரண்டு பக்கமாகவும் இருக்கும். ஒரு சேதாரம் கண்ணுக்கு தெரியாது. ஒரு சேதாரம் கண்ணுக்குத் தெரியும். முன்பெல்லாம் பின் கை கட்டி கம்பீரமாகப் பேசுவாய். இப்பொழுது ஈட்டியை ஊனிக் கொண்டு பேசுகிறாய். அடுத்த முறை வரும்பொழுது கொஞ்சம் முதுகு குனிந்துதான் இருக்கும். வேறு வழியில்லை என்று சொல்ல, அதற்கும்

கூட்டம் பெரிதாய் சிரித்தது. வாயாடியவன் அமைதியானான்.

நெல்வயல்கள், மூங்கில் காடுகள், வேப்பங்காடுகள், தேக்கங்காடுகள் அடர்ந்த வனப்பகுதி. இன்னதுதான் விளைகிறது என்றில்லாமல் அத்தனையும் இருக்கின்ற பகுதி. புலிகளின் உருமல், சிங்கத்தின் ஓட்டம் பலதும் உணர முடிந்தது. அப்படி யானைக் கூட்டத்தை சரமாரியாகக் கல் அடித்து வேறு பக்கம் வீரர்கள் விரட்டினார்கள். அந்த யானைக் கூட்டத்தை விரட்டிய பிறகே தாங்கள் கொண்டு வந்த யானைகளை நடத்திக் கொண்டு போனார்கள். காட்டு யானைகளைப் பார்த்து பழக்கப்பட்ட யானைகளுக்குப் பழைய ஞாபகம் வந்து சண்டித்தனம் செய்தாலும் செய்யும். எனவே, காட்டு யானைகளைக் கண்ணில் காட்டாது சப்தமிட்டு விரட்டினார்கள். பறையடித்துத் துரத்தினார்கள். ஒரு சில யானைகள் மீது நெருப்பு பந்தங்களும் வீசப்பட்டன.

ஊருக்குள் படை இருந்தால் ஊர் அதோகதி அடையும் என்று புரிந்து கீழைச் சாளுக்கியத்து ஊர்களை சேதப்படுத்தாது அவர்கள் பரந்த வெளியில் தங்கினார்கள். கூடாரங்களை ஏற்படுத்தினார்கள். மிக அகலமான கூடாரங்களை அரை நாழிகையில் ஏற்பாடு செய்தார்கள். உள்ளுக்குள்ளே கட்டிலும், பல்வேறு வித மரஆசனங்களையும் வைத்தார்கள். இழைத்துச் செய்யப்பட்ட பெரிய எருமைத்தோல் பரப்பப்பட்டது. அதில் கீழைச் சாளுக்கியம், ஒட்டதேசம் வரைபடங்கள் இருந்தன. மலையும், ஆறும் காட்டப்பட்டிருந்தன. வனாந்திரங்கள் குறிக்கப்பட்டிருந்தன. பட்டிணங்கள் எழுதப்பட்டிருந்தன. கிராமங்கள் சிறு புள்ளிகளாக இருந்தன. பல பெயர்களை உபதளபதிகள் தெளிவாகச் சொன்னார்கள். அனைவரும் வரைபடத்தை உற்றுப் பார்த்தார்கள்.

''என்ன செய்யப் போகிறோம்.?''

மாதாண்ட நாயகர் இராஜேந்திரர் கேட்டார்.

''செய்வதற்கு ஒன்றுமேயில்லை. கோடு கிழித்தால் போதாது. வடக்கே இருக்கின்ற வடக்கு ஒட்டதேசம் வரை போரிட வேண்டியதுதான்.''

''கிழக்கும் வடக்கும் பிரிந்தா இருக்கின்றன.?''

''மூன்று நான்கு பிரிவுகள் இருக்கின்றன. மூன்று, நான்கு சிற்றரசர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் தலைவன் என்று ஒருவன் சொல்லிக் கொண்டிருக்கிறான். அவன் ஒன்றும் தலைவனில்லை. இவர்கள் அடங்க மாட்டார்கள். எனவே நாம்

இவர்களைத் தனித்தனியாகச் சந்திக்க வேண்டும். கோடு போட்டது போல போக வேண்டும்.''

''எதிர்ப்பு வருமா.?''

'' நிச்சயம் வரும். ''

''எந்த இடத்தில்?''

''எல்லா இடங்களிலும் சிறு சிறு கலகங்கள் எழும். ஆனால் என்னுடைய அபிப்ராயப்படி அவைகூட இருக்காது. நம்முடைய படை பலத்தைப் பார்த்துவிட்டு அவர்கள் பின்னடைவார்கள். அந்தச் சிற்றரசர்கள் வந்து உங்களிடம் மன்னிப்பு கேட்பார்கள்.''

''வேறு எப்படி இருக்கும் நம் படையெடுப்பு?''

''அடர்த்தியாய் பத்து பத்து பேராய் ஒரு வரிசைக்கு பத்து பேராய் உருவிய வாளோடு ஈட்டியோடு உள்ளே நுழைய வேண்டியது. ஒரு யானையின் துதிக்கை நீண்டு துவண்டு அலைவது போல எல்லா இடங்களிலும் மிரட்டி வைக்கவேண்டியது.''

'' வீடுகளை எரிக்கப் போகிறோமா.?''

ஒரு உபதளபதி கேட்டார்.

மாதாண்ட நாயகர் இராஜேந்திரர் முகவாயை தடவிக் கொண்டார்.

''வேண்டாம். அதுவல்ல நோக்கம்.அந்த அரசன் அடிபணிந்தால் போதுமானது. அந்த அரசன் முட்டாள் என்று இந்த ஜனங்களுக்குச் சொன்னால் போதும். ஜனங்களைத் துன்புறுத்த வேண்டாம்.''

''நல்லது. ஆடு மாடுகள்?''

''இல்லை. சோழ தேசத்தில் ஏகப்பட்ட ஆடு மாடுகள் இருக்கின்றன. அவைகளைப் பராமரிக்க முடியாமல் நமது நெல்வயல்களில் மேய்கின்றன. அதைத் தடுக்கவே பெரிய பிரயத்தனம் வேண்டியிருக்கிறது. பசித்த ஆடுகள் வேறு எங்கு மேயும். வயலுக்குத்தான் வரும். எனவே ஆடு மாடுகள் வேண்டாம்.''

''பெண்டீர் ? ''

முகம் மறைத்துக் கொண்டு ஒரு குரல் எழுந்தது.

''வேண்டாம். வேளங்கள் நிரம்பியிருக்கின்றன. இந்த பெண்டீர் ஒன்றும் விசேஷமாக இல்லை. மேலும் அவர்களை கதறக் கதற இழுத்து வருவது எனக்குப் பிடிக்கவில்லை. இந்த மன்னர்களைப் பிரம்பால் அடித்தால் போதும். தளபதி என்றும் மந்திரி என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறவனை கை, கால் கட்டி மீசை மழித்து விட்டால் போதும். பயமுறுத்தினால் போதும். நசுக்க வேண்டாம்.

யாரையும் தேவையற்றுத் துன்புறுத்த வேண்டாம். ஆனால் கடுமையாக பயமுறுத்துங்கள். ''

''எப்படி?''

''ஒரு குழந்தையை எடுத்து மடியில் வைத்து கத்தியை அந்தக் குழந்தையின் கழுத்திலே வைத்துவிடுங்கள். பணியவில்லை என்றால் அறுத்துவிடுவேன் என்று சொல்லுங்கள். ஏன் கீழைச் சாளுக்கியத்தோடு சண்டை போடுகிறீர்கள் என்று கேளுங்கள். போட மாட்டோம் என்று சொன்னால் குழந்தையை விட்டுவிடுங்கள். போடுவேன் என்று சொன்னால் அப்பொழுதும் விட்டுவிடுங்கள். குழந்தையை விட்டுவிட்டு எவன் போடுவேன் என்று சொன்னானோ அவனைப் பிடித்துக் கொள்ளுங்கள்.''

சித்தப்பா கிருஷ்ணன் ராமன் எளிதாய் வாய்விட்டு சிரித்தார்.

''இராஜேந்திரா, உன்னைப் போல ஒரு தந்திரசாலி மன்னனை என் வாழ்நாளில் நான் கண்டதேயில்லை. உன் தந்தை மிகத் தந்திரசாலி என்று என்னுடைய மனதிலே நின்றவர். அவரையெல்லாம் மிஞ்சிவிட்டாய்.''

''என்ன, அப்படி என்ன சொல்லிவிட்டேன். ''

''குழந்தையை விட்டுவிடு, தகப்பனை அடி என்றாயே, இதைவிட அற்புதம் வேறு என்ன உண்டு. குழந்தைக்கு எதிரே தகப்பன் அடிவாங்கினால் அந்த வீடு குலைந்து கீழே விழும். ஆனால் தகப்பனை வரவழைக்கக் குழந்தையைக் கத்தி வைப்பது அவசியம். சரியான ஒரு நடவடிக்கை''

''கடைசியாக கேட்கிறேன். வேறு எந்த இடைஞ்சலும் வராதா?''

''வராது வராது வராது.'' பல குரல்கள் எழுந்தன.

''சேனாபதி கிருஷ்ணன் ராமன் இதுவரை இந்த விஷயம் பற்றி வாய் திறக்கவேயில்லை. ஏன், இராஜேந்திர சோழனுக்கு முன்னால் சப்தம் போட ஆள் இருக்கிறார்கள் நாம் எதற்கு என்று அமைதியாக இருக்கிறீர்களா, அல்லது இடைஞ்சல் வரும் என்று சொல்ல நினைக்கிறீர்களா?'' மாதாண்ட நாயகர் கேட்டார்.

''இடைஞ்சல் வரும்''

''அதுதான் மௌனமாக இருந்தீரோ?''

''வருமா வராதா என்று ஒரு சந்தேகம், என்னால் நிவர்த்தி செய்து கொள்ள முடியவில்லை. அதனால் மௌனமாக இருந்தேன். நிச்சயம் வரும் என்று தெரிந்தால் முதலிலேயே பேசியிருப்பேன். மன்னரிடம்

மறைப்பதற்கு எனக்கு ஒன்றும் இல்லை''

''என்ன வருமா வராதா என்ற இடைஞ்சல்?''

''மகாநதி''

''ஆமாம். இங்கே போகிறது. நல்ல அகலம். பிறகு கீழே இறங்கி ஐந்து ஆறு பிரிவுகளாகப் போகிறது. நாம் படையெடுப்பை இப்படி வைத்துக் கொண்டால் ஆறு நதிகளைத் தாண்டியாக வேண்டும். இந்தப் பக்கம் போனால் நதியை ஒருமுறை தாண்டினால் போதும். ஆக, உள்ளடங்கி மகாநதியை தாண்டுவதுதானே சிறப்பு.''

''உள்ளடங்கி மகாநதியை அடைந்துவிடலாம். தாண்டுவது என்பது எங்ஙனம்.''

''ஏன்?''

''மகாநதிக்கு இதுவரை யாரும் பாலம் கட்டவில்லை.''

''ஏன் நாம் கட்டலாம்''

''இல்லை''

''என்ன சொல்கிறீர்கள்?''

''மகாநதிக்கு நம்மால் பாலம் கட்ட முடியாது. ''

''எதனால் சொல்கிறீர்கள்.?''

''நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். நல்ல மழைநாளில் கிளம்பி வந்துவிட்டோம். தென்கிழக்கு பருவமழை உயர்ந்த வேகத்தில் இருக்கிறது.அதாவது இந்த நதியினுடைய உற்பத்தி ஸ்தானத்தில் சின்னஞ் சிறிய மலைக் குன்றுகளில் பெரும் மழை பெய்து அந்தக் குன்றுகளில் இருந்த மழை நீர் ஒன்றாகக் கலந்து மகாநதி என்று பெயரிட்டிருக்கிறது.''

''ஏன் அப்படிப் பெயரிட்டிருக்கிறார்கள்?''

''நதியில் மகத்தானது.''

''எந்த விதத்தில் மகத்தானது.?''

''பொங்கிப் புரண்டு ஓடிவருவது. ஆழம் மிக்கது. வேகம் மிக்கது. அதனால் இது மகாநதி.''

''என்ன சொல்ல வருகிறீர்கள்.?''

கொஞ்சம் எரிச்சலான குரலில் இராஜேந்திரர் பேசினார்.

''மகாநதியை கடப்பது கடினம் என்கிறேன். மகாநதியைக் கடக்காமல் கோடு போட்டது போல வடக்கு ஒட்ட தேசத்திற்கு போவது என்பது முடியாத காரியம்''

''நீந்தி கரையேற முடியாதா?'' ஒரு தளபதி கேட்டான்;. அவன் நீச்சலில் வல்லவன் போலிருக்கிறது.

''பத்து பேர் இறங்கினால் மூன்று பேர் கரையேறுவீர்கள். ஏழு பேர் இறந்து போவீர்கள்''

''இதென்ன கணக்கு''

இராஜேந்திரர் மறுபடியும் ஆவேசப்பட்டார்.

''ஒரு உத்தேசக் கணக்கு. அவ்வளவு வேகமாக நதி இருக்கும் என்று நான் நினைக்கிறேன். இன்னும் நதியை நீங்கள் பார்க்கவேயில்லை. இந்த வருடத்து நதியைப் பார்க்கவில்லை. இதற்கு முன் பார்த்திருக்கிறேன். இதே நேரங்களில் பார்த்திருக்கிறேன்''

''என்ன?''

''படகில் கூட போக முடியாது. இக்கரைக்கும் அக்கரைக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. வேலி போட்டது போல போகும். இரண்டு மாதங்களுக்குப் பிறகு கொஞ்சம் குறையும். அப்பொழுது படகு ஆரம்பிக்கும். மற்றபடி கடல் அலை போலத்தான் சொடேர் சொடேர் என்று கரைகளில் அலைகள் மோதும். படகு பேயாய் ஆடும். இதை மூன்று லட்சம் படை வீரர்கள் எப்படித் தாண்டுவார்கள்.''

''ஐயா ஒரு கயிறு கட்டி...''

''யார் கட்டி, கட்டியவன் எங்கிருக்கிறான். கட்டப் போகிறவன் எங்கிருக்கிறான். கட்ட முடியுமா என்று யோசனை செய்யுங்கள்.''

''ஒரு ஆள் நதியூடே நகர்ந்து போய் பிறகு கயிறு இழுத்துச் செய்ய முடியாதா.''

''பத்துக்கு ஏழு பலியாகும். நூல் கயிறு எடுத்துப் போய் பிறகு பெரும் கயிறு கொண்டு பிணைத்து என்பதெல்லாம் பேச நன்றாக இருக்கும். நதி அறுத்து எறிந்து விடும். குலைத்து விடும். வெறும் கயிறு மட்டும் நூற்று பத்துக் கோல் தூரத்திற்கு போகுமா. நடுவே கம்பம் நட வேண்டாமா. அங்கு கயிறு பிணைக்கப்பட வேண்டாமா.?''

''யார் கம்பம் நடுவது. எப்படி நடுவது.''

கொஞ்சம் உஷ்ணமாகவே கிருஷ்ணன் ராமன் குரல் வந்தது. கூட்டம் திகைத்தது. அதுவரை போர் போர் என்றவர்கள், கோடு போட்டது போல் போகவேண்டும் என்றவர்கள், உள்ளே நுழைந்து எரிக்கவா, கொல்லவா என்று கேட்டவர்கள் மௌனமாய் இருந்தார்கள். போக முடியாது என்று புரிந்து கொண்டார்கள். படைக்

குழு அமைதியாய் உட்கார்ந்தது.

இராஜேந்திரர் தன் ஆசனத்தில் சரிந்து உட்கார்ந்து கொண்டார். வெகு சில வேளைகளிலேயே இராஜேந்திரர் இப்படி அசந்து போவார். இந்த நேரம் அவர் அசந்தது கிருஷ்ணன் ராமனுக்கு வேதனையாக இருந்தது.

''என்ன வழி கிருஷ்ணன் ராமன் அவர்களே?''

''ஐயா, புரியவில்லை..''

''நாம் தாண்ட வேண்டும் என்ற இடத்திலிருந்து ஐந்து கல் தொலைவில் ஒரு கிளை ஆறு வெட்டி அதாவது கரையை உடைத்து நீரைக் குறைத்து உடைத்து எடுத்தநீரை பெரிய பரப்பிலே பரப்ப விட்டு அப்படி நீர் போகும்படியான தாழ்வு இடத்தை தேர்ந்தெடுத்து, பிறகு நீரின் வேகம் குறைந்ததும் கயிறு கட்டியோ , மரப்பாலம் அமைத்தோ போகலாம்.''

''அதிலும் ஒரு பிரச்சனை உண்டு.''

''என்ன?''

''இரண்டு புறமும் மகாநதியில் மண் கரைகள் இல்லை.''

''பிறகு?''

''பாறைகள். ஒரு பாறையைப் பிளக்க ஒரு நாளாகும். இருநூறு பாறையாவது பிளக்க வேண்டும்''

''ஒரு குறிப்பிட்ட அகலம்தானே தோண்ட வேண்டும். அத்தனை இடத்திலும் ஆட்கள் குவிய முடியுமா. சிலர்தான் வேலை செய்ய முடியும். மற்றவர் வேடிக்கைத்தானே பார்க்க முடியும். பலர் உடைத்தால் இன்னும் குறையுமல்லவா.? ''

''யார் அது முட்டாள்.?''

கிருஷ்ணன் ராமன் சீறினார். குரல் வந்த திசையை நோக்கிப் போனார்.

ஒரு உபதளபதியை, பல போர்களில் சிறப்பு வாங்கியவனை, வீர தீர சாகசம் செய்தவனை தரதரவென இழுத்து வந்தார். மன்னர் முன்னே நிறுத்தினார்.

''எதிர்க் கரையை உடைக்க வேண்டுமென்றால் இருநூறு பேர் வேண்டும். இரண்டு பேர் தாங்க முடியாது என்று நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இருநூறு பேரை எதிர்க் கரைக்கு எப்படி அனுப்புவாய். அப்படி இருநூறு பேர் எதிர்க் கரைக்கு போக வேண்டுமென்றால் மூன்று லட்சம் படை வீரர்களும் தாண்டிவிட

முடியுமே. என்ன பேச வேண்டுமென்று தெரியாது உன்னையெல்லாம் யார் படையில் சேர்த்தார்கள்'' என்று உரக்கச் சீறினார்.

அந்தக் கேள்வி இராஜேந்திரர் மடியில் வந்து விழுந்தது. இராஜேந்திரர் பல் கடித்தார். அவன் பயந்து நடுங்கினான். விழுந்து வணங்கினான். கிருஷ்ணன் ராமன் கையைத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டு பின்னடைந்தான். மற்ற உபதளபதியும், தளபதிகளும் பேசுவதற்கு பயந்தார்கள். அபிப்ராயம் சொல்லத் தயங்கினார்கள். எதற்கு வம்பு என்று வாயை இறுக்க மூடியிருந்தார்கள். கிருஷ்ணன் ராமன் அயர்ந்து தன்னுடைய இருக்கையில் வந்து அமர்ந்தார்.

''அப்பொழுது தாண்டிப் போவது கடினம் என்கிறீர்களா.?''

''இல்லை''

''பிறகு ?''

''இயலாது என்கிறேன்.''

கூட்டத்தில் சலசலப்பு கேட்டது . இயலாது என்ற ஒரு வார்த்தை சோழப்படையில் உண்டா, அப்படி நடந்திருக்கிறதா, கிருஷ்ணன் ராமன் இப்படிப் பேசுகிறாரே என்று ஆத்திரப்பட்டார்கள். ஏன் எப்படி என்று சலசலப்பு வந்தன. ஆம் இல்லை என்ற குரல் வந்தன. கிருஷ்ணன் ராமன் அமைதியாக இருந்தார். மாமன்னர் இராஜேந்திரர், கிருஷ்ணன் ராமனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''என்னதான் வழி.?''

''இறை அருள் இருந்தால்தான் தாண்ட முடியும்.''

''என்ன சொல்கிறீர்கள்.?''

''கடவுளை வேண்டி, கடவுள் உதவி செய்தால் இதைத் தாண்ட முடியும். மற்றபடிக்கு இதைத் தாண்டுதல் கடினம். ''

''எந்தக் கடவுளை வேண்டுவது.?''

''யாருக்கு எந்தக் கடவுள் தெரியுமோ அந்தக் கடவுளை வேண்டுங்கள். நீங்கள் சிவனை வேண்டுங்கள். இந்த தளபதியார் வைஷ்ணவர். அவர் விஷ்ணுவை வேண்டட்டும். வேறு யாராவது ஊர் கோவில் தெய்வங்களை வேண்டட்டும். நானும் வேண்டிக் கொள்கிறேன். ''

''யாரை வேண்டிக் கொள்வீர்கள்.?''

''அது முக்கியமில்லை இராஜேந்திரரே, யார் என்று முக்கியமில்லை. ஆனால் கடவுள் அருள் இன்றி இந்த வேலை நடவாது.''

''சோழ தேசப் படைகளுக்கு போர் செய்யத் தெரியும். அடித்து உதைத்து முன்னேறத் தெரியும். விடாப்பிடியாக இரவு பகலாக நடக்கத் தெரியும். ஆனால் பிரார்த்தனை செய்யத் தெரியுமா?.'' அவனுக்குக் கேள்வி வந்தது. அந்தக் கேள்வியை அவன் சித்தப்பாவிடம் கேட்டான். சிரித்தார்.

''அதற்குத்தானே உன்னையும் என்னையும் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியாது என்பதால் விட்டுவிட முடியுமா. தோல்வியைத் தழுவிக் கொள்ள முடியுமா. பிரார்த்தனை செய்யடா. நானும் செய்வேன்.''

அவரைப் போல கெட்டிக்காரரை அவன் பார்த்தில்லை. கேலியாக ஆரம்பித்த விஷயத்தை அவன் குத்தி காட்டியதை திசை திருப்பி நீ என்ன லட்சணம் என்று மடக்கி உட்கார வைத்துவிட்டார். இதில் ஒரு வார்த்தை கூடக் கடுமை இல்லை. ஆனால் அந்த விஷயத்தில் கடுமை இருந்தது.

யாரோ தவறாகப் பிரார்த்தனை செய்து விட்டார்கள். மறுநாள் கிளம்பும் போது இருட்டிக் கொண்டு வந்தது. இன்னும் நகர்ந்தபோது மெல்லிய தூறல் அடித்தது. கூதல் காற்று அடித்தது. படை பாட்டு பாடிக் கொண்டே நடந்தது. மது வகைகளுக்கு ஏங்கியது. இருந்த மது வகைகளை பங்கு போட்டுக் கொண்டது. இல்லையெனில் இந்த கூதற்காற்றில் அவ்வளவு தூரம் நடக்க முடியாது என்றுத் தோன்றியது.

பிற்பகல் நேரத்தில் மழை மேகங்கள் தரைக்கு இறங்கின. மழை அடித்துப் பெய்தது. மூன்று லட்சம் வீரர்களும் தங்குவதற்கு இடம் இல்லாது ஒரு கரம்பக் காட்டில் கொட்டுகிற மழையில் நனைந்து கொண்டு நின்றார்கள். நகர வேண்டாம் என்ற உத்தரவு வந்தது. மழை இன்னும் வலுத்தது. அந்தப் பெரிய படை வீரர்கள் குத்திட்டு உட்கார்ந்து கொண்டார்கள். மழை இன்னும் பலத்துப் பெய்தது. மின்னல் மின்னிற்று. இடி இடித்தது. தென்னாடுடைய சிவனே போற்றி என்று அலறினார்கள்.

எந்நாட்டவர்க்கும் இறைவா என்ற அலறினார்கள். படையெடுப்பு முடிவுக்கு வருமா என்ற பயம் எல்லோருக்கும் வந்தது. ஓயாத மழை. பிற்பகலில் ஆரம்பித்து இரவெல்லாம் மழை. உணவு எப்படிப் பரிமாறுவது. எப்படிப் போவது?

ஆனால் உணவு தயாராகிவிட்டது. சுடு சோறு, புளிக் குழம்பு, மீன் பொரியல் . அவனுக்கும் கிருஷ்ணன் ராமனுக்கும் பெரிய சட்டியில்

சுடுசோறும், இன்னொன்றில் கொதிக்கக் கொதிக்க பாலும் வந்தது. சோறு இட்டு சோறில் பால் விட்டு, பாலில் தேன் விட்டு, பிரட்டிச் சாப்பிட்டார்கள். கூட்டு, கறி, வதக்கல், வத்தல் போன்றவை வீட்டில் இருக்கும். ஆனால் போர் முனையில் இந்தச் சாப்பாடே பெரிய விஷயம்.

சோழ தேசப் போர் வீரர்கள் உணவு பற்றி மிகக் கவனமாக இருப்பார்கள். மேலைச் சாளுக்கியத்தில் அப்படி இல்லை. பத்து பேருக்கு ஒரு கறித்துண்டு என்று ஒரு தொடைக் கறியைக் கொடுத்து விட்டுப் போவார்கள். அதை செதில் செதிலாக நறுக்கி வேகவைத்தோ, சுட்டோ போர் வீரர்கள் சாப்பிடுவார்கள். காயை வழியிலே பறித்து வந்திருப்பார்கள். அதை நசுக்கி துவையல் என்று செய்வார்கள். மிளகிட்டு உண்பார்கள்.

விடிந்த பிறகு மழை நின்றது. லேசாய் தூறல் இருந்தது. மருந்து கஞ்சி வாசனை வீசிற்று. வீரர்கள் மழையில் நனைந்திருக்கிறார்கள் என்று நீர் கோத்துக் கொள்ளாது இருக்க காலையில் கஞ்சியில் மருந்து கலந்து அதை கிளறுகிறார்கள். வாசனை நாலாபக்கமும் அடிக்கிறது. வேண்டுமென்று தோன்றுகிறது. எல்லோருக்கும் குவளை குவளையாய் கொடுக்க, பானை பானையாக மருந்துக் கஞ்சி போக, அங்கங்கே அங்கங்கே நின்று வாங்கிக் குடிக்கிறார்கள். காலைப் பசிக்கு மீன் சுட்டுத் தின்கிறார்கள். குவளையைக் கலக்குகின்ற சத்தமும் கேட்கிறது. சில வீரர்கள் சட்டியில் அரிசி இட்டுக் கஞ்சி வைத்துக் கொள்கிறார்கள். காய்கறிகள் நறுக்கிப் போட்டு புளி சேர்த்து, மிளகு சேர்த்து, கூட்டு போலச் செய்து உப்பிட்டு அதைக் கரைத்து நடுச்சோற்றில் ஊற்றிக் கொள்கிறார்கள். ஆஹா ஆஹா என்று சாப்பிடுகிறார்கள்.

உச்சி வெய்யில் வரை நடக்க உத்தரவு வரவில்லை. கொஞ்சம் உலரட்டும் என்று காத்திருந்தார். ஈரத்தோடு நடக்க வேண்டாம் என்றார். அங்கங்கே துணிகள் பிழிந்து போடப்பட்டிருந்தன. கோமணத்தோடும் பலபேர் திரிந்தார்கள். மூவாயிரம் நாலாயிரம் பேர் கோமணத்தோடும் குத்தீட்டியோடும் நிற்பது பார்ப்பதற்கு வினோதமாக இருந்தது. படை நகரத் துவங்க வெய்யில் அடித்தது.

''யாரோ தவறாகப் பிரார்த்தனை செய்திருக்கிறார்கள். மழை வந்துவிட்டது. யாரோ சரியாக பிரார்த்தனை செய்திருக்கிறார்கள். மழை நின்று வெய்யில் வந்து விட்டது.'' மாதாண்ட நாயகர் இராஜேந்திரர் சொல்ல, எல்லோரும் சிரித்தார்கள். பிரார்த்தனை

என்கிற விஷயம் அங்கு வெகு வேகமாக கேலி செய்யப்பட்டது. கடவுளே கடவுளே இந்தப் போரில் எனக்கு இரண்டு கிடாவாவது கொடு என்று ஒருவன் கை கூப்பி வேண்டிக் கொண்டான்.

சோழர்களுக்கு கிடாதான் பெரிய செல்வம். நல்ல முரட்டுக் கிடா வம்சாவளியை அதிகரிக்கும்.

''கிடா கிடாவை கேட்கிறது'' என்று இன்னொருவன் சொல்ல, அவர்களுக்குள் விளையாட்டாக அடிதடியும், சிரிப்பொலியும் எழுந்தன.

வழியே கிராமங்கள், சிறு பட்டிணங்கள், ஜனங்கள் இடுப்புத் துண்டை அவிழ்த்துக் கீழே போட்டுவிட்டு நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினார்கள். பெண்கள் கையெடுத்துக் கும்பிட்டார்கள். பல பெண்கள் குடிசைக்குள்ளிருந்து கீச் மூச்சென்று கத்தினார்கள். இரண்டு வீரர்கள் பெண்களின் குரலைத் தாங்காது அந்த குடிசைக்கு அருகே போகக் கூச்சல் அதிகமாகியது. ஒரு கிழவன் வந்து கை கூப்ப அவர்கள் விலகி நடந்தார்கள்.

ஒட்டதேசத்தில் தட்டைக் கூரை வீடுகள் விசித்திரமாக இருந்தன. கிழவிகள் சிறு கண்களோடு உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். உடம்பெல்லாம் பச்சை குத்தியிருந்தார்கள். மஞ்சள் நிற மேனியராக இருந்தார்கள். சோழ தேசத்துக் கருப்பு உடம்பை பார்த்து விட்டு வாயில் கை வைத்தார்கள். அந்தப் பெண்களுக்கெல்லாம் பற்கள் கருப்பாக இருந்தன. வெள்ளை வெளேர் என்று பற்கள் இருக்கின்ற சோழ தேசத்து ஆட்களைப் பார்த்து தங்களுக்குள் என்னவோ பேசிக் கொண்டார்கள். என்ன பேசிக் கொண்டார்கள் என்று கேட்டபோது, இத்தனை வயதான பிறகும் பற்கள் இவ்வளவு வெளுப்போடு இருக்கிறதே, என்ன போட்டு தேய்க்கிறாய் என்று விசாரித்திருக்கிறார்கள். மூங்கில் அடுப்புக் கரி என்று அவர்களுக்கு சொல்லப்பட்டது.

படையை ஒதுக்கிக் கொண்டு குதிரைப்படை முன்னேறியது. இன்னும் வேகமாகப் போக வேண்டும் என்கிறபோது குதிரைப்படை முன்னேறி காலாட்படைவிட்டது. அந்தி சாயும் நேரத்தில் ஒரு பட்டிணத்தில் பாடி நிறுத்தப்பட்டது. பட்டணத்து வீடுகளில் உள்ளே புகுந்து சோழ வீரர்கள் கட்டிலில் படுத்துக் கொண்டார்கள். போர்வை விரித்துத் தரையில் படுத்துக் கொண்டார்கள். நேற்று காட்டில் மழையில் நனைந்ததாலோ என்னவோ இந்த மாதிரிப் பட்டிணத்தை

இராஜேந்திரர் தேர்ந்தெடுத்திருக்கிறார். சுகமாக, மழையில் நனையாமல் படை வீரர்கள் தங்கட்டும் என்கிறார். கோவில்களில், பெரிய அரண்மனைகளில், வணிகர் இல்லங்களில், வசதியானவர்கள் வீடுகளில், குடியானவர் இல்லத்தில் என்றெல்லாம் படைவீரர்கள் உள்ளே புகுந்தார்கள். உள்ளே படுத்திருந்தவர்களை வெளியே அனுப்பிவிட்டு அவர்கள் படுத்துக் கொண்டார்கள். யுத்தம் அப்படித்தான். சாதாரண மக்களை எட்டி உதைக்கத்தான் யுத்தம் எப்போதும் நடைபெறுகிறது.

படுத்துவிட்டுப் போகட்டும். பெண்கள் மீது கை வைக்காமல் இருக்கிறார்களே அதே பெரிய விஷயம். வீட்டிற்குள் நுழைந்ததும் என் பெண்ணை குத்திக் கொன்று விடலாம் என்று நினைத்தேன். கத்தியை உருவியதும், நான் அதற்கு வரவில்லை. கீழே வையடா என்று சொல்லிவிட்டான். என் பெண்ணைப் பார்த்து பயப்படாமல் போம்மா என்று வெளியே அனுப்பிவிட்டான். என் கட்டிலில் தான் தூங்குகிறான் என்று ஒரு வணிகர் உரத்த குரலில் அலட்டிக் கொண்டார்.

ஒரு நாள் அங்கு படை வீரர்களை தங்கச் சொன்னார். யாருக்கு உடல்நலம் சரியில்லை என்று கணிக்கச் சொன்னார். ஒரு நூறு பேருக்கு மட்டுமே உடல் நலம் சிறிது பாதித்திருந்தது. அவர்களுக்கு உடனடியாக வைத்தியம் செய்யப்பட்டது. அவர்கள் தங்களால் நடக்க முடியும் என்றும் சொன்னார்கள்.

சடேர் என்று ஒரு சலசலப்பு கேட்டது. காட்டின் ஒரு பகுதியிலிருந்து இருபது இளைஞர்கள் ஒட்டர்கள் வேலும் கம்புமாய் வந்து படைக்கு நடுவே புகுந்திருக்கிறார்கள். தளர்ந்திருந்த படை உடனே சுதாரித்துக் கொண்டு கத்தி உருவி அடித்து நொறுக்கியிருக்கிறது. மூன்று பேர் கள பலி. மீதமுள்ளவரை அவர்கள் துணியாலேயே கட்டி தலைமயிரைப் பிடித்து இழுத்து வந்திருக்கிறார்கள். பின் குடுமியில் பிரம்பக் கொடியால் கட்டி அதை இழுத்து, கட்டின கைகளுக்கு நடுவே பிணைத்திருக்கிறார்கள். ஒருவன் தலை நிமிர்த்தி வானம் பார்த்தே இருக்க வேண்டியதுதான். அப்படியே நடக்க வேண்டியதுதான்.

ஆச்சரியமாக இருந்தது. எதற்கு இப்படி பிணைக்கிறார்கள் என்று அவன் சித்தப்பாவிடம் கேட்டான்.

''கழுத்தை அறுக்க இதுதான் வசதி.''

அவர் சிரித்துக் கொண்டே சொன்னார். அவனுக்கு என்னமோபோல் ஆகிவிட்டது.

தலை பின்பக்கம் தள்ளி இருக்க, குடுமி பிரம்பங்கொடியால் பின்னியிருக்க, அது பின்பக்கம் கட்டின கைகளில் இணைத்திருக்க, எங்கோ பார்த்துக் கொண்டு நடந்து வருபவன் கழுத்தில் கத்தி வைத்து சரக்கென்று இழுத்தால் ஒரு நிமிடத்தில் உயிர் போய்விடும். எப்பொழுது வேண்டுமானாலும் ஒரு கத்தி தன் கழுத்தை அறுக்கும் என்ற பயம் அவனுக்கு இருக்கும். யுத்தத்தினுடைய குரூரம் அவன் முகத்தில் அடித்தது.

எல்லோரும் வில்லும் வாளுமாக இருக்க, ஒரு பதினைந்து ஓலைச் சுவடிகள் கொண்ட மூட்டையைத் தூக்கிக் கொண்டு நடப்பதற்கான இடுப்பு உயரக் கம்பு வைத்துக் கொண்டு அவன் மட்டுமே நடந்து வந்தான். ஆயுதம் இல்லாது அங்கு எவரும் இல்லை.

''பயமாக இருக்கிறதா. போ. போய் அவர்கள் செய்யும் சித்தரவதையைப் பார். வாழ்க்கை என்ன என்பதை யுத்தம் சொல்லித் தரும். வாழ்வு என்ன என்பதை மரணம் சொல்லித் தரும். மரணம் என்ன என்பதை வாழ்வு ஒருபோதும் சொல்லித்தராது. வாழ்வு வாழ்வைப் பற்றித்தான் யோசிக்கும். மரணம் பற்றிய வாழ்வை யோசிக்கிறவன் ஞானி . சித்தபுருஷன். ''

கண்களை குறுக்கிக் கொண்டு கூர்மையாக சித்தப்பா பேசியது புரிந்தது போலவும் இருந்தது. புரியாதது போலவும் இருந்தது. ஆனால் விரைவாக நடந்து அந்த கூட்டத்தில் கலந்து கொண்டான்.

''வாருமய்யா, உட்காரும்.''

படைவீரர்கள் அவன் உட்காருவதற்கு ஒரு குத்துக் கல்லை காட்டினார்கள். குத்துக் கல்லில் உட்கார்ந்தவன் எழுந்து விலகி அவனுக்கு இடம் கொடுத்தான்.அவன் போய் குத்துக் கல்லில் உட்கார்ந்து கொண்டான். இது அவனுக்கு கிடைக்கும் மரியாதை அல்ல. கிருஷ்ணன் ராமனுக்கு கிடைக்கும் மரியாதை.

''எதற்குத் தாக்கினாய்?''

''என் தேசத்திற்குள் நீங்கள் நுழைந்துவிட்டீர்கள். எங்கள் பூமியில் கால் பதித்து விட்டீர்கள். எங்கள் ஊர் நெல்வயலை நாசப்படுத்துகிறீர்கள். யானைகளையும், குதிரைகளையும் விட்டு உண்ணச் சொல்கிறீர்கள். உங்களை பாழ்செய்வேன். அடிப்பேன்.''

''இத்தனை பெரிய படையை இருபத்தைந்து பேர் கொண்டவர்கள் ஜெயித்துவிட முடியுமா?''

''ஜெயிப்பது தோற்பது அல்ல விஷயம். எதிர்ப்பதுதான் முக்கியம்.

நாங்கள் எதிர்ப்போம். எதிர்க்காமல் சாகமோட்டோம். எதிர்க்காமல் உங்கள் ஓரத்தில் உட்கார்ந்திருந்தால் உங்களை வரவேற்பது போல் அர்த்தம். என் வீட்டுப் பெண்களுக்கு உங்களை கூட்டிக் கொடுப்பது போல் அர்த்தம்.''

''வேறு வழியில்லையே. கூட்டிக் கொடு''

''இல்லை. செத்தாலும் சாவேனே தவிர அது நடக்காது''

''நீ செத்த பிறகு அது நடக்கும்.''

''அதுபற்றிக் கவலையில்லை. தடுக்க முயற்சித்தேன். உன்னை அடித்தேன். ஒருவனை கொன்றேன் என்பதே எனக்கு மிகப் பெரிய சந்தோஷம்.''

''ஒரு மயிரைக் கூட நீ பிடுங்கவில்லையடா.''

''அதுதான் வருத்தமாக இருக்கிறது. இன்னும் பயிற்சி பெற்று உன்னை அடித்திருக்க வேண்டும். இரவில் வந்து உன்னை நாசம் செய்திருக்க வேண்டும். உன் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு, பச்சிலைத் தண்ணீர் ஊற்றிவிட்டு உடம்பு அரிப்பு ஏற்படும்போது வெட்டிக் கொன்றிருக்க வேண்டும். இவன் அதை கோழைத்தனம், வெளிச்சத்தில் சண்டை போடுவோம் என்றான். ''

''எவன் சொன்னான்.?''

''இவன் சொன்னான்.''

''வா. வெளிச்சத்தில் நேருக்கு நேர் நின்று சண்டை போட வேண்டும் என்று நீ சொன்னாயா.''

''ஆமாம். சொன்னேன்''

'' எதனால் அப்படிச் சொன்னாய். ?''

''அதுதான் வீரம். நீங்கள் எவ்வளவாக இருந்தாலும் போர் செய்வதற்கென்று ஒரு நியதி இருக்கிறது. உங்களை அழைத்து நீங்கள் தாயாரான பிறகு போர் செய்ய வேண்டுமென்பதுதான் விருப்பம். இப்படி வந்து தாக்குவது கூட எனக்கு விருப்பமில்லை.''

''நல்லது. யாரது? இவன் கட்டுகளை அவிழ்த்து விடுங்கள்.'' மாதாண்ட நாயக்கர் உத்தரவிட்டார்.

''ஏன் ஏன் ?'' என்று வீரர்கள் பதறினார்கள்.

''ஒரு நல்ல வீரனப்பா. அவன் தேசத்தில் அவன் வயலில் நாம் கை வைத்து விட்டோம் என்று பொங்குகிறான். விட்டு விடுங்கள். எங்கிருக்கிறது வீடு.?''

''இதே பட்டிணத்தில். நட்ட நடுவே இரண்டு மாடிக் கட்டிடம்.''

''நல்லது. யார் அங்கே தங்கியிருந்தீர்கள்.?''

''நான் நான்..''

''அந்த வீட்டில் பெண்டுகள் உண்டா?''

''உண்டு.''

''யாரையும் காயப்படுத்தவில்லையே...?''

''ஒரு சிறு தவறுகூட நடக்கவில்லை''

''நல்லது. இந்த பிள்ளையைக் கொண்டு போய் அங்கு அழைத்து உட்கார வை''

''மறுபடி எகிறுவானே..?''

''அதற்குத்தான் அவனை அங்கு உட்காரவைத்து தலையைச் சிரைத்து, மீசையை மழித்து, கோமணம் கட்டி, முகத்தில் கரும்புள்ளி செம்புள்ளி வைத்து அவன் வீட்டுப் பெண்களிடையே இருக்கும்படியாகக் கட்டிப் போடு. நமது படை நகரும் வரை அவன் நகரக் கூடாது.

உன் வீரத்திற்கு உன் உயிரை நான் பரிசாக அளிக்கிறேன். உன் தாக்குதலுக்கு உன்னை அவமானப்படுத்துவதின் மூலம் உன்னைச் சிறுமைப்படுத்துகிறேன். ஒரு ஓட்டனால் சோழ தேசத்தை ஜெயிக்க முடியாது.''

அவர் உரக்கக் கத்தினார்;. படை வீரர்கள் பயந்தார்கள்.

''இவன் நம்மைத் தாக்குவேன் என்று சொன்னவன்''

''அப்படியா. எப்படிக் கண்டுபிடித்தீர்கள்.?''

''இவர்களே வந்து சொன்னார்கள்''

''இரவில் தாக்குதல் நடத்துவதா, இவ்வளவு சிறிய படை எப்படி நாசம் செய்யும்?''

''முடிந்தளவு நாசம் செய்ய வேண்டுமென்றால் இரவில்தான் தாக்குதல்''

''ஏன் இரவில் தாக்கவில்லை?''

''மழை பெய்தது. அதனால் தாக்கவில்லை.''

அவர்கள் வழித்துக் கொண்டு சிரித்தார்கள்.

''மழைக்கு பயந்து தாக்காது போனாயா?''

''ஆமாம். தாக்க ஓடினோம்.''

''பிறகு?''

''சறுக்கி விழுந்து விட்டோம்.அதனால் தாக்குதலை நிறுத்தி விட்டோம்.''

வீரர்கள் இன்னும் புரண்டு சிரித்தார்கள்.

''குத்திக் கொல். ஒரே வீச்சில் உயிர் போகட்டும்''

உபதளபதி அருகில் நின்றான். அவன் முகத்தைத் தடவினான். அவன் கண்களில் பயம் இருந்தது. அவன் அழத் துவங்கினான்.''

''அழக்கூடாது. நீ உன் தேசத்திற்காக இறக்கிறாய். அழாமல் முகம் துடைத்துக் கொள்.'': உபதளபதி சொல்ல, அவன் ைககளை விலக்கினார்கள். கட்டுகளை விலக்கினார்கள். முகத்தை துடைக்க வைத்தார்கள். குடிக்க நீர் கொடுத்தார்கள். அவன் முகம் அலம்பிக் கொண்டான். திருநீறு கேட்டான். திருநீறு இ;ட்டுக் கொண்டான். சோழ வீரன் கத்தியை தூக்குகிற போது, ''நில்'' என்று இராஜேந்திரர் குரல் கொடுத்தார்.

''என்ன?''

''அவன் முகம் அலம்பி திருநீறு இட்டுக் கொண்டு விட்டான். என் மனம் மாறிவிட்டது. அவன் சிவபக்தன். இறக்கும் போது திருநீறோடு இறக்க வேண்டுமென்பவன் மிகச் சிறந்த சிவபக்தன்.''

''என்ன செய்வது.?''

''வலது கையை உடைத்து விடு. எலும்பை உடைத்து விடு. வாள் எடுக்க முடியாது போகட்டும். இடது கை கட்டை விரலை துண்டாக்கி விடு. அங்கும் பிடிமானம் இல்லாது போகட்டும். இரந்து உண்ணட்டும். சிவனடியார் அல்லவா. இரந்து உண்ணட்டும்.''

இராஜேந்திரருடைய குரல் உயர்த்து கேட்க அவன் பயந்தான்.

''அடாடா என்ன தீர்ப்பு. வேறு என்ன செய்வது?''

''பிரம்பால் அடித்து விடுங்கள். பட்டை பட்டையாக சதை பிய்யும் வரை அடியுங்கள். எழுந்து நடமாட இரண்டு நாட்களாக வேண்டும்'' என்று கட்டளையிட, வீரர்கள் சூழ்ந்து கொண்டார்கள். கண் மண் தெரியாமல் அடித்தார்கள். முகத்தில் குத்தினார்கள். பற்களை பெயர்த்து எடுத்தார்கள். கன்னத்தில் அறைந்தார்கள். காது வழியாக ரத்தம் வர அடித்தார்கள். பிருஷ்டத்தில் அடித்தார்கள். முதுகில் விளாறினார்கள். நெஞ்சில் கத்தியால் கோடு போட்டார்கள்.

இருபத்தேழு பேரை எப்படிச் சமாளித்தோம் என்று சோழப் படை அலட்டிக் கொண்டு போக, அவர்களை அவன் வியப்போடு

பார்த்தான்.

மனிதனை மனிதன் அலற அடிப்பதற்கு எத்தனை ஆவேசம். எவ்வளவு ஆனந்தம். இவ்வளவு பெரிய சோழப்படையில் இருபத்தேழு பேர் கொண்ட ஒரு சிறிய படை அடித்து நொறுக்க வேண்டும் என்று சரிவில் இறங்கி ஓடிவந்ததே அது ஆவேசமா, அப்படி இறங்கி வந்தவர்களை மடக்கி நிற்க வைத்து பிரம்பால் அடித்து கதற அடிக்கிறார்களே அது ஆவேசமா. அது பெரிதா இது பெரிதா. அல்லது இரண்டுமே ஒன்றுக்கொன்று சளைத்ததில்லையா. மலை ஏறி இறங்கலாம். அல்லது சுற்றி வரலாம். ஆனால் இந்தமலையைக் கடந்துதான் ஆகவேண்டும். இரண்டு மலைக்கு நடுவே ஒரு மேடு இருக்கிறது. அந்த மேட்டில் இறங்கித்தான் ஆகவேண்டும். குதிரைகளுக்கு எளிது. காலாட்படையும் நகர்ந்து விடும். ஆனால் யானைகள் சிரமப்படும். சரளைக்கற்கள் போன்ற மலை அது. யானைகள் சறுக்கும். தள்ளாடும். ஏற முடியாது என்ற சண்டித்தனம் செய்யும். ஆனால் முட்டுக் கொடுத்து தள்ளிக் கொண்டு வந்து விடலாம். முளைகள் பூமியில் அடித்து இறக்கினால் யானைகள் அதைப் பிடித்து நிற்கும். யானைகள் ஏறும்படி செய்யலாம். மனிதர்கள் தடியூன்றி நிற்பது போல செயல் அது. யானைகள் அதைப் பிடித்து நிற்கும். மனிதர்கள் கையூன்றி நிற்பது போல செயல் அது.

ஆனால் மலைக்கு நடுவே இருக்கும் மேடு பெரிய மேடு. கொஞ்சம் அவஸ்தைதான் படுவார்கள். படையெடுப்பு என்பதில் மனிதர்களோடு மட்டும் சண்டை வருவதில்லை. இயற்கையோடு ஒருவன் போராட வேண்டியிருக்கிறது. காற்று மழை மட்டுமல்ல. இந்தமாதிரி பூமியின் நிலப்பரப்பும் மனிதர்களை காவு வாங்கும்.''

''கம்பு நட்டு விட்டார்கள். கம்பு நட்டு விட்டார்கள்.''

வழியே குரல் கேட்டது. கொஞ்சம் தூக்கத்தோடு குதிரையிலிருந்து வந்தவன் சட்டென்று விழித்துக் கொண்டான். கம்பு நட்டுக் கொண்டார்கள் என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது. மெல்லியதான மூங்கில் குழியை நட்டு வளைந்த அதன் பகுதியில் குடுமியை முடிந்து அரிகண்டம் கொடுப்பவன் தயாராக இருப்பான். கம்பை வளைத்து இழுத்து, குடுமியைச் சேர்த்து இழுத்து தரையில் மண்டியிட்டு இருப்பான். கையில் உள்ள கத்தியால் ஓங்கிக் கழுத்தை அறுத்துக் கொள்வான். கழுத்துத் துண்டாகி அந்த மூங்கில் கம்பு அவன் தலையைப் பிய்த்து ரத்தத்தை நாலாபக்கமும் அரசர் தாண்டும்போதும் அதை வீரர்கள் செய்வது வழக்கம். இது ஒருவிதமான தற்கொலை.

இராஜேந்திர சோழர் ஊத்தையின்றி வருவதை ஒட்டி இவ்விதம் நடந்து கொள்வதாக அவன் உரக்கச் சொல்லியிருப்பான். இராஜேந்திரர் வேண்டாம் என்று தடுத்தாலும் விடமாட்டான்.

இராஜேந்திரர் இறந்தவன் மனக்கேதம் தீர்க்கும் பொருட்டு நொந்தா விளக்கு எரிய சாவா மூவா பேராடும், அவன் மனைவிக்கு நன்செய் நிலங்களும் தருவார். காசும் கிடைக்கும். அவனுடைய தோழர்கள் இந்த உத்தரவை அவன் சாவுச் செய்தியோடு அவன் வீட்டில் சொல்லுவார்கள். அவன் வீட்டில் அழுவதா, சிரிப்பதா என்று தெரியாத ஒரு வெட்கம் கெட்ட நிலை ஏற்படும். நல்ல விலை நிலங்கள், ஐந்து வேலி, ஆறு வேலி தரப்படும். வளைந்து உடைந்த ஓடுகள் போல தங்கங்கள் தரப்பட்டிருக்கும். கழஞ்சுகள் தரப்பட்டிருக்கும். ஊர் மக்கள் அரிசியும், பருப்பும், நெய்யும், புண்ணாக்கும் கொண்டு வந்து கொடுப்பார்கள். புண்ணாக்கு மாடுக்கு. நெய் மனிதர்களுக்கு.அரிசியும், சோறும் அந்த வீட்டிற்கு என்று எளிதாகக் கணக்கு இருக்கும். சில நாட்கள் கொண்டாடி அழுது பிறகு ஓய்ந்து விடுவார்கள். அவன் மனைவி கிடைத்த காசில் நன்கு உடுத்தி, நன்கு சாப்பிட்டு அவன் குழந்தைகளை சோழ தேசத்திற்காகத் தயார் செய்து விடுவாள்.

அரிகண்டம் கொடுத்தவன் பிள்ளை என்று சொன்னால் எல்லா இடத்திலும் மிகப் பெரிய மரியாதை இருக்கும். கோவிலிலும் முதல் தரிசனம் கிடைக்கும். எந்த சபையிலும் அரச ஆசனம் கிடைக்கும். நலமா என்று ஊர் மக்கள் இறந்தவன் பிள்ளையை விசாரிப்பார்கள். அவன் நலம் என்று சொல்லும்வரை விசாரிப்பார்கள். நலம் இல்லை என்றால் என்ன என்று ஆவலோடு வருவார்கள். சோழ தேசத்திற்காக தன் தலையைத் தானே அறுத்தவன் பிள்ளையல்லவா, அவன் நலம் முக்கியம் என்று சோழ மக்கள் நினைப்பார்கள்.

பளிச்சென்று ஒரு பிடி ரத்தம் அவன் முகத்தில் அடித்தது. பயந்து ஒரு கூச்சல் போட்டான். பலர் திரும்பிப் பார்த்தார்கள். மெல்லியதாய் சிரித்தார்கள். அவன் மேல் துண்டால் முகத்தில் பதிந்த ரத்தத்தை அழுத்தி எடுத்துக் கொண்டான். குதிரையிலிருந்து இறங்கி ஒரு மாட்டு வண்டியில் வ்ந்த நீர் குடத்தை தேடி எடுத்துக் கொண்டு தலைக்குக் குளித்தான். முகத்திற்கு எண்ணைய் தடவினான். வேப்பம் விழுதால் துடைத்தான். திரும்பவும் தண்ணீர் ஊற்றிவிட்டு ஈரம் சொட்டச் சொட்ட குதிரைக்கு அருகே வந்தான். துணியை பிழிந்து வேறு உலர்ந்த துணியிணை எடுத்துக் கொண்டு குதிரையில் உட்கார்ந்து தலை

துவட்டிக் கொண்டான்.

வலப்புறம் வந்த அவன் சித்தப்பா உற்று கவனித்துக் கொண்டு வந்தார். அவர் குதிரை பருமனாகவும், வளமையாகவும், வெண்மையாகவும் இருந்தது. அவரின் எடையை எளிதாகத் தாங்கியது. மாதாண்ட நாயகர் நின்று விசாரித்து இறந்தவன் மனக்கேதம் தீர்க்க விதம் விதமாய் நிவந்தங்கள் கொடுத்தார்.

யாரோ வாட்படை வீரனாம் நடுநாடாம், குடிபழக்கம் உண்டாம். உள்ளவனாம். இது முயற்சியா, தற்கொலையா. எதுவாயினும் ஓர் உயிர் போயிற்று. மூங்கில் கயிறு இன்னும் தலையோடு ஊசலாடிக் கொண்டிருக்கிறது. இந்த இடத்தில் அரிகண்டம் கொடுப்பது போல ஒரு பலகை அடித்து பெயர் பொறித்து நட்டு விட்டுப் போய்விடுவார்கள். பிறகு அவனை மறந்து விடுவார்கள். ஏனெனில் நினைவில் வைத்துக் கொள்ள ஏகப்பட்ட விஷயங்கள் இருக்கின்றன. மரணத்தை நினைவில் வைத்துக் கொள்ள முடியாது. வாழும்போது மரணத்தை மட்டுமே நினைத்துக் கொண்டால் வாழ்க்கை சுவாரசியமாக இருக்காது. வாழ்க்கை என்பதே மரணத்தை மறந்து விடும் ஒரு முயற்சிதான்.

''என்ன திகைத்துப் போய் இருக்கிறாய் மகனே''

குதிரைக்குப் பின்னால் சித்தப்பாவின் குரல் கேட்டது.

''அந்த அரிகண்டம் என்னை கலவரப்படுத்தி விட்டது.''

''அப்படியா, அதைப்பற்றி எந்த அபிப்ராயமும் சொல்லிவிடாதே. மௌனமாக இரு. மன்னனுக்காக தன் தலையைத் துண்டித்துக் கொள்ளுதல் மிகுந்த உயர்வான விஷயம் என்று இங்குள்ள மறவர்கள் நினைக்கிறார்கள். ஆம் என்று நீ சொன்னால் ஒரு அடாத செயலுக்கு நீ துணையாக நின்றது போல் ஆகும். தவறு என்று சொன்னால் ஒரு மனிதனின் உயர்ந்த எண்ணத்தை, தியாகத்தை நீ கேலி செய்தது போல ஆகும். அதுமட்டுமல்ல, மன்னருக்கு எதிராகப் பேசியது போலும் ஆகும். எனவே, உலகில் நடக்கின்ற சில முட்டாள்தனங்களை மௌனமாக பார்த்துக் கொண்டிருப்பது நல்லது.

மன்னர் போரில் ஜெயிக்க பால் குடம் எடுக்க வேண்டும் என்றும், மன்னர் உயரத்திற்கு ஒரு பலகை நிறுத்தி அதற்கு அபிஷேகம் செய்ய வேண்டும் என்றும் ஒரு கிராமத்தில் ஆரம்பித்தார்கள். நான் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். இருபது பொன் தரவேண்டும் என்று கேட்டார்கள். மன்னனைக் கேட்டு மன்னன் சம்மதித்தால் தருவேன் என்று சொன்னேன். வந்தவர்கள் வெளிறிப் பின்னால்

போய்விட்டார்கள். பால் அபிஷேகம் என்பது மன்னருக்கா அல்லது இருபது பொன்னுக்கா என்று நான் கேள்வி கேட்டுவிடக் கூடாது. கேட்டால் தவறாகும். உலகில் எந்தப்பக்கமும் பேசமுடியாத சில விஷயங்கள் உண்டு. அது காலம், நேரம் பார்த்து பேச வேண்டும். உடனடியாகப் பேசிவிடக்கூடாது. நீ எங்கும் வாய் திறந்து விடவில்லையே.''

''இல்லை. சோழ தேசத்திற்காகத்தான் அவன் தன் இன்னுயிரை இழந்திருக்கிறான் என்பதான எண்ணத்தில் நான் இருந்தேன். நீங்கள் இல்லை என்று சொல்கிறீர்களா?''

அவர் உறுத்து பார்த்தார். சிரித்தார். அவன் குதிரையை தாண்டிக் கொண்டு தன் குதிரையை வேகமாக விரட்டிக் கொண்டு முன்னேறிப் போனார். அட முட்டாளே என்ற ஒரு முகபாவம் அவரிடத்தில் இருந்தது.

பெரிய பட்டிணத்தை நெருங்கினார்கள். மாடமாளிகைகள் இருந்தன. ஆளாளுக்கு ஒரு பெயர் சொன்னார்கள். ஆனால் சோழப்படைகள் நெருங்கியதும் அங்கங்கே சில கலகங்கள் இருந்தன. எதிர்ப்புகள் இருந்தன. கோட்டை வாசலை உடைத்துத் திறக்க வேண்டியிருந்தது. அகழியில் கொம்பு நட்டார்கள். துளையிட்ட மரப்பலகையை அதில் மாட்டினார்கள். எதிர்பக்க மாளிகை கோட்டைச் சுவருக்கு போனார்கள். வளைந்த ஆணிகளை ஓங்கி அடித்தார்கள். உள்ளே இறக்கினார்கள். கையில் வளையம் கட்டி கழற்றி வீசினார்கள். முக்கால் நாழிகையில் கயிற்றுப் பாலம் தயார் செய்தார்கள். ஆனால் கோட்டை உள்ளிருந்து அம்பு வீச்சு வந்து கொண்டிருந்தது. துணி கட்டி நூற்றுக்கணக்கான எரி அம்புகள் உள்ளே விட்டார்கள். அவை கலவரத்தை ஏற்படுத்தின. அங்கங்கே தாக்கி நெருப்பு உண்டாக்கின. உள்ளே நெருப்பு அணைக்கப் போராடுகிறபோது உடம்பில் எருமைத் தோல் கவசம் அணிந்து வெளியே மதில் சுவருக்கு ஏறினார்கள். சுவரோடு ஒட்டி நின்றார்கள். உள்ளே குதிக்காமல் எண்ணெய் சுருளைப் பற்ற வைத்து உள்ளே வீசினார்கள். ஒன்று, இரண்டு, மூன்று என்று ஒரே ஆள் நாற்பத்தைந்து எரிபந்துகளை உள்ளே அனுப்பினான். உள்ளே நாலாபக்கமும் தகதகத்து எரிந்தது தெரிந்தது. அம்மாதிரி பத்து, பதினைந்து பேர்கள் நூல் ஏணியில் ஏறி சுவரில் ஆணி அடித்து அங்கே தொங்கியபடி உள்ளுக்குள் எரி பந்துகள் வீச அங்கே காவல் குளருபடியாயிற்று.

இராஜேந்திரர் மதில் சுவரில் எதிர்ப்பு இல்லை என்று உற்றுப் பார்த்தபடி உள்ளே உள்ளே என்று கை காட்டினார். சட்டென்று அந்த

வீரர்கள் தாண்டினார்கள். உள்ளே குதித்தார்கள். யாரோ ஒருவனை குத்தி வெளியே போடுவது தெரிந்தது. அவன் அகழியில் விழுந்தான். அவன் அகழியில் விழ முதலை வந்தது. முதலைகளை அம்பால் அடித்தார்கள். இந்தக் கரையில் உள்ளவர்கள் நீரில் குதித்தார்கள். அடிபட்டு விழுந்தவனை அள்ளி எடுத்துக் கொண்டார்கள். மேலே கொண்டு வந்தார்கள்.

வயிற்றில் கத்தியால் குத்தப்பட்டிருக்கிறான். துணியைக் காயத்தில் சொருகி எடுத்துக் கொண்டு ஓடினார்கள். உடனடி வைத்தியம் அவனுக்குப் பார்க்கப்படும். சொல்லி நூல் ஏணியில் ஏறி மதில் சுவரோரமே நடந்து நூற்றுக் கணக்கான வீரர்கள் மதில் சுவரோடு ஒட்டிக் கொண்டார்கள். உள்ளே இறங்கி இருபது வீரர்கள் கடுமையாகச் சண்டையிடுவது போல் தெரிகிறது உள்ளே போங்கள் என்று இராஜேந்திரர் கை காட்ட, அந்த நூறு வீரர்கள் உள்ளே போனார்கள். இன்னும் மீதி நூறு வீரர்கள் நூல் ஏணியில் ஏறி சுவரில் ஒட்டிக் கொண்டார்கள். பெரும் அலறல் சப்தமும் அந்த நடுநிசியில் கோரமாகக் கேட்டது. எல்லா இடங்களிலும் சுருள் புகைத்தீ எரிந்து கொண்டிருந்தன. தீப்பந்தங்கள் பிடித்து வீரர்கள் பெரும் கூச்சலோடு அந்த கோட்டைக்குள் நுழைந்தார்கள்.

இராஜேந்திர சோழர் நுழைய எண்ணம் கொண்டபோது தளபதிகள் தடுத்து நிறுத்தி விட்டார்கள். உபதளபதிகள் விரைவாய் நீரில் இறங்கினார்கள். இந்த எதிர்ப்பு இராஜேந்திரருக்குக் கோபம் கொடுத்தது. குத்துப்பட்டவன் மருத்துவ உதவி செய்தும் செத்துப் போனான் என்றதும் இன்னும் கோபம் தலைக்கு ஏறியது.

அந்தக் கோட்டையில் அந்த அரண்மனையில் ஒட்ட தேசத்து மன்னன் இல்லை. அவன் வடக்கே இன்னொரு மன்னனோடு தஞ்சம் அடைந்து ஒன்றுசேர்ந்து கொண்டான் என்ற செய்தி வந்தது. அவன் கொடி உயரே பறந்தது. அறுக்கப்பட்டது. அவன் பெண்டுகள் யாரும் இல்லை. குழந்தைகள் இல்லை. அரண்மனை சேவகர்கள் மட்டுமே வரிசையாய் நிற்க வைக்கப்பட்டார்கள். ஒரு வாரிசு கூட இல்லை. சகலரும் தப்பித்து இருக்கிறார்கள்.

''என்ன செய்ய.?''

''செய்வதற்கு என்ன இருக்கிறது. இந்த இடத்தில் ஏன் கண்ட இடத்தில் புலிச்சின்னம் நடுங்கள். மறுபடியும் வடக்கு நோக்கி நகரலாம். இங்கு மூன்று நாட்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். முழு பலத்தோடு தாக்கலாம். அரண்மனையில் எல்லா இடத்திலும்

சோதனையிடுங்கள். ரகசிய அறை இருக்கிறதா என்று பாருங்கள்.''

பின் சமஸ்கிருதத்தில் அலறிப் பேசும் குரல் கேட்டது. அந்த சமஸ்கிருதமும் இனிமையாக இருந்தது. ஆனால் என்ன சொல்கிறார் என்று புரிந்தது.

''அடைக்கலம் அடைக்கலம்.. அந்தணப் பெண்ணாகிய என்னை சோழ தேசத்து வீரர்கள் ஆபாசமாய் அழைக்கிறார்கள். என்னை அசிங்கப்படுத்துகிறார்கள். என் அனுமதி இல்லாமல் என் வீட்டுப் பூஜை அறைக்குள் நுழைகிறார்கள். என் புருஷனை அடிக்கிறார்கள். எனக்கு நான்கு பெண்கள். பருவ வயது. அவர்களை அடையத் துடிக்கிறார்கள். நாங்கள் அந்தணர்கள்.'' உரக்க கத்தினாள்.

பல வீரர்கள் இழுத்துப் பிடித்துக் கொண்டு ஓடிவந்து கிருஷ்ணன் ராமன் காலில் விழுந்த பெண்ணைத் தூக்கினார்கள். சேனாதிபதி கிருஷ்ணன் ராமன் முகத்தில் தர்மசங்கடம் தெரிந்தது. அவர் தர்மசங்கடத்தை தொலைவிலிருந்து இராஜேந்திரர் கூர்மையாக கவனித்தார். சிரித்தார்.

''அவரிடம் வழக்கு போயிருக்கிறது. எனவே, அவரே தீர்த்து வைப்பார். எனவே உங்கள் வேலையை கவனியுங்கள்.''

இது கேலியா, குத்தலா அல்லது அன்பான தழுவலா யாருக்கும் புரியவில்லை. ஆனால் சித்தப்பாவிற்குப் புரிந்து விட்டது போல் இருக்கிறது. முகம் கோபத்தில் தவித்தது.

யுத்த நேரத்தில் அந்தணன் என்று சொல்லிக் கொண்டு எப்படி ஒரு உரிமையோடு வரலாம் என்ற கோபம் வந்தது. ஆனாலும் அதை வெளிப்படுத்தாது அமைதியாக இருந்தார். கையை உதறி உள்ளுக்குள்ளிருந்து வெற்றிலையும் பாக்கும் எடுத்து பாக்கு கொட்டையை சீவி சிறிதாக்கி அதை வாயில் அடக்கிக் கொண்டு பிறகு சுண்ணாம்பு தடவிய வெற்றிலையைக் கிழித்து வேகமாக வாயில் திணித்துக் கொண்டார். சாறு இறங்க அமைதியானார். அந்தப் பெண்ணையே பார்த்துக் கொண்டிருந்தார்.

சரணாகதி சேனாதிபதியிடம் போய்விட்டதால் அவளைத் தொந்தரவு செய்த வீரர்கள் மெல்ல விலகினார்கள். ஒரே ஒரு உபதளபதி மட்டும் அங்கே நான் இதற்கு சாட்சி என்பது போல கை கட்டி நின்றிருந்தான்.

''என்னப்பா என்ன நடந்தது.?''

''வீட்டிற்குள் சோதனையிடச் சொன்னோம். மறுத்துவிட்டார்கள்.

இழுத்து வெளியே எறிந்தோம். கத்தி தடை செய்தார்கள். உள்ளே ஆண் பிள்ளை அமர்ந்திருந்தது தெரிந்தது. கொண்டு வந்து கூடத்தில் நிறுத்தினோம். ஏதோ யோகம் செய்கிறார் போல. இடையறாது மந்திரஜபம் செய்கிறார் போல. அதைக் கலைத்து விடக்கூடாது என்று இவர்கள் கத்தினார்கள். ஆனால் நாங்கள் கேட்கவில்லை. அவர் சண்டையிட மட்டும் அல்ல, எழுந்து நிற்கவும் சிரமப்படுகிறார். கிழவர் அல்ல. மத்திம வயதினர். இருந்தாலும் உபவாசத்தால் மெலிந்திருக்கிறார்.''

''சரி, அது யார் பெண்கள்.?''

''இவர்களுடையப் பெண்களாம். நால்வருக்கும் திருமணம் ஆகவில்லை. அவர்கள் ஏதோ காளியை வைத்து பூஜை செய்கிறார்கள். என்ன என்று புரியவில்லை. பலி கொடுக்கும் இடம் போல அவர்கள் வீட்டு முற்றம் தெரிகிறது.''

ஒட்ட தேசத்தில் பலி கொடுப்பது என்பது சர்வ சாதாரணம். விதம் விதமாக தெய்வங்களுக்கு நரபலி உட்பட பல பலிகள் கொடுப்பது என்பது வழக்கம். இவர்கள் எந்தக் குழு என்றுத் தெரியவில்லை. ஆனால் நான்கு பெண்களும் மிக அழகாக இருந்தார்கள். அவர்கள் ஒட்ட தேசத்து உடுப்பு அணிந்திருந்தார்கள். இடுப்பில் பாவாடை. நெஞ்சில் கை அகல துணி. பிரித்து விடப்பட்ட தலைமுடி. நெற்றியில் செஞ்சாந்து. உதட்டு அருகே மச்சம். கழுத்தில் சங்கு மாலை. கைகளில் சங்கு அறுத்த வளையல்கள். காதுகளில் சோழி. கழுத்தில் மட்டும் தங்கம் சேர்த்த வைரம் மின்னியது. எல்லோரும் இடது பக்கம் மூக்கு குத்தியிருந்தார்கள். அந்தப் பெண்மணி மோதிரம் போட்டுக் கொண்டிருந்தாள். தங்கச் சங்கிலி அணிந்திருந்தாள். வசதியான வாழ்க்கை என்பது தெரிந்தது. உடல் வாளிப்பு இருந்தது.

''என்ன பூஜை செய்கிறீர்கள்.?''

''காலபைரவர்.''

''ஓ..சிலா ரூபமா?''

அந்தப் பெண்மணியும், கிருஷ்ணன் ராமனும் வடமொழியில் பேச ஆரம்பித்தார்கள். பரதகண்டத்தின் இணைப்புக்கு வடமொழி ஒரு துணையாக இருந்தது. வணிகர்கள் கூட இந்த வடமொழியில் பேசுவார்கள். பலருக்குத் தெரிந்திருந்தது. எல்லா மொழிகளிலும் இந்த வடமொழியின் ஆற்றல் நுழைந்திருந்தது. அவரவர் மொழியில் பேசினாலும் அந்நியரோடு பேச இந்த வடமொழியை கற்கத் துவங்கி அதில் பேசினார்கள்.

''ஆமாம் சிலாரூபம்.''

'' பைரவர் என்றால் பின்னே பைரவம் உண்டா, அல்லது வேறு ஏதேனுமா?''

''இல்லை. காலபைரவர் என்பதால் பின்னே நாயும், நிர்வாணமான ஆண் உடலும், கையில் சூலமும், திறந்த நெற்றிக் கண்ணும் கடவுளுமான பிரதிமை.''

''வழிபாட்டின் நோக்கம் என்ன.?''

''எதிரிகள் வரக்கூடாது என்று தடுத்தல்.எதிரிகளை துவம்சம் செய்தல்''

''அதாவது ?''

''சத்ரு நாசனே.''

''சத்ரு நாசனேவா? இங்கே இவ்வளவு பெரிய படை இருக்கும் போது காலபைரவர் என்ன செய்து கொண்டிருக்கிறார். சத்ருக்களை வதைக்காமல். ஒருவேளை நாங்கள் சத்ருக்கள் இல்லையோ. ''

அந்தப் பெண்மணி அமைதியாக இருந்தாள்.

''மூலமந்திரம் சொல்லுங்கள்''

''ஓம் நமோ பகவதே காலாய கோராய வஜ்ர த்ரும்ஷ்டாய
சத்ரு நாசனாய சர்வ பூதாத்மனே ஹூம் பட் ஸ்வாஹா''

''இது காலபைரவர் மூல மந்திரம் அல்லவா.''

''ஆமாம். இதைக் கொண்டுதான் பூஜை செய்கிறீர்களா?''

''ஆமாம்.''

''நீங்கள் எல்லோருமா?''

''ஆமாம்''

''இந்தப் பெண்களுமா?''

''ஆமாம்''

''இந்த இளம் பெண்களை காலபைரவர் பூஜையில் ஏன் ஈடுபடுத்தினாய்?''

''என்ன தவறு அதில்?''

''என்னவென்று வேண்டிக் கொள்வார்கள்''

''நல்ல புருஷன் வேண்டுமென்று வேண்டிக் கொள்வார்கள்''

''கால பைரவரிடம் நல்ல புருஷனா...?''

''ஆமாம். சந்தான உற்பத்தி தரவேண்டும் என்றும், தனக்கு

பிள்ளைப் பேறு தரக்கூடிய வீரம் மிக்க, திடம்மிக்க, தன் காமத்தை தன் உடம்பிலிருந்து நீக்கக் கூடிய புருஷன் வரவேண்டுமென்று வேண்டிக் கொள்வார்கள்.''

''அறிவுள்ளவன், அழகுள்ளவன் வேண்டுமென்று வேண்டிக் கொள்ள மாட்டார்களா?''

''அறிவும், அழகும் உலகத்தில் அழிவுக்குத்தான் பயன்படுகின்றன''

''ஆஹா..இதென்ன புதிய கூற்று. அழகில்லாதது அழிவில்லாதது உலகில் இருக்கிறதா.''

மிக ஆச்சரியமாக சித்தப்பா கிருஷ்ணன் ராமன் கேட்டார். மன்னர் மெல்லத் தன் தேரை விட்டு இறங்கி சித்தப்பாவிற்கு அருகே வர, அவருக்கு அங்கே ஆசனம் போடப்பட்டது. அந்தப் பெண்ணுக்கு அவர்தான் மாதாண்ட நாயகர் இராஜேந்திர சோழர் என்றுத் தெரியவில்லை. குடையும், பதாகையும் கொண்டு வர முயற்சித்தபோது வேண்டாம் போ என்று தள்ளிவிட்டார். அவரும் வெய்யிலில் அந்தப் புல் தரையில் சாதாரண மனிதனாய் அமர்ந்திருந்தார்.

உலகில் அறிவுள்ளது இருக்கிறது. அது மாயை. உலகில் அழகுள்ளது இருக்கிறது. அது மிகப் பெரிய மாயை. இந்த அறிவு என்ற மாயையும், அழகு என்ற மாயையும்தான் இந்த உலகத்தை கோரமாக்கிக் கொண்டிருக்கின்றன. வெறும் வம்ச விருத்தி மட்டும் பண்ணிக் கொண்டிருந்தால் இந்த விஷயம் இந்த உலகம் இத்தனை அல்லல்படாது.''

''ஆக, ஆடுகளும், மாடுகளும் போல, புலிகளும், சிங்கங்களும், யானைகளும் போல மனிதரும் இயங்க வேண்டும் என்கிறாய்.''

''ஆமாம். அது ஒரு வகை விலங்கு. நீ ஒரு வகை விலங்கு. உனக்கும், அதற்கும் என்ன வித்தியாசம்.''

கை நீட்டி அந்தப் பெண் பேசினாள். பலபேருக்குக் கோபம் வந்தது. பற்கள் கடித்துக் கொண்டார்கள். ஆனால் கோல் கொண்டு சரி செய்வது போல அமைதி என்ற செய்கையை இராஜேந்திரர் காட்ட, அவர்கள் பின்னடைந்தார்கள்.

''என்னை விலங்கு என்று ஏன் சொல்கிறாய்?''

''உன் மக்கள் தானே ஒரு பூஜையைக் கலைத்தது. ஒரு தேசத்திற்குள் வன்முறையாய் நுழைந்தது. இது உன்னுடைய மடம் அல்லவே. உன் மடம் தெற்கே உள்ளது. என் மடத்திற்கு வந்து என் உணவை நீ ஏன் பறிக்கிறாய்.''

''அதற்கு நான் காரணம் சொல்ல வேண்டுமா? சொன்னால் அதை நீ ஏற்பாயா என்றுத் தெரியவில்லை. ஆனால் நான் உனக்கு காரணம் சொல்லப் போவதில்லை. உங்கள் ஒட்ட தேசத்து மன்னன் என்ன செய்தான், செய்து விட்டு எங்கே தப்பி ஓடிப் போனான் என்றுத் தெரியவில்லை. நீ சொல்வது விலங்கு என்பது எனக்குப் பொருந்துமோ பொருந்தாதோ, உன்னுடைய மன்னனுக்குப் பொருந்தும். பல் காட்டிச் சீறிவிட்டு உள்ளுக்குள் புகுந்து சட்டிப் பானையை உருட்டி விட்டு அந்தக் கடுவன் பூனை கையில் கோல் எடுத்தவுடன் எங்கேயோ ஓடிப் போய் பதுங்கிவிட்டது.''

வடமொழி தெரிந்த உபதளபதிகள் கரகோஷம் செய்தார்கள்.

''ஆக, விலங்கு உங்கள் மன்னன்தான். நாங்களல்ல. நாங்கள் மனிதர்கள். எங்கள் வீட்டில் நுழைந்த கடுவன் பூனையின் முதுகை உடைக்க வந்திருக்கிறோம். நாங்கள் பெண் கொடுத்த இடம். அங்கே தொந்தரவு செய்தால் மாடாக இருக்க மாட்டோம். உனக்கு நான்கு பெண்கள். நான்கு பெண்களில் நான்கு பேருக்கு திருமணம் செய்து வைக்கிறாய். ஒருவர் வீட்டில் பகைவர் நுழைந்தால் மற்ற மூன்று மாப்பிள்ளைகளும் என்ன செய்வார்கள். மற்ற மூன்று உறவுகளும் முதல் பெண்ணுக்குத் தொந்தரவு என்று வந்தால் என்ன செய்வார்கள் என்பதை யோசித்து விட்டு பேசு.

குடும்பம் என்பது ஒரு வரைமுறைக்கு உட்பட்டது. குடும்பம் என்பது ஒரு வரைமுறைக்கு உட்பட்டது போல ஒரு தெரு என்பது ஒரு வரைமுறைக்குட்பட்டது. ஒரு தெரு ஒரு வரைமுறைக்குட்பட்டது போல ஒரு கிராமம் ஒரு வரைமுறைக்கு உட்பட்டது . ஒரு கிராமம் ஒரு வரைமுறைக்கு உட்பட்டது போல, ஒரு நகரமும், ஒரு பட்டிணமும், தலைநகரமும், அந்த தேசமும் ஒரு வரைமுறைக்கு உட்பட்டன. உங்கள் மன்னன் அடாது செய்ததால் நுழைந்திருக்கிறோம். என்னை விலங்கு என்று சொன்னது தவறு. விலங்கு உன் மன்னன். ஆனாலும் உங்கள் வீட்டுப் பூஜையைக் கெடுத்துவிட்டோம் என்று வந்திருக்கிறாய். கோபப்படுகிறாய். அது எனக்குப் புரிகிறது. உன் வீட்டுப் பூஜையை இனி யாரும் கெடுக்க மாட்டார்கள். நீ உன்னுடைய கணவனை அந்த இடத்தில் உட்கார வைக்கலாம்.''

''அது எனக்குத் தெரியும். ஆனால் கெடுத்தவனை விடக்கூடாது.''

''என்ன செய்ய வேண்டும் என்கிறாய்.''

''சிரச்சேதம் செய்ய வேண்டும்.''

''முடியாது''

உட்கார்ந்த இடத்திலேயே மிக வேகமாக கிருஷ்ணன் ராமன் அதட்டினார்.

''சிரச்சேதம் செய்யாவிட்டால் அவனை நான் குத்திக் கொல்வேன்''

எதிரே கை கட்டி நின்றிருந்த அந்தத் தளபதியை அவள் இடுப்பிலிருந்த வாள் உருவி நேராகப் பாய்ந்தாள். ஆனால் அவன் சாமர்த்தியக்காரன். சட்டென்று கத்தியோடு கூடிய அவள் கையை நொறுங்கப் பிடித்தான். வலதுகையை முறுக்கினான். அவள் வலியில் துடித்தாள். இழுத்து பளீர் என்று அறைந்தான். கத்தி ஒரு பக்கம், அவள் ஒரு பக்கமாகத் தரையில் விழுந்தாள். அந்த நான்கு பெண்களில் ஒரு பெண் கத்தியை தூக்கிக் கொண்டு அந்த தளபதியை நோக்கி ஓடிவந்தது. கத்தியால் குத்த முயற்சித்தது. மறுபடியும் அந்தப் பெண்ணையும் அவன் குப்புறச் சாய்த்தான். பிருஷ்டத்தில் எட்டி உதைத்தான். அந்தக் கத்தி தரையில் இருந்தது. தரையில் இருந்த கத்தியை இன்னொரு பெண் எடுக்க ஓடிவந்தாள். ஒரு வீரன் அதை எட்டி உதைத்தான். எட்டி உதைத்தது நான்காவது பெண்ணுக்குப் போயிற்று. சிறு பெண். பத்து வயதுகூட இருக்காது. அவள் கத்தியை நின்ற இடத்திலேயே மிக வேகமாக அந்த உபதளபதி நோக்கி வீசினாள். அந்த உபதளபதி சட்டென்று அந்தக் கத்தியை பிடித்துக் கொண்டான். அவன் விரல்களில் ரத்தம் வழிந்தது.

இராஜேந்திர சோழர் கோபமானார். ''ஏய்...'' என்று கத்தினார். சித்தப்பா கிருஷ்ணன் ராமன் அவர் தொடையில் கை வைத்து அமைதி என்றார்.

அந்தப் பெண்களை மறுபடியும் தூக்கி நிறுத்தினார்கள். வரிசையாக்கினார்கள். பிரம்பம் கொடியால் பின் கை கட்டினார்கள். சுருக்கு போட்டார்கள். எமன் வந்தாலும் அந்தச் சுருக்கை எடுக்க முடியாது. அந்தப் பெண்கள் அழத்துவங்கினார்கள். பத்து வயதுச் சிறுமியின் முகத்தைத் தூக்கி ஒரு வீரன் பளீர் என்று அறைந்தான். அவள் கன்னத்தில் பலமாக அடி விழுந்தது. அவள் மறுபடியும் சரிந்து விழுந்தபோது தலைமுடியைக் கொத்தாகப் பிடித்துத் தூக்கி நிறுத்தினார்கள். மறுபடி அடித்தார்கள்.

''ஒட்டதேசத்தில் போர் என்பது பெண்களோடு என்று நமக்குத் தெரிந்து விட்டது.''

சுற்றியிருந்த வீரர்கள் வாய்விட்டு சிரித்தார்கள். இராஜேந்திரர் பேச்சுக்கு கை கொட்டினார்கள்.

''என்ன செய்யப் போகிறீர்கள் சேனாதிபதி?'' என்று திரும்பி கேட்டார்.

''காலபைரவர் பலி கேட்கிறார். நரபலி கேட்கிறார். இந்த நான்கு பெண்கள் எதிரிலும் இந்தப் பெண்ணை மண்டியிட்டு இவ்ளை சிரச்சேதம் செய்யும்படி சொல்கிறேன். சிரச்சேதம் இவளைத் தூக்கி வந்த அந்த வீரனே செய்யட்டும்.''

அந்த வீரன் வெளிறினான்.

''இல்லை ஐயா'' என்றான். இராஜேந்திரர் ஆச்சரியத்துடன் பார்த்தார்.

''என்னோடு சண்டையிடுகிறவனை நான் குத்திக் கொல்வேனேத் தவிர ஒரு பெண்மணியை நான் வெட்ட விரும்பவில்லை. இவளை சிரச்சேதம் செய்ய எனக்கு விருப்பம் இல்லை. என்னால் இந்தப் பெண்களைக் கெடுத்துச் சீரழிக்க முடியுமே தவிர குத்திக் கொல்ல முடியாது. இது என் இயல்பு. என்னை மன்னித்தருள வேண்டும்.''

''நான் கட்டளையிட்டாலும் இவளை கொல்ல மாட்டாயா.?''

''மண்டியிட்டு என்னை இந்த இடத்திலிருந்து அகற்றிவிடுங்கள் என்று கெஞ்சுவேனே தவிர கொல்வதற்குத் தயங்குவேன்''

''நல்லது போ. ''

இராஜேந்திரர் அவனை விடுவித்தார். அவன் கையிலுள்ள காயத்திற்கு மருந்து போட வேகமாக ஓடினான்.

''சிரச்சேதம் செய்ய மாட்டேன் என்று போய்விட்டான் இந்த பெண்களுக்கு எதிரே. இது கொஞ்சம் மாற்றுக் குறைவு அல்லவா. நமக்குச் சிறிய அவமானம் அல்லவா''

இராஜேந்திரர் கேட்க, சித்தப்பா ஆம் என்று தலையசைத்தார்.

''நான் கொன்று போடட்டுமா இந்த நாயை?''

''வேண்டாம். இது மிகப் பெரிய மந்திரசக்தி கொண்ட குடும்பம். யார் கொன்றாரோ அவர்கள் மீது பூதப்பிசாசை ஏவிவிடுவார்கள். அவர்களுக்குத் தெரியும். அப்படிக் கொல்வது என்றால் இவர்கள் ஐந்து பேரையும் கொல்ல வேண்டும். கொலை செய்த பிறகும் சூட்சம ரூபத்தில் இவர்கள் வேலை செய்வார்கள். எதிர்ப்பார்கள். ''

''அப்பொழுது என்ன செய்வது?''

''ஒரு தவறு நேர்ந்து விட்டது. அந்த வீட்டிலே கை வைத்திருக்கக் கூடாது. அந்த இடத்திற்குப் போயிருக்கக் கூடாது. மந்திரப் புண்ணியமான ஒரு இடத்தில் மந்திரம்தான் நுழைய வேண்டும்.

கத்தியும், வேலும் நுழையக் கூடாது. எங்கு வேல், வாள் இருக்கிறதோ அங்கு மந்திரம் நுழைய முடியாது. வேலும், வாளும்தான் நுழைய வேண்டும். இந்தப் பெண்களை இழுத்து வந்ததும், அவளுடைய உபவாசம் இருக்கும் கணவனைத் தூக்கி முற்றத்தில் வைத்ததும், அந்தப் புண்ணியமான காலபைரவர் சன்னதிக்குப் போனதும் தவறு.''

''நான் அதைப் பார்க்க வேண்டுமே.''

''பார்க்கலாம். இழுத்து வாருங்கள் அவளை''

அந்தப் பெண்மணி தலைவிரி கோலமாக இருந்தாள். இழுத்து வந்தார்கள். சித்தப்பா அவளுக்கு அருகே நடந்து போனார். அப்பொழுதுதான் அவன் முதன் முதலில் சித்தப்பாவின் இடுப்பில் தொங்கியிருந்த அந்த பட்டையான வாளை கவனித்தான்.

சித்தப்பா அந்த வீட்டிற்குள் நுழைய, மாதாண்ட நாயக்கர் அந்த வீட்டிற்குள் நுழைந்தார். பின்னே நாலைந்து பாதுகாப்பு படையினர் நுழைந்தார்கள். அவன் பின்னே நுழைந்தான். நீ வரவேண்டுமா என்று பாதுகாப்புப் படை வீரன் கேட்க, கிருஷ்ணன் ராமனுக்கு என்று சொல்ல, மற்றவன் அந்த வீரனை அதட்டி வரட்டும் என்று சொல்லிவிட்டான். அவர்கள் உள்ளே நுழைந்தார்கள்.

அந்த நான்கு பெண்களும் திமிறிக் கொண்டிருந்தார்கள். உள்ளே கிட்டத்தட்ட மயங்கிய நிலையில் உடம்பெல்லாம் குங்குமம் தடவி, முகமெல்லாம் குங்குமம் தடவி, கண்கள் வெளுப்பாக இருக்க, உதடுகள் வெளுப்பாக இருக்க ஒரு உருவம் சாய்ந்து உட்கார்ந்திருந்தது. மெல்ல இவர்களைப் பார்த்துச் சிரித்தது. அந்தப் பெண்கள் திமிறினார்கள். எகிறினார்கள். ஒருவர் கையை அவிழ்த்து விட, அவள் வேகமாகப் போய் தண்ணீரை எடுத்து அந்த மனிதருக்கு குடிக்க கொடுத்தாள். பிறகு மணி அடித்தாள். ஒரு மூடியிருந்த வாளியைத் திறந்து உள்ளுக்குள் இருந்த மாமிசப் பதார்த்தத்தை நைவேத்யம் செய்தாள். நெய் விளக்கை பெரும் சுடராக ஏற்றி அந்தத் தண்டு விளக்கை உயரே காட்டினாள். இராஜேந்திர சோழரும், சித்தப்பாவும் கை கூப்பினார்கள். பதினோறு அடி உயரம். நடு வீட்டிற்குள் ஒரு அறையின் சுவற்றில் மிக அழகாகச் செய்யப்பட்ட கற்சிலை, காலபைரவரின் கோர ரூபம் இருந்தது. நாயினுடைய வடிவமே நிஜமாக இருந்தது. கண்கள் உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்தன. முகத்தில் ஒரு உக்கிரம் இருந்தது. நிர்வாணமான சிலை. ஆனாலும் தொடையின் மீது மான்தோல் கட்டப்பட்டிருந்தது.

அவன் காலபைரவர் உபாசனைப் பற்றி படித்திருக்கிறான். சிலை

நிர்வாணமாக இருப்பினும் இடது தொடையில் மான்தோல் இருக்கும். அந்தத் தொடையில் காலபைரவர் விருப்பமானவர்களை உட்கார வைத்துக் கொள்வார். அப்படி உட்கார வைப்பதற்குத்தான் மான் தோல் போடப்பட்டிருக்கிறது. காலபைரவர் உடம்பில் உட்கார்ந்துவிட முடியாது. அந்தச் சூடு தாங்காது. மான் தோல் அந்தச் சூட்டைத் தணித்து உட்கார வைக்கும். ஒரு சுகாசனமாக வைக்கும். அனேகமாய் காலபைரவர் தொடையில் பெண்களை உட்கார வைப்பார்கள்.

கழுத்தில் மண்டை ஓடு. இடுப்பில் நாகாபரணம், கைகளில் நாகம். கரங்களில் வளையம். சூலம். மழு. வர ஹஸ்தம், அபய ஹஸ்தம் என்று நான்கு கரங்கள் இருந்தது. செஞ்சடை விரிந்திருந்தது. நெற்றியில் கூர்மையான நெற்றிக் கண் இருந்தது. மெல்லிய கோரைப்பற்கள் இருந்தன.

அந்தப் பெண் மாதாண்ட நாயகரை திரும்பி பார்த்துவிட்டு நெய் விளக்கை மேலும் கீழும் ஆட்டியது.

''மாதாண்ட நாயகரைச் சூழ்ந்து இருங்கள்'' என்று கிருஷ்ணன் ராமன் வேகமாய் கட்டளையிட, அந்தப் பாதுகாப்பு வீரர்கள் மாதாண்டருக்கு ஒரு சிறிய இடைவெளி விட்டுவிட்டு சுற்றி நின்று கொண்டார்கள். ஆனால் அந்தப் பெண் அவர்கள் அப்படி நிற்பார்கள் என்று எதிர்ப்பார்க்கவில்லை போலிருக்கிறது. கையிலுள்ள கனத்த அந்தத் தண்டு நெய் விளக்கை மாதாண்ட நாயகரை நோக்கி எறிந்தது. இராஜேந்திரர் மீது பட்டிருந்தால் அது ரத்த காயம் ஏற்பட்டிருக்கும். ஆனால் வில்லவன் கோதை என்கிற அந்த உபதளபதி சட்டென்று அதைத் தன்னுடைய ஈட்டியால் தட்டிவிட்டான். அது கீழே விழந்தது.

''அடங்கவே மாட்டீர்களா, அத்தனை துணிச்சலா, மந்திர ஜபம் செய்தால்.. இம்மாதிரி உபவாசனை செய்தால் மன்னர் மீதும் எறிந்து விடுவீர்களா. உங்களுக்கு தவறான வழி காட்டப்பட்டிருக்கிறது. ஒரு தேசத்தில் மன்னன்தான் சிறந்தவன். மன்னன்தான் முக்கியம். மன்னன்தான் உயிர் நாடி. மன்னன்தான் அரசாங்கம். மன்னன்தான் பொருளாதாரம். மன்னன்தான் மதம். மன்னன்தான் கடவுள்.''

பல்லை கடித்துக் கொண்டு சித்தப்பா உரக்கச் சொன்னார்.

''ஒரு அச்சாணியில் தான் தேர் சக்கரம் சுழல வேண்டுமே தவிர, பதினைந்து அச்சாணியில் சக்கரம் சுழன்றதாக சரித்திரமே இல்லை. அறிவிலிகளே அறிவிலிகளே''

சித்தப்பா உரக்க கத்தினார். உள்ளே உட்கார்ந்திருந்தவன் பண்டிதன் போலும். அவனுக்குப் புரிந்து விட்டது. சித்தப்பாவை உற்றுப்

பார்த்தான். கை கூப்பினான்.

''இல்லை. நான் விடுவதாக இல்லை. அந்தப்பக்கம் போன பிறகு என்ன செய்வாய் என்று தெரியும். நானும் மந்திர வித்தை கற்றவன்தான். நீ காலபைரவரைத் தூண்டிவிடுவாய். பூதங்களை ஏவிவிடுவாய். என் மன்னனை வேறு விதமாகத் தாக்குவாய். விட மாட்டேன். உன்னுடைய இடத்தை நிலைகுலைய வைப்பேன்.

ஏய்...அந்தப் பெண்மணியை மண்டி போட வையுங்கள்.''

அவள் தலைமுடியை இழுத்து, தரையில் வைத்து முன் பக்கம் உள்ள கருங்கல்லைப் பெயர்த்து அந்த முடியை அதன் மீது வைத்தார்கள். இப்பொழுது அவள் கழுத்து தெளிவாகத் தெரிந்தது. மாலைகள் மறைத்துக் கொண்டிருந்தன. மாலைகளை ஈட்டியால் தள்ளி தலைமுடி மீது போட்டார்கள். பின் கை கட்டப்பட்டிருந்தது. நிலைகுலைந்து போயிருந்தாள்.

அந்தப் பெண்கள் கத்தத் துவங்கினார்கள். சித்தப்பா குனிந்தார். அந்தப் பெண்ணைப் பார்த்து பேசினார்.

''அடியேய், கிழவி என் மன்னன் மீது மூன்று முறை தாக்குதல் நடத்தியதால் உன்னைக் கொல்லப் போகிறேன். ஒரு தேசத்தில் ஒரு மன்னன்தான் அச்சாணி. அவன் மீதுதான் சக்கரம் சுழல வேண்டும். பல அச்சாணிகள் உள்ள சக்கரத்தை இதுவரை நான் பார்த்ததில்லை. மன்னன்தான் ஒரு தேசத்தின் அதிபதி. மன்னன்தான் ஒரு தேசத்தின் பொருளாதாரம். மன்னன்தான் ஒரு தேசத்தின் சேனாபதி. மன்னன்தான் ஒரு தேசத்தின் படைத் தலைமை. மன்னன்தான் ஒரு தேசத்தின் மதம். மன்னன்தான் ஒரு தேசத்தின் கடவுள். இதுதான் சோழ நாகரீகம். எல்லா மதங்களும் அவருக்கு மண்டிபோட்டுத்தான் ஆகவேண்டும். எல்லா சன்னியாசிகளும் அவர் முன்பு கை கூப்பித்தான் ஆகவேண்டும். இதுதான் பரத சரித்திரம். மன்னனை எதிர்த்து சன்னியாசியோ, மதமோ நடந்து வந்ததே இல்லை. மன்னன் என்பவன் விஷ்ணுவிற்குச் சமமானவன். விஷ்ணுவின் மீது ஆயுதப் பிரயோகம் செய்ததால் நான் உன்னை சிரச்சேதம் செய்கிறேன். இந்த இடத்தை நாசம் செய்கிறேன்.''

அந்தப் பெண்கள் அலறினார்கள். வடமொழியில் மிகத் தெளிவாக அவர் பேசுவதைக் கேட்டுக் கதறினார்கள். வெளியே உள்ள கூட்டம் உள்ளே நுழைய முற்பட்டது. ஆறேழு உபதளபதிகள் உள்ளே நுழைந்தார்கள்.

''கிருஷ்ணன் ராமனே''

நிதானமாக இராஜேந்திரர் அழைத்தார்.

''என்னை விட அதிகமான கோபத்தோடு இருக்கிறீர்களே. நீங்கள் அப்படிப்பட்டவர் இல்லையே. என்ன காரணம்.''

''இல்லை. நமது வீரர்கள் மிகச் சரியான இடத்தில் கை வைத்து விட்டார்கள். மிகச் சரிய்யான இடத்தைக் கண்டுபிடித்து விட்டார்கள். இது கண்டுபிடிக்காமல் போயிருந்தால்..''

''போயிருந்தால்..''

''ஒருவேளை நமக்கு தோல்வி ஏற்பட்டிருக்கும். நீங்கள் கொலை செய்யப்பட்டிருப்பீர்கள். ''

பாதுகாப்பு வீரர்கள் மிரண்டார்கள். இன்னொரு மன்னரை நினைத்துக் கொண்டார்கள். மன்னர் பிடித்துத் தள்ளும்படி வைத்துக் கொண்டார்கள்.

''ஆமாம். இது தீவிரமான இடம். உபாசனையான இடம். காலபைரவர் சத்ரு நாசனர். இதை உக்கிரமாகச் செய்து உங்களை அழிக்க வேண்டும் என்று இவர்களால் எளிதாகச் செய்ய முடியும். எனவே, விவரம் தெரியாமலேயே நமது வீரர்கள் இங்கு கை வைத்திருக்கிறார்கள். இதை கலைத்திருக்கிறார்கள். அதனால் இந்தக் கிழவி கோபப்பட்டிருக்கிறாள். உள்ளே இருந்தவனைக்கொண்டு வந்து முற்றத்தில் வைத்தது நல்ல செயல். கடவுளுடைய விருப்பம். உங்களைக் காக்கின்ற ஈசனுடைய விருப்பம். கங்காதீஸ்வருடைய விருப்பம். பெரிய கோவில் இராஜராஜேஸ்வரத்து பெரியவரின் விருப்பம். இராஜேந்திரரே, என்னைத் தடுக்க வேண்டாம். இது வேறு விஷயம். இதை நீங்கள் சொன்னது போல வழக்கு என்னிடம் வந்துவிட்டது . நான் கவனித்துக் கொள்கிறேன். விலகி இருங்கள்.''

சட்டென்று வாளை உருவினார். பிடிப்பக்கம் சிறுத்து நுனிப்பக்கம் அகலமான பட்டையான வாள் அது. உருவிய வேகத்தில் பளபளத்தது. உய்...என்ற சத்தம் எழுப்பியது. அந்தப் பெண்கள் உரத்த குரலில் காலபைரவர் மந்திரம் சொல்ல ஆரம்பித்தார்கள். திரும்ப அவர்களைப் பார்த்து விட்டு உள்ளே பார்த்தார். உள்ளே இருப்பவன் ஒரு கத்தியை எடுத்து தன் நெஞ்சுக்கு அருகே வைத்துக் கொண்டான். நீ வெட்டினால் நான் செத்துப் போய்விடுவேன் என்றான். அதைப்பற்றி கவலையேப்படாது வாளை ஓங்கினார். ''ஜெயவிஜயீபவ' என்று கத்தினார்.

''ஓம் க்ஷும் பட்க்ஷ ஜ்வாலா ஜிக்வே கரால த்ரும்ஷ்ட்ரே

ப்ரத்யங்கரே ஷம் ஹ்ரீம் ஹூம் பட் ஸ்வாஹா'' என்று ப்ரத்தியங்கராவின் மந்திரத்தை உச்சரித்தார். வேகமாக வாளைத் தூக்கினார். அந்தக் கிழவியின் கழுத்து வாள் விழுந்து அவள் சிரசும், உடம்பும் துண்டாயிற்று. பளிச்சென்று ரத்தம் பொங்கியது. ரத்தவாடை எல்லா இடத்திலும் அடித்தது. அந்த ரத்தம் ஒரு வேகமாகப் போய் அந்த கருவறையின் வாசற்படியைத் தாண்டி உள்ளுக்குள்ளே போயிற்று. அந்தக் கிழவன் கத்தியை தன் நெஞ்சில் சொருகிக் கொண்டான். அந்தப் பெண்கள் மயங்கி விழுந்தார்கள்.

''அவர்கள் கட்டுகளை அவிழ்த்து விடுங்கள். அந்த வீட்டின் வாசற்படியை ஆணி அடித்து யானை கட்டிப் பிடுங்கி எறியுங்கள். முன் பக்கத் தூண்கள் இரண்டையும் உடைத்து விடுங்கள். வாசற் திண்ணையில் புலிச்சின்னம் பொறியுங்கள். புலிச்சின்னம் பொறித்த பிறகு ஊரை குலைத்தல் துவங்கட்டும்'' என்று சொல்லி இராஜேந்திரரை மெல்ல வெளியே அனுப்பி கிருஷ்ணன் ராமன் பின் தொடர்ந்தார். கனமான அந்த உடம்பு கையில் வாளுடன் வெளியே வருவது பார்த்து வீரர்கள் ஹாகாரம் செய்தார்கள். துண்டை மேலே போட்டு சோழம் சோழம் என்று கத்தினார்கள். வெளியே வந்து அந்த வீட்டின் முகப்பில் இருந்த ஒரு தகடை எகிறி அடித்து நாசம் செய்தார். சுற்று முற்றும் பார்த்தார். வேறு சில இடங்களில் கத்தியால் குத்தினார். உள்ளிருந்து துணி கொண்டு வரச் சொல்லி அந்தத் துணியால் தன் வாளை துடைத்து தன் உறையில் போட்டுக் கொண்டார்.

''நாம் தொடர்ந்து போகலாம். இந்த இடத்தில் நிற்க வேண்டாம்.''

உள்ளே அந்தப் பெண் குழந்தைகளின் அலறல் சத்தம் கேட்டது.

''புலிச்சின்னம் பொறித்து விட்டேன்'' என்று ஒருவன் சொல்ல, வாசற்படியில் ஆணி அடித்து கயிறு கட்டி யானை விட்டு பளிச்சென்று இழுத்தார்கள். தூண்களை உடைத்தார்கள். அந்த வீட்டின் முன்புறம் சரிந்து விழுந்து உடைந்தது. ஏதோ ஒரு சொம்பு உச்சியில் வைக்கப்பட்டிருந்தது. உருண்டு தரையில் விழுந்தது.

''ஒட்ட தேசமல்லவா, மந்திர வித்தை காட்டுவார்கள். அது நம் மீது பிரயோகமாக இருக்காது. உள்ளுக்குள் இருக்கும் என்று நினைத்தேன். இராஜேந்திர சோழர் மீதே கை வைக்கிறார்கள். நான் இருக்கும் வரை நடக்காது. நான் வைணவன். சைவ தேசத்து அரசனுக்கு அடிமையாக வாழ்பவன். அவன் ஆளுமையில் வாழ்பவன். ஆனால் சைவனும் வைணவனும் அல்லன். நான் சாக்தன். சாக்த உபாசனை செய்கிறவன். எங்கள் தேசத்து தேவதைகளை

உபாசனை செய்கிறவன். தேவதைகளை பிரதிஷ்டை செய்திருக்கிறவன். எனவே, மாதாண்ட நாயக்கருக்கு என்ன ஆபத்தும் நேராது. ஆனால் இதுபோல மந்திர ஜபம் செய்கின்ற வீடுகள் இருந்தால் இழுத்து உடைத்து விடுங்கள். மற்ற விஷயங்களைப் பிற்பாடு சொல்கிறேன். மந்திர ஜபங்கள் செய்யும் வீடுகள் ஏதும் இருந்தால், பெரும் பூஜைகள் செய்யும் வீடுகள் ஏதும் இருந்தால் வாசற்படியை இழுத்து உடைத்து விடுங்கள். தூண்களைப் பெயர்த்து விடுங்கள். முடிந்தால் தரைமட்டமாக்குங்கள்.''

தொடர்ந்து மலை ஏறி இறங்கி பெரும் வயல்களூடே அந்தப் படை போயிற்று. எல்லோரும் விதம் விதமாக இந்த மாதிரியான துர்தேவதைக் கதைகளை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ள ஆரம்பித்தார்கள். இதைத் தொடர்ந்து இப்படித்தான் பேச்சுக்கள் இருக்கும் என்று அவன் நினைத்தான்.

''என் தந்தையாரோடு போரில் ஈடுபட்டிருக்கிறீர்கள் . வாள் ஏந்தி இருக்கிறீர்கள். ஆனால் வாளைப் பிரயோகம் செய்திருக்கிறீர்களா என்பதை நான் கேட்டு அறிந்ததில்லை. இப்பொழுது நீங்கள் வாள் வீசியதைப் பார்த்தால் தயங்காமல் வெட்டிக் கொல்வீர்கள். வாள் பயிற்சி உடையவர் என்று நன்குத் தெரிகிறது. இல்லையெனில் இவ்வளவு துல்லியமாக வெட்ட முடியாது. நீங்கள் வேறு யாரையேனும் கொன்றிருக்கிறீர்களா பிரம்மராயரே'' இராஜேந்திரர் வினவினார்.

''இந்தக் கேள்வி என்னை வருத்தப்பட வைக்கிறது.''

''மன்னித்துக் கொள்ளுங்கள் சேனாதிபதி.''

''இல்லை பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் எனக்கு இருக்கிறது. நான் அந்தணன். வைதீகன். ஹோமம் செய்வதுதான் என்னுடைய விஷயம். சித்திகள் செய்ய, இஷ்டிகள் செய்ய என்னை அழைத்து இந்திரனை வழிபாடு செய்ய, வருணனை வழிபாடு செய்ய, சூரியனை வழிபாடு செய்ய என்று பொன் கொடுத்துக் கொண்டாடுவார்கள். இது என் தந்தையின் தொழில். என் தந்தை இப்படிச் செய்து வந்தார். ஆனால் அவருக்கு அரசாங்கத்தினுடைய தந்திரங்களும் தெரிந்திருந்தன. அவர் தந்திரமாகவும் இருந்தார். அரசாங்கத்தின் விஷயத்தில் தலையிட்டு ஆலோசனை சொன்னார். அந்தணர் அந்தணராகவே இல்லாது அரசியலுக்குள் நுழைவது என் தகப்பனார் காலத்தில் நடந்து விட்டது. தகப்பனார் ஆயுதம் ஏந்தவில்லை. கையில் சிறு பிரம்பு வைத்திருப்பார். அதுகூட

கர்வத்தின் அடையாளம் என்று அவர் சொல்லியிருக்கிறார்.

நான் அரசியலில் நுழைந்ததும் பிரம்பு மந்திரியாக இருக்காது, போர் மந்திரியாக இரு என்று சொன்னார். நான் புரியாது விழித்தேன். அந்தணனாக இரு அல்லது போர் வீரனாக இரு. இரண்டுக்கும் அடைபட்டு கையிலே பிரம்பு வைத்துக் கொண்டு என்னைப் போல் ஆடாதே. ஒன்று இடதாக இரு அல்லது வலதாக இரு என்று சொல்ல, நான் அவர் அனுமதியுடன் வாள் பயிற்சி பெற்றேன். இடுப்பில் வாள் தரித்தேன். தோளில் கேயூரம் ஏந்தினேன். என் கேயூரங்கள் மாறிக் கொண்டே வந்தன. சேனாதிபதி என்ற கேயூரம் வரை நான் வாளினால் உழைத்தேன். நேரிடையாகச் சண்டை செய்யவில்லை. ஆனால் சண்டை செய்யத் தூண்டியிருக்கிறேன். சண்டையில் கலந்திருக்கிறேன். யுத்தத்தின் நுனியில் இருந்திருக்கிறேன்.

இராஜராஜ சோழன் பெரும் படையோடு கூடி மேலைச் சாளுக்கிய ஆற்றிலே இறங்கிய போது அந்தக் குதிரையைத் தொடர்ந்து என் குதிரை போயிற்று. ஒரு குதிரை இடைவெளியில் நான் அவரைப் பின்தொடர்ந்தேன். இராஜராஜர் கரையேறிய போது அவருக்குப் பின்னே நாற்பது குதிரை வீரர்கள் இருந்தார்கள். நான் அருகே இருந்தேன். எதிரே இருந்து பெரும் கூச்சலோடு ஈட்டி எடுத்துக் கொண்டு ஒருவன் வந்தான். நான் என் கையில் குறுவாள் தயாராக வைத்திருந்தேன். முழு பலத்தோடு அவன் மீது வீசினேன். அவன் நெற்றியை தாக்கினேன். அந்த இடத்திலேயே அவன் மரணமடைந்தான். வீரர்கள் வில் அம்பு தொடுத்து அடித்தார்கள். நான் வாள் ஏந்தி இராஜராஜ சோழரை மறித்து நின்று கொண்டேன். ஆறேழு பேரை வெட்டி வீழ்த்தினேன்.

இராஜேந்திரா, உன் தகப்பனைக் காப்பாற்ற ஒரு ஆற்றங்கரையில் நான் ஏறி நின்ற முதல் போர் அது. முதல் கொலை அது. நான் கத்தி வீசி இறந்தவன் யார் என்பதையும் தெரிந்து கொண்டேன். அவன் ஒரு இளவரசன். அரசனின் பல பிள்ளைகளில் ஒருவன். அவன் கழுத்திலே வீரத்தாழி இருந்தது. அறுத்து எடுத்துக் கொண்டேன். எதற்குத் தெரியுமா. என் இடுப்பில் கட்டிக் கொள்ள. அந்த ஆவேசம் எனக்கு மறக்காது இருக்க. அந்த ஆவேசத்திற்கு மறுபடியும் உன் முன்னே ஒரு தீனி கிடைத்திருக்கிறது. அதற்குப் பிறகு நான் போரில் இறங்க வேண்டிய அவசியம் வரவில்லை. இன்று வந்து விட்டது. ஒரு சிரச்சேதம் செய்யும்படி ஆகிவிட்டது.''

''நீங்கள் ஏன் செய்ய வேண்டும். உத்தரவிட்டால் நிறைய பேர்

செய்திருப்பார்களே.''

''தவறு. அவளைக் கொல்ல வேறு எவரும் சரியில்லை. நான் தான் சரி. ஏனென்றால் அந்தக் குழந்தைகள் என்மீதுதான் தங்கள் பாய்ச்சலை காட்டும். உங்கள் மீது காட்டினால் உங்களுக்கு எதிர்க்கத் தெரியாது. வேறு ஒரு வீரன் காட்டினால் அவன் இறந்து போவான். இவர்கள் என் மீது காட்டுவார்கள். நான் தாங்குவேன். திருப்பி அடிப்பேன். உங்களுக்குத் தெரியாது. ''

''நாம்தான் அந்த வீட்டை உடைத்து வந்து விட்டோமே.''

''மறுபடி கட்டுவார்கள். ஆரம்பத்திலிருந்து ஆரம்பிப்பார்கள். நான்கு குழந்தைகளும் வெகு பெரிதாக சபதம் செய்து நம்மை அழிப்பதற்கு சூட்சம சக்திகளை ஏவினாலும் ஏவலாம். அந்த உறுதி இருக்கிறதா தெரியவில்லை. ஆனால் இராஜேந்திர சோழர் அருகில் இந்தப் பார்ப்பனன் இந்த கிருஷ்ணன் ராமன் இருக்கும் வரையில் ஒரு தீங்கும் வராது.''

''வயது ஆகிவிட்டது உங்களுக்கு. இந்தப் போரில் உங்களைத் தவிர்க்க நினைத்தேன்''

''எனக்குத் தெரியும். ஒட்டதேசத்தில் உங்களைத் தனியே விடமாட்டேன். இது மாந்திரீக பூமி. எனக்கு இங்கு வேறு சில காரியங்களும் இருக்கின்றன. அதற்காகவும் வந்திருக்கிறேன். உங்களை நல்லவேளையாகக் காப்பாற்ற என்னுடைய மகிஷாசுரமர்த்தினி உதவி செய்தாள். அது போதும் எனக்கு. நீங்கள் முன்னே போங்கள். நான் சற்று ஓய்வு எடுத்துக் கொண்டு வருகிறேன்.''

படை முன்னே போயிற்று. ஆற்றில் குளி;த்து விட்டு ஒரு பெரிய மரத்தடியில் அரச மரத்தடியில் கரும்பலகையில் நெற்றிக்கு திருநீறு இட்டு போர்வை போர்த்தி கிழக்கு முகமாய் கிருஷ்ணன் ராமன் உட்கார்ந்து கொண்டார். அவருக்குத் துணையாக அவன் அமர்ந்து கொண்டான். அவர்கள் இருவரின் குதிரைகளும் கட்டப்பட்டு இருந்தன. அவர்களுக்குத் துணையாக இரண்டு மெய்க்காவல் வீரர்கள் இருந்தார்கள்.

ஆரவாரத்தோடு புரவிப்படை போக, பெரும் கூச்சலோடு காலாட்படை போக. கலகல சத்தத்தோடு தேர்படை போக, யானைகளின் அணிவகுப்பு தொடர்ந்தது.

அவர் மெல்ல கண் திறந்தார். முன்னே போன பாகனை கை தட்டிக் கூப்பிட்டார். அந்த மாவுத்தன் ஓடிவந்தான்.

''எத்தனை யானைகள் இருக்கின்றன.?''

''மூவாயிரம் யானைகள் ஐயா''

''அத்தனையும் அடக்கமானவைதானே.?''

''மிகுந்த அடக்கமானவை''

''எகிறுகிறவை உண்டா?''

''ஒன்றிரண்டு உண்டு. மயக்க மருந்து கொடுத்து வைத்திருக்கிறோம். அவ்வளவு எகிறும் ஆட்டம் இல்லை''

''இருந்தால் தவிர்த்து விடுங்கள். காட்டிற்கு அடித்து அனுப்பி விடுங்கள்.''

''இல்லை அதற்கு அவை பழக்கப்படவில்லை. அவை நகரத்தில் பிறந்தவை. அவைகளால் காட்டைத் தாங்கமுடியாது'' என்று சொன்னான்.

அவர் சரி என்று தலையசைத்தார். மறுபடியும் ஜபத்தில் மூழ்கினார்.

''கிருஷ்ணன் ராமன் போருக்கு வரமாட்டாரா. இத்தோடு நின்று விடுவாரா.'' பேச்சுக் குரல்கள் கேட்டன.யார் பேசியது என்று பார்க்க அவன் எழுந்த போது சித்தப்பா மெல்லக் கனைத்து சும்மா இரு என்று கட்டளையிட்டார். அவன் மறுடியும் உட்கார்ந்தான்.

ஆனால் படைகள் மகாநதியின் தென்கரையில் தேங்கி நின்று விட்டன. மகாநதியைக் கடக்க முடியாது என்று தெள்ளத் தெளிவாகத் தெரிந்து போயிற்று. நொங்கும் நுரையுமாக மகாநதி போய்க் கொண்டிருந்தது. மிக வேகமான இழுப்புகள் இருந்தது. முதலைகள் மிதந்து வந்தன. பெரிய மீன்கள் இருந்தன. இடுப்பில் கயிறு கட்டி ஒருவன் போன போது அந்தக் கயிறு பிடுங்கிக் கொண்டு அவன் வெகு தூரம் போய் கரையேறினான்.

''சுழல் இருக்கின்றன. அடியே கொண்டு போய் சொருகுகின்றன. கால் பக்கம் மணல் இருக்கும் இடமே தெரியவில்லை. நாலு ஆள் ஆழம் இருக்கும் போல் தெரிகிறது'' என்று கூவினான்.

தவறான இடத்தில் நின்று கொண்டிருக்கிறோமோ தளபதிகள் திகைத்தார்கள். என்ன செய்வது. இராஜேந்திரரை அணுகினார்கள். இராஜேந்திரர் மற்ற வீரர்களைக் கூப்பிட்டு கேட்டார்.

''என்ன செய்வது?''

அவர்கள் எல்லோரும் ஒருமுகமாய் சேனாதிபதி கிருஷ்ணன் ராமன் வரட்டும் என்று காத்திருந்தார்கள்.

சித்தப்பாவின் குதிரை படைகளைக் கிழித்துக் கொண்டு போயிற்று.

மூன்று நாழிகைப் பயணத்தில் மகாநதியின் கரையை அடைய முடிந்தது.

''தொந்தரவிற்கு மன்னிக்கவும். கண்மூடி ஜபத்தில் இருந்ததாக கேள்விப்பட்டேன். ஆனாலும் இங்கே மேற்கொண்டு நகர முடியவில்லை. அதனால் அழைத்தேன்.''

''இது என்னுடைய வேலை. நீங்கள் ஏன் இதற்கு மன்னிப்பு கேட்கிறீர்கள். எப்படி இருக்கிறது ஆழம்.''

''மிக மோசமாக இருக்கிறது. நாலு ஆள் ஆழம் இருக்கும் போலிருக்கிறது. மண்ணைப் பறித்துக் கொண்டு போகிறது.''

''அப்படியானால் இந்த இடம் தவறு.''

''வேறு எங்கு போவது.?''

''இன்னும் எங்கு அகலமாக இருக்கிறதோ அங்கு போகலாம். இங்கு அகலத்திலிருந்து நதி குறுகிவிட்டது. அகலத்திலிருந்து நதி குறுகியிருந்தால் அது மண்ணைப் பறித்துக் கொண்டு சுழலாகத்தான் போகும். இந்த இடத்தில் இறங்கக் கூடாது''

''பிறகு.?''

''எங்கு பரந்துபட்டிருக்கிறது என்று பாருங்கள்.''

''இங்கிருந்து நாலு கல் தொலைவில் பரந்துபட்டிருக்கிறது. அங்கிருந்துதான் வருகிறது.''

''நல்லது. படைகளை மெல்ல அப்படியே மேற்கு நோக்கி நகர்த்துங்கள்''

உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. அதற்கேற்றபடி சங்குகளும், எக்காளங்களும், கொடி அசைவுகளும் நகர்ந்தன. படை அப்படியே திரும்பி மேற்குத் திசை நோக்கி நகர்ந்தது. ஆற்றின் கரையோரமாகவே நகர்ந்தது. ஒரு இடத்தில் மிகுந்த பரப்பில் நதி அமைதியாக ஓடிக் கொண்டிருந்தது.

''இந்த இடத்தில்தான் தாண்ட வேண்டும்.''

''நீங்கள் தவறு செய்யவில்லையா கிருஷ்ணன் ராமனே?'' ஒரு தளபதி கேட்டான். இப்படிக் கேட்பார்கள் என்று தெரிந்தது போல, ''என்ன தவறு செய்து விட்டேன்'' என்று எகத்தாளமாக கிருஷ்ணன் ராமன் பேசினார். அவர் பேசிய கேலி மற்றவர் மனதை புண்படுத்தியது.

''குறுகிய இடத்தைத் தாண்டுவது நல்லதா, அகன்ற இடத்தைத் தாண்டுவது நல்லதா?''

''அகன்ற இடத்தைத் தாண்டுவதுதானடா நல்லது. நதி எப்படிப் போகிறது. அமைதியாகப் போகவில்லையா. இந்த இடத்தில் தாண்டிப் போய்விடலாமே.''

''எப்படி? படகில் போகலாமா?''

''இல்லை. படகு பிய்த்துக் கொண்டு கிழக்கு நோக்கிப் போகும். படகைத் துடுப்புப் போட்டு நீங்கள் எதிர்க் கரைக்கு போவது என்பது மிக மிகக் கடினம். இங்குள்ள அத்தனை படகுகளும் ஓரம் இழுத்து போட்டிருக்கிறார்கள்.''

''அடித்தால் படகு ஓட்ட வருவானா''

''இல்லை. படகு ஓட்ட முடியாமல் தவிப்பார்கள். உங்களிடம் அடி வாங்கிச் சாவார்கள். அல்லது நதியில் குதித்து மடிவார்கள்.''

''படகு ஓட்ட முடியாது என்கிறீர்களா?''

''கூப்பிட்டு கேள்.''

அவர்கள் வேகமாக ஓடினார்கள். ஒட்ட பாஷை தெரிந்தவன் பேசினான்.

''படகு நிற்காது. படகு இறங்கியவுடன் பிடுங்கிக் கொண்டு கிழக்கு நோக்கிப் போய்விடும். நாலு கல் தொலைவில் சுழலில் மாட்டிக் கொண்டு எங்கேனும் இடிபட்டு சுக்கு நூறாக உடையும். ஒரு மூட்டை நெல் கூட ஏற்ற முடியாது. நாலு பேர் உட்கார்ந்தால் படகு ஆடும். இத்தனை ஜனங்கள் அங்கு போவதற்கு படகு மூலம் வழியே இல்லை''

''அவனுக்கு காசு கொடுத்து அனுப்பி விடுங்கள்.''

அவன் காசு வேண்டாம் என்றான். பளிச்சென்று அடித்தார்கள்.

''காசு வாங்கிக் கொண்டு போ.''

ஒரு பையில் பத்து கழஞ்சுகள் போட்டு கொடுத்தார்கள். அவன் வாங்கிக் கொண்டு கண்ணில் ஒற்றிக் கொண்டு போனான். அங்குள்ள மற்ற படகோட்டிகள் அவனைப் பார்த்து முணுமுணுத்தார்கள்.

''அவர்கள் பாடு அடித்துக் கொள்ளட்டும்'' என்று கிருஷ்ணன் ராமன் வீரர்களை விலக்கிவிட்டார். நதியையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''இடுப்பில் கயிறு கட்டி அதோ இரண்டு பனை தொலைவில் உள்ள இடத்திலே மூழ்கு.''

ஒருவன் இறங்கி, இடுப்பில் கயிறு கட்டிக் கொண்டு வேகமாக நீந்தி அந்த இடத்தில் முக்குளித்து நிமிர்ந்தான்.

''நிற்க முடிகிறது ஆனால் ஆறு இழுக்கிறது.''

அவன் இடதும் வலதும் அலைந்தான். ஆனால் வெகுநேரம் நிற்க முடியவில்லை. நதி அவனை இழுத்துப் போட்டது.

''மிக நல்லது . அடேய், வந்து விடு''

கயிறு பிடித்து இழுத்து அவனை மேலே ஏற்றினார்கள். அவன் ஒரு துணியால் உடம்பை துடைத்துக் கொண்டு தன் உடுப்புகளை அணிந்து கொண்டான்.

சித்தப்பா மீண்டும் நதியையே பார்த்துக் கொண்டிருந்தார். தொலைதூரம் வரை பார்த்தார்.

''நமது படை ஓய்வு எடுத்துக் கொள்ளலாமே.'' என்று சொன்னார்.

''இந்த நதியைத் தாண்ட வேண்டாமா.''

''இப்போது இல்லை. இவர்கள் அனைவரும் விலகினால் நதி விலகும்''

''இவர்கள் விலகுவதென்றால்?''

''இப்போது இருக்கின்ற இடத்திலிருந்து நன்கு தள்ளிப் போய் தேர்களும் விலகி, காலாட்படைகளும் விலகி உள்ளுக்குள்ளே யானைகளை வரச் சொல்லுங்கள். யானைகள் இங்கு வரவேண்டும்''

''என்ன செய்யப் போகிறீர்கள்?''

''யானைகளை இறக்கப் போகிறேன்''

''தாங்குமா.?''

''யானைகள் எதிர் நீச்சல் செய்யும். தாங்கும். ஒன்றோடு ஒன்று கயிறு பிணைத்துக் கொண்டு யானைகளை நிற்க வைக்க வேண்டும். ஒன்றை ஒன்று பற்றிக் கொண்டு யானைகள் நிற்க வேண்டும். நல்ல யானைகளை, உயரமான யானைகளை உடனே அனுப்புங்கள். இந்த வீரர்களை விலகியிருக்கச் சொல்லுங்கள். இந்தப் பாதை யானைகள் வரும் பாதையாக மாறட்டும்.''

அந்தப் பரந்த இடத்தை அடைத்துக் கொண்டிருந்த வீரர்கள் கொடி அசைவில், எக்காள ஓசையில் விலகினார்கள். தேர்களும் விலகின. காலாட்படை வீரர்களும் நகர்ந்தார்கள். யானைகள் வேகமாக வரத் தொடங்கின. கிட்டத்தட்ட ஓட்டமும், நடையுமாக அந்த யானைகள் வருவது கண்ணுக்கு விருந்தாக இருந்தது. ஒன்று இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்று மணி ஓசையுடனும், பிளிறலுடனும்,

அடிவாங்குகின்ற சத்தத்தோடும் தொடர்ந்து வந்தன. மேலேயிருந்த பாகர்கள் அதை பல்வேறு விதமாகக் கூச்சலிட்டு அவைகளை கிளப்பினார்கள். யானை கரை வந்தது.

ஒரு யானையை இறக்கச் சொன்னார். யானை மிரண்டது. மறுத்தது. பிரம்படி வாங்கியது. யானை நிதானமாக உள்ளே இறங்கியது. அழுந்த நின்றது. அதன் கழுத்தில் கயிறு பிணைத்து இடுப்பில் கயிறு பிணைத்து இருந்தார்கள். யானை நகரத் துவங்கியது. கயிறு விட்டார்கள். யானை மெல்ல நகர அடுத்த யானையை இறக்கினார்கள். ஒரு யானை மேற்கு நோக்கி இருக்க, ஒரு யானை கிழக்கு நோக்கி இருக்க இரண்டையும் பிணைத்தார்கள். யானையை வடக்கு நோக்கி வலப்பக்கமாய் நகரச் செய்தார்கள். அந்த இரண்டு யானைகளும் நகர, இன்னும் இரண்டு யானைகளை இறக்கினார்கள்.

''என்ன செய்யப் போகிறீர்கள். நீங்கள் செய்வது புரியவில்லை''

''நான் பாலம் கட்டிக் கொண்டிருக்கிறேன்.''

''என்ன பாலம்.?''

''யானைப் பாலம்.''

தெளிவாக கிருஷ்ணன் ராமன் பேசினார்.

''அவ்வளவு தொலைவிற்கா?''

''ஆமாம். அறுநூறு யானைகள் இருந்தால் போதும். நம்மிடம் மூவாயிரம் யானைகள் இருக்கின்றன. இந்த யானைகளை ஒன்று சேர்த்து பாலமாக அமைத்து அதன் மீது பலகை வைத்து, அந்தப் பலகை மீது நாம் போகலாம். குதிரைகள் நடமாடிப் போகலாம். தேர்களை தூக்கிக் கொண்டு போகலாம். இரண்டு இரண்டு பலகைகளாகப் போடுங்கள். அம்பாரிகளை அகற்றிவிடுங்கள்.''

அம்பாரிகள் அகற்றப்பட்டன. யானைகள் நகர்த்தப்பட்டன. மிகப் பெரிய வேலை ஒன்று ஆயிரக்கணக்கான வீரர்கள் துணையோடு நகர்ந்தது. மிரண்ட யானைகளுக்கு உணவு கொடுத்தார்கள். பழங்கள் கொடுத்தார்கள். கொஞ்சிப் பேசினார்கள். யானைகளை ஒட்டி படகுகள் நிறுத்தினார்கள். யானை காலடிக்கு அருகே படகுகள் நின்றன. அந்தப் படகில் உணவுகளை ஏற்றி யானைகளுக்கு மெல்ல மெல்லக் கொடுத்து வந்தார்கள்.

யானைகள் வலப்பக்கம் நகர்ந்து வடக்கு நோக்கிப் போயின. படகில் இருந்தவர்கள் யானைகளைத் தடவி கொஞ்சி சமாதானப்படுத்தினார்கள். பயப்படாதே என்றார்கள். நடுவில் ஒரு

இடத்தில் யானை மூழ்கும் அளவுக்கு ஆழம் இருந்தது.

''யானைக்கு அருகே மூங்கில் கொடு. பிரம்பங் கழிகளை கொடு. அது மிதக்குவதற்கு துருத்திகளைக் கொடு'' என்று சொல்ல, அவ்விதமே கொடுக்கப்பட்டது. அந்த யானை இரண்டு துருத்திகளை, இரண்டு மரக்கட்டைகளை பற்றிக் கொண்டு மிகுந்த சந்தோஷமாக நின்றது. நீரை பீய்ச்சி அடித்தது.

பெரிய மூங்கில் மரங்களை பலகைகளாக்கி அதன் மீது மாட்டு வண்டிகளை ஏற்றினார்கள். இப்போது யானைகள் இருக்கின்ற பலத்தில் யானைகள் துதிக்கையில் கயிறு கொடுத்து அந்த கயிறைப் பிடித்தபடி அந்த மாட்டு வண்டி மூங்கில் படகுகள் மறுகரையை அடைந்தன. மறுபடியும் அங்கு திரும்பி வந்தன. மூன்று நாட்கள் இரவும் பகலும் இடையறாது வீரர்கள் உழைத்தார்கள். மூன்று லட்சம் வீரர்களும் மகாநதியைத் தாண்டி வடகரையில் ஏறினார்கள். ஒரு ஆள் சேதமில்லை. ஒரு யானை சேதமில்லை. ஒரு உயிர் சேதமில்லை. கடைசி யானை ஏறியபோது ஓடிப்போய் கிருஷ்ணன் ராமன் அந்த யானையைத் தழுவிக் கொண்டார். அந்த யானை அவர் இடுப்பை வளைத்துக் கொண்டது. மெல்லத் தூக்கி நிறுத்தியது. கீழே இறக்கியது.

மாதாண்ட நாயகர் இராஜேந்திரர் அருகே வந்தார். இறுக்க கிருஷ்ணன் ராமனை தழுவிக் கொண்டார்.

''இந்த மூளை எங்கிருந்து வந்தது. யார் கொடுத்த மூளை இது. இந்தத் தந்திரம் எப்படி வந்தது. இது ஆரம்பத்திலேயே உங்களுக்குத் தோன்றியிருக்க வேண்டும். இந்தச் சந்தேகம் உங்களுக்கு எப்போதோ வந்துவிட்டது. இந்த அறிவுத் திறன் உங்களுக்கு எப்படி வந்தது.?''

''சாக்த உபாசகம். சாக்த உபாசகம். நான் வைணவன். சைவரிடத்திலே வேலை செய்கிறவன். ஆனாலும் உள்ளுக்குள் நான் சாக்தன். நான் சக்தி வழிபாடு செய்கிறவன். இது சக்தி கொடுத்தது. மனதுக்குள் ஒரு சக்தி குவிந்திருக்கிறது. நெற்றிக்குள் அந்த சக்தி சுடராக இருக்கிறது. புஜங்களில் அந்த சக்தி வலுவாக நிற்கிறது. வயிற்றிலே அந்த சக்தி ஜீரணம் பண்ணுகிறது. அடிவயிற்றிலே அந்த சக்தி குறி விரைப்பாய் விந்து வீச்சாய் இருக்கிறது. சக்தி நன்றாக இருந்தால்தான் விந்து வீச்சாக இருக்க முடியும். விந்து வீச்சாக இருந்தால்தான் குழந்தைப் பிறப்பு உண்டாகும். அதுமட்டுமல்ல மலஜலம் கழிக்கவும் அந்தச் சக்தி தேவைப்படுகிறது. முதுகெலும்பு முழுவதும் அந்தச் சக்தி இருக்கிறது. தொடைகளில், முழங்கால்களில்,

கணுக்கால்களில், பாதத்தில் அந்தச் சக்தி ஊடுருவி நிற்கிறது. உச்சந்தலைக்கு மேலே ஒரு ஜாண் உயரத்தில் கொடி கட்டிப் பறக்கிறது. இதை சாக்த உபாசகம் நன்கு அறியும். இதை வளரச் செய்யும். நான் திறமையானதற்கு நான் காரணமல்ல. என் தாய் சக்தி அவள் காரணம். பராசக்தி காரணம். அந்த பராபரையே காரணம்.''

''வடக்கே பெரும் தொல்லை ஏதுமில்லை. எதனால்?''

''இந்த வடபகுதி வைணவம் வளர்த்த பகுதி. வைணவம் வளரும் பகுதி. இங்கு யுத்தம் அத்தனை கடினமாக இருக்காது. சைவ சமயத்தைச் சார்ந்தவர்களைப் போல, சாக்த உபாசகம் பெற்றவர்கள் போல வைணவர்கள் கடுமையாகச் சண்டையிட மாட்டார்கள். எனவே, நீங்கள் பேச்சு வார்த்தையிலேயே முடித்துக் கொள்ளலாம். மிரட்டி அடக்கி அமைதியாக்கலாம். இராஜேந்திரர் எனக்கு விடை கொடுக்க வேண்டும்.''

''என்ன பாதி யுத்தத்தில்?''

''நான்தான் சொன்னேனே, இனி யுத்தம் இல்லை. வெறும் மிரட்டல்தான் இங்கே. மிரட்டுவதற்கு நான் எதற்கு. நம்முடைய வீரர்கள் போதாதா. நீங்களும் கீழைச் சாளுக்கியம் போய்விடலாம்''

''நமது வீரர்கள் போதுமா?''

''போதும். ஒரு நல்ல படைத்தளபதியை முன்னிறுத்தி அவனை அனுப்புங்கள். படைகள் ஒட்டதேசம் தாண்டி இன்னும் உள்ளே வரவேண்டாம். ஒட்ட தேசத்திலிருந்து கீழைச் சாளுக்கியம் போய்விடுங்கள். அங்கே உள்நாட்டுக் கலவரங்கள் ஏற்படாமல் பாருங்கள்.''

''நீங்கள் எங்கே போகிறீர்கள்.?''

''மாதாண்ட நாயகருக்குத் தெரியாமல் நான் ஒரு சிறு காரியம் கூடச் செய்ததில்லை. மாதாண்ட நாயகர் கேட்கும்போது சொல்ல மறுப்பேனா. நானும், எனது அண்ணார் மகனும் கைலாசம் போக விரும்புகின்றோம்.''

''சாக்த உபாசகம் என்று சொல்கிறீர்கள். கைலாயத்தில் சிவனல்லவா இருக்கிறார்.''

''வழிநெடுக வழிநெடுக சாக்த உபாசகம்தான். கைலாயம் எனக்கு சக்தி சொரூபிதான். கைலாயத்தில் சிவன் மட்டுமா இருக்கிறார், அவளும் இருக்கிறாளே. அவள் இருப்பால்தானே இந்தக் கைலாய மலையும் கருக்கிறது. அவ்வளவு குளுமையாக இருக்கிறது. எனவே,

எனக்கு விடை கொடுக்க வேண்டும். ''

அவர் கை கூப்பினார்.

இராஜேந்திரர் மௌனமாக இருந்தார்.

''வழிச் செலவுக்கு?''

''என்னிடம் இருக்கிறது''

''எத்தனை வீரர்கள் வேண்டும்.?''

''ஐந்து பேரைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன். ''

''எப்பொழுது ஊர் திரும்புவீர்கள்?''

''அது அவள் விருப்பம்.''

''அங்கேயே தங்கிவிடுவீர்களா?''

''சோழ தேசத்தை விட்டு என்னால் நகர முடியாது.''

''நீங்கள் சொன்னது போல தென்மேற்குப் பருவக்காற்று மழை இன்னும் தொடர்ந்திருக்கிறது. மேலே பாருங்கள் வானம் கருமையாக இருக்கிறது. இங்கு மழை பெய்யவில்லையே தவிர பரத கண்டத்தின் நடுப்பகுதியில் கயிலையில் மழை அதிகம் இருக்கும். நீங்கள் கயிலை யாத்திரை வேறொரு சமயம் வைத்துக் கொள்வது நல்லது. இது கயிலை யாத்திரைக்கான நேரம் அல்ல. இது மழை நேரம். அல்லது நீங்கள் இந்த ஒட்டதேசத்தில் எங்கேனும் தங்கி பிறகு போக வேண்டும். ஆனால் ஒட்டதேசத்தில் உங்களை விட்டுப் போக எனக்கு மனம் இல்லை. நீங்கள் சொன்னது போல இது மந்திர பூமி. உங்களுக்கு வேறு விதத் தொந்தரவு வரலாம்.''

''என்ன செய்யச் சொல்கிறீர்கள் இராஜேந்திரரே?''

''என் பேச்சைக் கேளுங்கள். உங்களைப் போலவும் நானும் சிந்திக்கக் கற்றிருக்கிறேன். உங்களால் சிந்திக்கக் கற்றிருக்கிறேன். இந்த விஷயத்தை கிருஷ்ணன் ராமன் எப்படி அணுகுவார் என்று நான் பலமுறை பயிற்சி செய்திருக்கிறேன். ''

கிருஷ்ணன் ராமன் சிரித்தார். இராஜேந்திரரின் முகத்தை வருடிக் கண்களில் ஒற்றிக் கொண்டார்.

''சொல்லுங்கள் மாதாண்ட நாயகரே, உங்களுடைய யோசனையையும் கேட்கிறேன்.''

''நீங்கள் சொல்வது போலக் கடும் மழை இருக்கிறது. நிலத்தில் அறுபது பங்கும் நீரில் நாற்பது பங்குமாக இருக்கிறது இந்த மழை. வழியில் பார்த்த மழையே தாங்க முடியவில்லை. அப்போது

கைலாசத்தில் இந்த மழை பெய்தால் என்ன கதி ஆவீர்கள். கைலாயத்தின் அடிவாரத்தில் இந்த மழை பெய்தால் யார் நகர முடியும். இந்த மேகங்கள் வேகமாகத் தென்மேற்கிலிருந்து கிளம்பி வடகிழக்காகப் போகிறது. ஒரு வளையமாக பரதகண்டத்தை வளைத்துக் கொண்டு இமயமலையைத் தாக்குகிறது. அறுபது பங்கு மழை நிலத்தில் பெய்யும்போது கைலாய யாத்திரை நல்லதா?''

''நான் சொன்ன விஷயத்தை எனக்கே எதிராகப் போடுகிறீர்கள்''

''இல்லை. பொதுவாக யோசிக்கிறேன்''

''நீங்கள் சொன்னது சரி. நீங்கள் கீழைச் சாளுக்கியம் போங்கள். நான் சிறிது நாட்கள் ஒட்ட தேசத்தில் இருந்து விட்டு இந்த ஒட்டதேசத்தின் யோக்கியதை என்ன என்று பார்த்துவிட்டு இந்தத் தென்கரை ஒட்டதேசத்தை கவனித்து விட்டு வடகரையையும் பார்த்து விட்டு வருகிறேன். நீங்கள் போங்கள். நான் கைலாயம் போகவில்லை. ஒருநாள் நிம்மதியாகப் பெரும்படையோடு, வீட்டிலுள்ள பெண்களோடும் நான் கைலாயம் உங்கள் அனுமதியோடு போகிறேன். இன்னும் சுகமாகப் போகிறேன். வண்டிகளோடும், குதிரைகளோடும், யானைகளோடும் போகிறேன். இப்பொழுது வந்திருப்பது போருக்கு. இப்போது கைலாயம் வேண்டாம் என்று நீங்கள் சொல்வது சரி. உங்களுக்கு வேலை கீழைச் சாளுக்கியத்தில் இருக்கிறது. சில நாட்கள் இங்கு இருந்துவிட்டு வருகிறேன்.''

இருவரும் கட்டித் தழுவினார்கள். படைகளுக்கு உத்தரவுகள் தரப்பட்டன. அரையன் இராஜராஜன் புதிய தலைவனாக நியமிக்கப்பட்டான். படையின் நகர்வுகளை இராஜேந்திரரும் கிருஷ்ணன் ராமனும் வேடிக்கை பார்த்தார்கள்.

''இந்த வடக்கு ஒட்ட தேசத்தை நாம் ஆளுமை செய்யப் போகிறோமா?''

''இல்லை. இவ்வளவு தொலைவில் எப்படி ஆளுமை செய்வது.''

''நிர்மூலம் செய்யப் போகிறோமோ?''

''இல்லை. இந்த முறை நிர்மூலம் செய்கின்ற வேகம் எனக்கு வரவில்லை. இவனை மிரட்டினால் போதும். மிரண்டு விட்டான் என்றே தெரிகிறது.''

''பிறகு என்னதான் தண்டனை இவனுக்கு. அடித்துக் கொல்வதா.?''

''அதுவும் இல்லை. ஆட்சி செய்ய ஆட்கள் வேண்டும். எகிறினால்

அடிக்கலாம். ஆனால் அவன் காலில் விழுவான் என்றுத் தோன்றுகிறது''

''ஆமாம். எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. ஏனென்றால் எந்த இடத்திலும் எதிர்ப்பு இல்லை. வீரர்கள் முட்டி மோதவில்லை. வடக்கு காலியாக இருக்கிறது.''

''அப்பொழுது என்ன செய்யலாம்?''

''என்ன செய்ய வேண்டும். நாம் வெற்றி பெற்றது எளிதாக இருக்கிறது. வெறும் ஊர்வலமாகப் போய்வந்தது போலிருக்கிறது. நமக்கே போர் தெரியவில்லையே''

''ஆமாம். எனக்கே யுத்தம் போலத் தெரியவில்லை.''

''என்ன செய்தால் இவர்களுக்கு தண்டனையாக இருக்கும்?''

''மாடமாளிகைகளை எரித்து விடுவோம்.''

''வேண்டாம். வாழ்ந்துவிட்டு போகட்டும்''

''நெல்வயல்களை எரித்து விடுவோம்.''

''அடடே அவை மக்களுக்குண்டான உணவுகள். கறவைகளுக்கு உண்டான உணவுகள். ''

''ஏரிகளை, குளங்களை பாழ் செய்வோமா''

''தவறு .செய்யக் கூடாது. பொது ஜனத்தை முட்டக்கூடாது. ஒரு அரசன் செய்த தவறுக்காக மக்களை நோகக் கூடாது. உன் அரசன் தவறு செய்தார் என்று மட்டும் சொல்லிவிட வேண்டும்''

''அப்படி ஏதேனும் செய்ய முடியுமா?''

''எனக்கு ஒன்று தோன்றுகிறது.'' கிருஷ்ணன் ராமன் உரத்துச் சொன்னார்.

''என்ன ?''

''இங்கே நிறையக் கோவில்கள் இருக்கின்றன.பல சிவன் கோவில்கள், விஷ்ணு கோவில்கள், ஏன் சூரியனுக்கும் கோவில்கள் இருக்கின்றன. வினாயகர் சிலைகள் இருக்கின்றன . மகிஷாசுரமர்த்தினி, துர்க்கை என்று பல சிலைகள் இருக்கின்றன.''

''ஆமாம். பல கோவில்கள் இருக்கின்றன''

''சிலைகளை பிடுங்கிக் கொண்டு வந்து விடுங்கள். மூளியான கோவில்கள் பார்த்துவிட்டு அவர்கள் கதறட்டும். என்ன காரணம் என்று புரியட்டும். வீடுகளை இடிக்க வேண்டாம். மாடமாளிகைகளை இடிக்க வேண்டாம். வயல்களை நசுக்க வேண்டாம். கோவில்களில்

உள்ள சிலைகளை பிடுங்கிக் கொண்டு வந்து விடுங்கள். அதுதான் தண்டனை.''

இராஜேந்திரர் உற்சாகமாகக் கோஷம் செய்தார். பெரும் சிரிப்போடு இராஜேந்திரர் கிருஷ்ணன் ராமனை கட்டிக் கொண்டார்.

''நல்லது. அவ்விதமே செய்வோம். அடேய், யாரங்கே. நீ எனக்கென்று ஒரு நல்ல மகிஷாசுரமர்த்தினி சிலையைக் கொண்டு வாருங்கள். கங்கை கொண்ட சோழபுரத்திலே அதை வைக்க வேண்டும். நமது சிற்பிக்குக் காட்ட வேண்டும். நல்ல கலையம்சமாக இருக்க வேண்டும்.''

வீரர்கள் உற்சாகமானார்கள். வெற்றி என்பது கொல்வதில் இல்லை. வெற்றி என்பது அடிப்பதில் இல்லை. வெற்றி என்பது மனைவி மக்களை பிடித்து இழுத்து அனுபவிப்பதில் இல்லை. வெற்றி என்பது பொருளாதாரச் சிதைவில் இல்லை. மாடமாளிகை இடிப்பு அல்ல. வெற்றி என்பது எது எல்லாவற்றையும் விட முக்கியமாகக் நீ கருதுகிறாயோ அதை அழிப்பது. மனைவியை விட, மகளைவிட, உன் பொருளாதரத்தை விட, உன் மாடமாளிகைகளைவிட, உன் கூட கோபுரங்களைவிட உனக்கு கோவில் முக்கியம். கடவுள் முக்கியம். இடி.

தோரண வாயில்கள் பெயர்த்தெடுக்கப்பட்டன. தூண்கள் பெயர்த்தெடுக்கப்பட்டன. கருவறைச் சிலைகள் நோண்டி எடுக்கப்பட்டன. ஜனங்கள் கதறினார்கள். அத்துமீறியவர்கள் பிரம்பால் அடிபட்டார்கள். கிருஷ்ணன் ராமன் தனக்குச் சிலை வேண்டுமென்று தேடினார். அரண்மனையிலுள்ள நிலைப்படிகளை, பெருந்தனக்காரர்கள் இருக்கின்ற நிலைப்படிகளைக் கூட வீரர்கள் பெயர்த்தெடுத்தார்கள். நினைவுச்சின்னமாக தூண்களைப் பெயர்த்தெடுத்தார்கள். தங்கள் வீட்டில் நடப்போவதாகச் சொன்னார்கள். யானைகள் மீது மரச்சாமான்கள் ஏற்றப்பட்டன. பித்தளைத் தவளைகளும், குண்டான்களும், கொள்ளையடித்த பொருள்களும் மாட்டு வண்டியில் ஏற்றப்பட்டன.

வடக்கே உள்ள மன்னன் கதறிக் கொண்டு வந்தான். அழிவை நிறுத்துங்கள் என்றான். அழிவு ஓரளவு நின்றது. ஆனால் வேண்டுவனவற்றை வீரர்கள் பிடுங்கிக் கொண்டார்கள். மக்களைத் துன்புறுத்துவது அடியோடு நின்றது. அரசன் இனிமேல் வம்புக்கே வருவதில்லை என்று மாதாண்ட நாயக்கரிடம் மன்னிப்புக் கேட்டான்.

அவனை அரையன் இராஜராஜன் கங்கை நோக்கி கைது செய்து

அழைத்துப் போனான். கங்கைக்கு வழிகாட்டச் சொன்னான்.

அரசனுடையப் படைகள் முன்னே போய் சாலையைச் சீர் செய்து சோழ தேசத்து படைகளுக்கு கட்டியம் கூறின. வரவேற்றன. வாழ்த்தின.

உடம்பெல்லாம் வெண்ணைய் தடவி குளிக்கின்ற சுகத்தோடு சோழப்படை கங்கையை நோக்கி முன்னேறிற்று.

அந்தச் சிறிய கோவிலுக்குள் கிருஷ்ணன் ராமன் நுழைந்தார்.

''கோவில் சிறியதாக உள்ளதே சித்தப்பா''

''ஆனால் இதுதானேடா அருகே வரச் சொல்கிறது. மற்ற கோவில்களில் எனக்கு நுழையவே விருப்பமில்லை.''

''விஷ்ணு சிலைகள் நிறைய இருக்கின்றனவே''

''இருக்கட்டும்.வேறு யாரேனும் எடுத்துப் போகட்டும்.''

''இந்தக் கோவில் சிலை பிடுங்கி எடுத்துக் கொள்ளலாமா''

''கூப்பிடுகிறாள் பார்ப்போம்.''

அவர் உள்ளே போனார். ஒரு மேடை மீது அந்தச் சிலை இருந்தது. சிம்மாவாஹினி. மகிஷாசுரமர்த்தினி. எருமைத் தலை மீது கால் வைத்து சூலத்தால் குத்திக் கொண்டிருக்கிறாள். பின்னால் சிம்மம் இருக்கிறது. நீண்ட சிம்மம். அவள் முகத்தில் ரௌத்ரம் இருந்தது. உடம்பு கட்டுக் குலையாமல் இருந்தது. உற்றுப் பார்த்தார்.

''இது அழகைவிட பெரிய அழகடா'' என்றார்.

மெல்லக் கை வைத்தார்.

''ஹா... உள்ளே இழுக்கிறாள். உள்ளே இழுக்கிறாள்... '' என்று கத்தினார்.

அவன் அருகே அமர்ந்து கொண்டான். மெல்ல அந்தச் சிலையை அசைத்தார். அது அசைய முடியாது இருந்தது.

''ஏன் நீதானே அழைத்தாய். ஏன் இப்பொழுது மறுதலிக்கிறாய். ஏன் இப்பொழது முரண்டு செய்கிறாய். நான் தாண்டிப் போனபோது மூன்று முறை அழைத்தாய் அல்லவா. பெயர் சொன்னாய் அல்லவா. இப்பொழுது ஏன் முரண்டு செய்கிறாய்.'' அவர் கோபமானார்.

சிலையோடு பேசுகிறாரே என்று அவன் பயந்தான்.

''வருவதென்றால் வா.இல்லையென்றால் விடு''

விளக்கு சட்டென்று பெரிதாயிற்று. பெரிதாகக் கொழுந்துவிட்டு எரிந்தது. வெளிச்சம் அதிகமாகப் பரவியது. அவன் பயந்தான்.

''ஓ...என்ன வேண்டும் பேசு. என்ன கேட்க வேண்டும் கேள்.'' சித்தப்பா கேட்டார்.

''எங்கே?''

மறுபடியும் கேட்டார். சூட்சமமான ஒரு சக்தியோடு அவர் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

''என்னுடைய இடத்திலா, என்னுடைய அக்ரஹாரத்திலா, என்னுடைய கிராமத்திலா, எங்கே? சிலை வைத்தால் கோவில் கட்டாமல் இருப்பார்களா, உனக்கு கோவில் கட்டுகிறேன் வா. எல்லாவித மரியாதைகளும் கிடைக்கும். உன்னைக் கீழே இறக்க மாட்டேன். நிச்சயம். என்னுடைய ஊரான அமண்குடிக்கு போகும்வரையில் நீ தரை இறங்கமாட்டாய். ஏதேனும் ஒரு வாகனத்தில் இருப்பாய்.'' என்று சொன்னார். அவன் கவனமாக இருந்தான்.

''மகனே சற்று பின்னடைந்து இரு. அவள் வெளியே வரப்போகிறாள். உனக்கு ஏதேனும் கஷ்டம் வந்துவிடப் போகிறது.''

அவன் பின்னடைந்தான். கருவறையில் சிலையும், மண்டியிட்ட நிலையில் கிருஷ்ணன் ராமனும் இருந்தார்கள். அசைத்தார். இழுத்தார். குனிந்து நின்றார். பலம் கொண்ட மட்டும் தூக்கினார். மேலே தூக்கினார். பளிச்சென்று அந்தச் சிலை ஒன்றரை முழச் சிலை மேலே வந்தது. நெஞ்சோடு அணைத்துக் கொண்டார். தள்ளாடினார். இடமும் வலமும் அலைந்தார். அவன் பாய்ந்து ஓடினான். அவரை இறுகப் பற்றிக் கொண்டான். அவன் உடம்பிலும் ஏதோ விர்..ரென்று புகுந்தது.

அவரை அணைத்தபடி கோவிலை விட்டு வெளியே வந்தான். அவர்கள் இரண்டு பேரும் படிகளில் இறங்கினார்கள். அவன் யானையைத் தேடினான். ஒரு பட்டத்து யானை வந்தது. அவன் தாவி ஏறினான். அம்பாரியைச் சரி செய்தான். பழைய துணிகளைப் போட்டுவிட்டு புதுத் துணிகளைக் கேட்டான். புதுத் துணி கிடைத்ததும் விரித்தார்கள். அதன் மீது வில்வக் கிளைகளை உடைத்துப் போடச் சொன்னான். வில்வ மரம் உடைத்து அந்த இலைகள் போடப்பட்டது. அதன் மீது மறுபடியும் புதுத் துணி விரிக்கப்பட்டது. வில்வப் படுக்கையை அவன் தயார் செய்யும் வரை அவர் அந்தச் சிலையையே அணைத்துக் கொண்டிருந்தார். அருகே வந்தார். அவன் குனிந்து சிலையை வாங்கிக் கொண்டான். மேலே தூக்கினான். வில்வப் படுக்கையில் உட்கார வைத்தார். அவரும் மேலேறி வந்தார். மெல்ல சாய்த்தார். படுக்க வைத்தார்.

''அமைதியாய் இரு. அமைதியாய் இரு. என் ஊர் போகும் வரையில் நன்கு தூங்கு. அங்கு விழித்துக் கொள்.அமைதியாய் இரு'' என்று கட்டளையிட்டது போல் சொன்னார்.

இரண்டு பேரும் யானையை விட்டு இறங்கினார்கள்.

''இந்த யானையின் மீது யாரும் ஏறக்கூடாது. இந்த யானையில் ஒரு சிலை இருக்கிறது. அதை யாரும் தொடக் கூடாது. யானை உட்காராதல்லவா. மெல்ல அமண்குடி நோக்கி இந்த யானை போகட்டும்.''

''நிச்சயம். நிச்சயம் போகிறேன்.''

''சற்று இரு. ஒய்வு எடுத்துக் கொள். ஆனால் உறங்காதே. தயவுசெய்து உன் முதுகில் இருக்கின்ற மகாசக்தியை என் வீட்டுக்குக் கொண்டு போய் சேர். புரிகிறதா.''

அவர் உரக்க கூவினார். யானை பெரும் பிளிறல் பிளிறிற்று. அவ்வளவு பெரிய பிளிறல் அவன் கேட்டதில்லை. யானை நகர்ந்தது.

வேறு சில உத்தரவுகள் இட்டார். ஒரு வினாயகர் சிலை காட்டப்பட்டது. வெளிச்சத்தில் வெண்மையாகவும், இருட்டில் கருப்பாக மாறும் தன்மை கொண்டது என்று சொல்லப்பட்டது.

''இதையும் ஏற்றி அமண்குடிக்கு அனுப்பு.''

இன்னொரு சிவலிங்கம் தரப்பட்டது,

''நன்றாக இருக்கிறது. உதறுகிறது. இந்தச் சிவலிங்கத்தையும் அனுப்பு.'' என்று அனுப்பினார்.

''இந்தச் சூரியனைப் பாருங்கள். என்னஅழகிய சிரிப்பு. நன்றாக இருக்கிறது. இதையும் அமண்குடிக்கு அனுப்பு.''

ஒரு கோவிலுள்ள கல் கருவறை பீடம். கருவறை அலங்காரம் அவருக்குக் காணக் கிடைத்தது.

''நாம் பூசிக்கொள்ளலாம் இழுத்துக் கொண்டு போ'' என்று சொல்ல அவைகளும் யானைகளில் ஏற்றப்பட்டன. ஐந்து யானைகள் ஒன்றன் பின் ஒன்றாய் அமண்குடி நோக்கித் திரும்பின. அவைகள் வெற்றி பெற்ற யானைகள். அவைகள் மிகுந்த வரவேற்பு தரப்படப் போகின்ற யானைகள். அவைகள் நிதானமாக நடந்து போக, குதிரையில் ஏறி அமண்குடிக்கு முன்னால் விரைந்தார். தன் ஊரை அடைந்தார்.

குடந்தையைத் தாண்டி தன் ஊருக்குள் புகுந்து அங்குள்ளவர்களைப் பார்த்து, உடனடியாக கோவில் கட்ட வேண்டும். அதற்கு ஓர் இடம்

வேண்டும் என்று சொல்ல, குளக்கரைக்கு அருகே கொஞ்சம் மேட்டிட்ட இடத்தை காட்டினார்கள். அந்த மேட்டை இன்னும் மேடு செய்தார். ஆறு படி ஏறி உள்ளே போகும்படியாக அவர் மண்ணும், கல்லும் கொட்டினார். இடித்தார். தூண்களை நிறுவினார். சிலைகள் வருவதற்குள் அறை போன்ற ஒரு இடத்தையும் அதற்கு மேல் ஒரு விமானத்தையும் எழுப்பினார். சுத்தம் செய்தார். உள்புறச் சுவரைச் சுத்தம் செய்தார்.

விநாயகருக்கும், சிவனுக்கும், சூரியனுக்கும் எந்தெந்த இடங்கள் என்பதைக் குறிப்பிட்டார். அந்த இடத்தையும் சுத்தம் செய்தார். அங்கு கட்டிடம் வரும் என்றார். யானைகள் வந்து சேர்ந்தன. மிகப் பெரிய வாத்திய கோஷத்துடன் அவைகளில் இருந்த சிலைகள் இறக்கப்பட்டன. விக்ரஹத்தை எடுத்து அதன் நீண்டிருந்த கல்லை ஒரு மேடையில் சொருகினார். சாந்துகள் பூசப்பட்டன. சிற்பிகள் அழுத்தி வைத்தார்கள். அசையாது வைத்தார்கள். சிலையின் அழகை வியந்தார்கள். சுடுகிறதே சிலை என்றார்கள். வெப்பம் வருகிறது என்றார்கள். முகத்தை துடைத்துக் கொண்டார்கள். அவர்கள் எல்லோரும் வெளியே வர, கிருஷ்ணன் ராமன் கை கூப்பினார்.

''விழித்துக் கொள் தாயே விழித்துக் கொள். இப்பொழுது விழித்துக் கொள்.''

விளக்கு குப்பென்று பெரிதாயிற்று. பெரும் சுழல் நெருப்புச் சுழல் அங்கு இருந்தது. அறை முழுவதும் பரவியது. அறையிலிருந்து வெளியே வந்தது. பலர் பின்னடைந்தார்கள். கிருஷ்ணன் ராமன் கை கூப்பி அங்கேயே நின்றிருந்தார்.

''வந்தனம் தாயே. இனி நீ சோழ குலத்து அரசி. எங்கள் வீட்டுப் பெண்மணி. இங்கிருப்பவர்களுக்கு உதவி செய்கிறவள். இந்த தேசத்தை ஆட்சி செய்யப் போகிறவள். எங்களுக்கு அருள் செய்யப் போகிறவள். கோபம் தணிந்து அமைதியாக இங்கு இரு தாயே.''

அவர் கெஞ்சினார்.

தீபம் சாதாரணமாக ஆயிற்று. அவர் சிரித்தபடி வெளியே வந்தார்.

''அடேய்,'' என்றார்.

அவன் போய் அருகே நின்றான்.

''இது என்னுடைய ருத்ர பூமியடா. இது என்னுடைய ருத்ர பூமி. இனி அதிகம் பயணப்படப் போவதில்லை. இவளுக்கு அருகே இருக்கப் போகிறேன். அல்லது குடந்தையில் இருக்கப் போகிறேன்.

அவசியம் என்றால் கங்கை கொண்ட சோழபுரம் போய் வருவேன். இராஜேந்திரரிடம் எனக்கு விடுப்புக் கொடு, விடுதலை அளி என்று சொல்லிவிடப் போகிறேன். இந்த இடம் போதும்,.''

வினாயகர் சிலையும், சிவலிங்கமும், சூரியனார் சிலையும் தரையிறங்கின. இந்தக் கோவிலில் ஏற்கனவே இருந்த ஒரு சிவலிங்கம் மெல்ல எடுக்கப்பட்டது. மிக உயரமாக இருந்தது. அடிப்பாகம் பூமியில் புதைந்திருந்தது. நடுப்பாகம் ஆவுடையாரை மறைத்திருந்தது. மேல்பாகம் தெரிந்திருந்தது. ஆவுடையாரை எடுத்து ஓரமாக வைத்துவி;ட்டு சிவலிங்க பாணத்தை கோவிலில் சுற்றிவரும் பாதையில் வைத்தார்கள். வெறுமே நட்டார்கள்.

''அடேய்''

அவன் ஓடிவந்தான்.

இங்கே வாழப் போகிறேன். இவளோடு இருக்கப் போகிறேன். இவள் என்ன சொன்னாள், என்னோடு இருக்க வேண்டும் என்றாள். என்னோடு இடையறாது இருக்க வேண்டும் என்றாள். அவளை விட்டுப் பிரியக்கூடாது என்றாள். அப்பொழுதுதான் வருவேன் என்றாள். அவளை விட்டுப் பிரியமாட்டேன் என்று வாக்குக் கொடுத்திருக்கிறேன். ஒரு நாள் நான் செத்துப் போவேன். என்னை இவளுக்கு அருகே தகனம் செய்யுங்கள். ஆனால் நான் இங்குதான் இருப்பேன். இங்குதான் வாழ்வேன். சூட்சமமாக வாழ்வேன். என்னை நீ சந்திக்க நேரும்'' என்று சொன்னார்.

அவன் கை கூப்பினான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

''எதற்கு அழுகிறாய். எல்லோரும் ஒருநாள் மரணமடையப் போகிறார்கள். ஆனால் அந்த மரணத்திற்கு அப்பால் என்ன வாழ்வு என்பது ஒருவர் மரணத்தின் போதே தீர்மானித்துக் கொள்ள வேண்டும். மரணத்திற்கு முன்பே யோசிக்க வேண்டும். நான் சாக்த உபாசகன். நான் இதே போல ஒரு உபாசகியை வெட்டிக் கொன்றேன். எனவே, எனக்கு வாழ்நாள் நீடித்திருக்கிறது. இப்படிப்பட்ட வாழ்க்கை ஒன்று. சூட்சமமான வாழ்க்கை வேறொன்று. நான் அந்த வாழ்க்கையையும் நெடுநாள் வாழ்ந்து விட்டுதான் மேலுலகம் போக வேண்டும். ஏனென்றால் கீழே காலபைரவர் உபாசகியை கொன்றேன் அல்லவா. போர் செய்தேன் அல்லவா. வீரர்களை வெட்டிக் கொன்றேன்

அல்லவா. எனவே அந்தப் பாபத்திற்காக நான் சூட்சமமாக வாழ்ந்தாக வேண்டும். இது ருத்ர பூமி. நான் தகனம் அடையும் பூமி மட்டும் அல்ல. நான் தங்கி வாழும் பூமி. இவளோடு இருக்கின்ற பூமி. இவள் இங்கு இருக்கும் வரை நானும் இருப்பேன்.''

அவன் அவரையே கை கூப்பிப் பார்த்திருந்தான். அவன் கண்களிலிருந்து நீர் வழிந்தன.

''அடேய், என்னுடைய மகன் என்னோடு நெருக்கமாக இல்லை. அவன் எங்கோ விலகி வேறு வேலை செய்கிறான். வேறு பதவி வகிக்கிறான். எனக்குத் துணையாக நீதான் வருகிறாய். என்னைப் பற்றி உனக்குத்தான் அதிகம் தெரியும். ஸ்ரீனிவாசா, அடிக்கடி இங்கு வா. இது உன்னுடைய இடம். இவள் உன்னுடைய தேவி. நீ இவளோடு பயணப்பட்டிருக்கிறாய். இவள் உயர்ந்து வளர்ந்து நெருப்பாய் நின்றதைப் பார்த்திருக்கிறாய். இவளும் உன்மீது பிரியமாக இருந்திருக்கிறாள். நீ அன்று என்னைத் தாங்கிப் பிடிக்காவிட்டால் இவளை உடைத்திருப்பேன். இவளை நான் தாங்கியபோது ஏற்பட்ட சக்தியை நீயும் வாங்கிக் கொண்டாய். என்னைத் தடுத்து நிறுத்தினாய். அது மிகப் பெரிய விஷயம். என்னை நீ பயமின்றி தாங்கியது சத்தியம் உனக்குள்ளே இருக்கிறது என்ற அர்த்தம். எனவே, ஸ்ரீனிவாசா நீ இங்கு பிணைக்கப்பட்டிருக்கிறாய். நீ இங்கே இருக்கிறாய். ஞாபகம் வைத்துக் கொள்.''

''நானும் அமண்குடிக்கு வந்துவிடட்டுமா ஐயன்.''

''இல்லை. உன் ஊர் அமண்குடி அல்ல. உன் ஊர் வேறு இடம். உன் இருப்பிடத்திற்குப் போ. அடிக்கடி அமண்குடிக்கு வா. மழை பெய்யும் காலங்களில் இந்த இடத்திற்கு வா. மழை பெய்யும் காலத்தில்தானே இவளைப் பிடுங்கி வந்தோம். வடகிழக்குப் பருவமழை பலத்து ஐப்பசியில் அடைத்துப் பெய்யுமே அப்போது வந்து இவளைப் பார். அவள் குளுமையாக இருப்பாள்.அது உனக்கு நல்லது.''

அவன் சரி என்று தலையசைத்தான்.

''போ ஊருக்கு போ. தந்தையிடம் பேசு. நீ எங்கும் உத்யோகத்தில் அமர வேண்டாம். நீ எவரிடமும் கை கட்டிச் சேர வேண்டாம். வாழ்நாள் முழுவதும் நீ சந்தோஷமாக இருக்கின்ற காசை நான்

உனக்குத் தருகிறேன். என் சொத்தில் ஒரு பங்கு தருகிறேன். என்னிடம் இருக்கின்ற பொன் மூட்டையில் ஒரு பங்கு தருகிறேன். நீ தொடர்ந்து வேதம் படி. வைதீகனாய் இரு. காவியங்களைப் படி. அது உன் மனதைப் பெரிதுபடுத்தும். இராமாயணமும், மகாபாரதமும் மற்றவருக்குச் சொல்லும் வண்ணம் உபன்யாசம் செய். அரசியல் வேண்டாம். அரசு வேண்டாம். ஒருவேளை நான் இறந்து போனால், எனக்கு நீ நீத்தார் கடன் செய்ய உரிமையற்றவன் என்றாலும், நீ நீத்தார் கடன் செய்யும்போது ஏஷான்ன மாதா நபிதா நபந்துகு என்கிறபோது என்னை நினைத்துக் கொள். யார் எனக்குத் தகப்பனாக இல்லையோ, யார் எனக்கு பந்துவாக இல்லையோ என்ற வார்த்தையைச் சொல். நான் உனக்கு நேரிடையான தகப்பன் இல்லை. என்னுடைய மனைவி உனக்கு நேரிடையான தாய் இல்லை. இருந்தாலும் எங்கள் இரண்டு பேருக்கும் நீ நீர் வார்ப்பாயாக. எங்களை நினைத்துக் கட்டை விரல் வழியாக நீர் விடுவாயாக. வேறென்ன வேண்டும். இந்தா எடுத்துப் போ.''

ஒரு மரப்பெட்டியைக் கொடுத்தார். மரப்பெட்டி நிறைய உள்ளே தங்கக் காசுகள், உருண்டையான கழஞ்சுகள், வெள்ளிப் பாளங்கள். அவன் அவைகளை வாங்கி சிரசில் வைத்துக் கொண்டான் ''யாரங்கே? பிள்ளையை அவன் ஊரில் சேர்த்து விட்டு வா'' என்று சொல்ல, பெட்டி கை மாறியது.

அவர் வஸ்திரம் கொடுத்தார். அவர் பார்த்திருந்த ஜாதகப் புத்தகங்களைக் கொடுத்தார். ஜோதிட புத்தகங்களைக் கொடுத்தார். வால்மீகி இராமாயணமும், மகாபாரதமும் எழுதப்பட்ட ஓலைச்சுவடியைக் கொடுத்தார்.

அவன் நெஞ்சில் வைத்துக் கொண்டு கேவினான்.

''பெரிய பொக்கிஷம் கொடுத்துவிட்டீர்கள் சித்தப்பா'' என்று கேவினான்.

''உனக்கு தகுதியானதைக் கொடுத்திருக்கிறேன். அதனால்தான் உன்னை அரசியலுக்கு வரவேண்டாம் என்கிறேன். அரசாங்க உத்தியோகம் வேண்டாம் என்று சொல்கிறேன். வந்து கேட்பார்கள். மறுத்து விடு. நீ வாழ்வதற்கு இதைக் கொடுத்திருக்கிறேன். சிக்கனமாக வாழ்க்கை நடத்து'' என்று உத்தரவிட்டார்.

அவன் ஓலைச்சுவடிகளை தலையில் வைத்துக் கொண்டான். மெல்லப் பின்னடைந்தான். குனிந்து நிலம் தொட்டு அவரை வணங்கினான். பிறகு எழுந்தான். முன்னே மரப்பெட்டி போக, பின்னே ஓலைச்சுவடி தலையில் வைத்தபடி அவன் போக, அவனுக்குத் துணையாக இரண்டு வீரர்கள் போக, ஒரு மாட்டு வண்டி அவன் பின்னே நடக்க, அவன் ஊர் தாண்டும் வரை தலைச்சுமையாகவே தலைச்சுமையாகவே அந்த ஓலைச்சுவடியை எடுத்து வந்தான். ஊர் தாண்டியதும் ஓலைச்சுவடியும், மரப்பெட்டியும் மாட்டு வண்டியில் வைத்துவிட்டு பின்னே அமர்ந்து கொக்கி மாட்டிக் கொண்டான்.

வீரர்கள் குதிரை ஏறிக் கொண்டார்கள். மாட்டு வண்டியைச் சுற்றி வந்தார்கள். ஒரு தளபதி போர் முடிந்து திரும்பி வருவது போல அவன் மிகப் பெரிய சிரிப்புடன் தன் ஊர் நோக்கிப் போனான்.

''ஸாரி மன்னிச்சுக்கணும். இங்க யாருமே வரலையே ஒரு வேலையா போகலாமேன்னு போனேன். லேட்டாயிடுத்து. அரைமணி நேரத்துல முடிச்சுட்டுத் தர்ரேன்னான். ஒன்றரை மணி நேரம் பண்ணிட்டான். ரொம்ப நேரம் காக்க வைச்சுட்டேனோ, மன்னிச்சுக்கணும். நீங்க வர்ரதே அபூர்வம். வந்திருக்கேள் நான் காக்க வைச்சுட்டேன். மன்னிச்சுக்கணும்.''

அந்த இளைஞன் திரும்பத் திரும்ப கேட்டான். ஆனால் அவன் காதில் அது விழவேயில்லை. தன் சிற்றப்பன் பற்றியே எண்ணம் இருந்தது. அவரைப் பார்க்கும் ஆவல் அதிகரித்தது. கம்பிக் கதவுகள்திறக்கப்பட்டன. அவன் நடந்தான். உள்ளே போனான். வினாயகரை கும்பிட்டான். கொண்டு வந்த அருகம்புல் மாலையை சிவாச்சாரியார் வினாயகர் கழுத்தில் போட்டார். அருகம்புல் உருவி அவனிடம் கொடுத்தார். அதை காதில் சொருகிக் கொண்டான். கொஞ்சம் பையில் வைத்துக் கொண்டான். வலம் வந்தான். விழுந்து நமஸ்கரித்தான். பிறகு இறங்கி உள்ளே கோவிலுக்குள் போனான்.

முதலில் அவள் சன்னதி இருந்தது. அங்கு நின்று அவளைப் பார்த்தான். உஷ்ணம் முகத்தில் அடித்தது. யாரோ இறுக்கி முத்தமிடுவது போல் இருந்தது. ஒரு திணறல் ஏற்பட்டது. மூச்சு சரியாக வந்தாலும் ஜதி பிழன்றது. மெல்ல அருகே போய்

மண்டியிட்டுக் குனிந்து அவளைப் பார்த்தான். சௌக்கியமா என்று கேட்டான். அவளுக்கு ஒரு சிறிய இடத்தில் பின்னமாகி இருந்தது. அவளைத் தூக்கி ஓரமாக நட்டுவிட்டு வேறொரு துர்க்கையை வைத்திருக்கிறார்கள். ஆனால் அந்த வேறு ஒரு துர்க்கையை அதிகம் பார்க்காமல் இவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். இந்த துர்க்கை புதிய துர்க்கையை விட சிறியவள். ஆனால் ஆயிரம் வருஷத்து துர்க்கை. அதற்கு மேலும் இருக்க வேண்டும். பல பேரால் ஆராதிக்கப்பட்ட துர்க்கை. இன்று ஒருவேளை உணவு கிடைக்கிறது என்பதே அதிசயம். இந்த ஊர் மக்கள் நல்லவர்கள். இந்த ஊர் மக்கள் அவளைப் போற்றி வருகிறார்கள். இவளும் அடிக்கடி வந்து தொட்டுவிட்டுப் போகிறாள்.

அவளை மெல்ல விரல்களால் தொட்டான். நெற்றியில் வைத்துக் கொண்டான்.

''க ஏ இ ல ஹ ஹ்ரீம் க்லீம் அசகல ஹ்ரீம் சௌ சகல ஹ்ரீம்''

பஞ்சதசி சொல்ல ஆரம்பித்தான். வெகு நேரம் அங்கு உட்கார்ந்து பஞ்சதசி சொன்னான். கண்மூடிச் சொன்னான். மணி அடித்து கற்பூரம் காட்டியபோதும் எழுந்திருக்காமல் அவளைப் பார்த்தபடியே சொன்னான். உட்கார்ந்தபடியே கற்பூரம் எடுத்துக் கொண்டான். நெற்றியில் குங்குமம் தரித்துக் கொண்டான். திரும்பவும் அவளையே பார்த்தான்.

''அவளையே விடாது பார்க்கறேள் சார் நீங்க. உங்களை மாதிரிப் பார்க்கறவா எங்கேயும் இல்லை. ''

மூன்று அடி உயர கற்பூர ஆரத்தியை அவனுக்கு அருகே வைத்தார். கற்பூர ஆரத்தி பொக்கென்று மேலே எழுந்தது.

''என்னதிது ?''

அவர் கூவினார். அவன் சிரித்தான். கற்பூர ஆரத்தி மெல்லச் சுருங்கி தீபமாய் எரிந்தது. மெல்லக் கை நீட்டி கற்பூர ஆரத்தியை கண்ணில் ஒற்றிக் கொண்டான். எழுந்தான்.

வந்ததும் காட்டிவிட்டாய். அவ்வளவுதான்.

மெல்லச் சிவனாரையும், அம்பாளையும், சூரிய தேவனையும் நமஸ்கரித்தான். ஒரு இனம்புரியாத சந்தோஷத்தில், மயக்கத்தில் அந்த

கோவில் விட்டு வெளியே வந்து பிரதட்சணம் செய்யத் துவங்கினான். மெல்ல கோவிலின் இடப்பக்கம் நடந்தான். உயரத்தில் இராஜராஜ சோழரும், பிரம்மராயரும் இருக்கின்ற சிலையைப் பார்த்து ஏறி தடவி கண்ணில் ஒற்றிக் கொண்டான். எங்கள் மூதாதையர்கள் என்று கொண்டாடினான். மெல்ல இறங்கி சுற்றி வந்தான். பின்புறம் சிறிது நேரம் நின்றான்.

இந்த இடத்தில் பந்தல் போட்டு ஹோமங்கள் செய்திருப்பார்கள். யாகங்கள் செய்திருப்பார்கள் என்று அந்த யாக பூமியை வணங்கினான். பிறகு மறுபடியும் கோவிலின் இடப்புறம் போகத் துவங்கினான். அங்கு முன்னே இருந்த சிவலிங்கம் நடப்பட்டிருந்தது. மெல்ல அதை நோக்கி நகர்ந்தான். மனம் அதன் மீது இருந்தது.

சட்டென்று யாரோ எழுந்து நின்றார்கள். சிவலிங்கத்திற்குக் கீழேயிருந்து யாரோ எழுந்து நின்றார்கள். உயரமாய், கட்டுக் குடுமியாய், காதில் கடுக்கனோடு, கழுத்தில் தங்கச் சங்கிலியோடு, ருத்ராட்ச மாலையோடு, நெற்றியில் விபூதியோடு, இடுப்பில் வெள்ளை வேட்டியோடு, அதன் மீது கட்டிய துண்டோடு, கையில் ஓலைச்சுவடிகளோடு எழுந்து நின்றார்கள். அவன் வாய்விட்டு அலறினான். கை கூப்பினான்.

''சித்தப்பா'' என்று கதறினான்.

''என்ன'' என்று சொல்லிக் கொண்டு அவனை அலட்சியமாய் பார்த்து சுவற்றை நோக்கி நகர்ந்தார். மெல்ல அவனை திரும்பிப் பார்த்தார். சுவருக்குள் நுழைந்தார். மறைந்தார்.

அவனுக்கு உடம்பு உதறிப் போட்டது. வியர்த்துக் கொட்டியது. கை, கால்கள் நடுங்கின. மூச்சுத் திணறியது. நெஞ்சு அழுந்தியது. தலை பொட்டில் யாரோ அழுத்தியது போல் இருந்தது. மெல்ல நடந்தான். எங்கு அவர் நின்றாரோ அங்கு நெடுஞ்சாண்கிடையாக விழுந்தான். இறுக்க அந்தத் தரையை பற்றிக் கொண்டான். விம்மி விம்மி அழுதான்.

''அப்பா அப்பா அப்பா...'' என்று கதறினான். மண்டியிட்டுக் கூப்பினான்.

''எனக்கு ஏதாவது உத்தரவு கொடுங்கோ எனக்கு ஏதாவது உத்தரவு கொடுங்கோ'' என்று கெஞ்சினான்.

''எழுதடா எழுது'' சுவர் சத்தம் போட்டது.

எழுந்து நின்று கை கூப்பினான். நகர்ந்தான். வலம் வந்தான். கோவிலை விட்டு வெளியே வந்து காரில் ஏறிக் கொண்டான்.

''என்ன, நம்ம ஊரு அமண்குடிக்கு வந்துட்டு உடனே போறீங்க. இருந்துட்டு போலாமில்ல.''

''மூணு மணி நேரம் இருந்தேன். யாரு என்னன்னு கேட்கலை. கிளம்பறபோது இருந்துட்டு போகலாமில்லங்கறேள்''

''என்னத்தை செய்ய போங்க. ஆளாளுக்கு ஒவ்வொரு வேலை அலையறோம். உங்களை மாதிரி பெரியவா வரதால இந்த கோவில் நல்லாயிருக்கு. கும்பாபிஷேகம் செய்யணுமய்யா. உங்க உதவி வேணும்.''

அவன் சரி என்று தலையசைத்தான். திரும்பி அமண்குடி கோவிலைப் பார்த்தான். கோவில் பழுதடைந்திருப்பது தெரிந்தது.

''உன்னை நீ கவனித்துக் கொள்வாய். உன்னைச் சுற்றி ஆட்கள் பலபேர் வருவார்கள். நீ உயிர்ப்புள்ள விஷயம். உன்னைக் கவனிக்க நான் எதற்கு. என் சிற்றப்பன் இருக்கிறான் அங்கே. உயிரோடு இருக்கிறான். உலவிக் கொண்டிருக்கிறான். உட்கார்ந்துக் கொண்டிருக்கிறான். படித்துக் கொண்டிருக்கிறான். பேசுகிறான். ஆடுகிறான். சுவருக்குள் போகிறான். வெளியே வருகிறான். என் சிற்றப்பன் அங்கிருக்க எனக்கென்ன வேலை. நான் கை கட்டி உன்னைத் தொலைவிலிருந்து பார்க்கிறேன். அது போதும். என் சிற்றப்பன் ஒன்று சொன்னான். எழுதடா எழுது. தாயே மகிஷாசுரமர்த்தினி நான் எழுதுவேனடி, நான் எழுதுவேன். ''

எதனாலோ அவன் அழுதான்.

முற்றும்

Owner, Publisher and Printer G. Asokan Published at 352, Triplicane High Road, Triplicane, Chennai - 600 005. Printed at Geeye Publications (PRINTERS) 352, Triplicane High Road, Triplicane, Chennai - 600 005. Editor: G.Asokan